அறைவு 03 இயம் 35 March 14-20, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

aat @ VBC
0770203201




## சம்பூரில்

# பல்லாயிரம் பேருடன் புதிய குடியேற்றம்

சம்பூர் அனல் மின் நிலையம் அமைப்பது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றுச் சூழல் ஆய்வறிக்கையில் திருகோணமலையில் புதிய குடியேற்றமொன்று நிறுவப்படுவதற்கான விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

அனல் மின்நிலையத்திற்கான பாதுகாப்பு அலுவலர்களை அமர்த்துவதற்கான குடியேற்றமாக இக் குடியேற்றம் நடைபெறும் என அறிக்கை தெரிவிக்கின்றது.

ஆரம்பக்கட்டத் தகவல்களின் படி சுமார் பத்தாயிரம் ஆட்களை அமர்த்துவதற்காக 17

## தமிழர் தாயகம் எங்கும் கவனஈர்ப்புப் பேரணி

தமிழர் தாயகமான வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஒரே நாளில் கவன ஈர்ப்புப் பேரணியொன்றை நடாத்தவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் பிரதான வேண்டுகோளை உலகிற்குத் தெரியப்படுத்தும் முகமாக இக்கவனயீர்ப்புப் பேரணி நடைபெறவுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் சனாதிபதியால் உருவாக்கப்பட்ட 17

## ஐக்கிய நாடுகள் சபையில் ஒலித்தது "காணாமல் ஆக்கப்பட்டோரின் குரல்"



காணாமல் ஆக்கப்பட்ட தமிழர் உறவுகளின் குரல் ஐக்கிய நாடுகள் சபையின் உபகுழுவில் ஓங்கியொலித்துள்ளது.

அண்மையில் காணாமல் போனோரைக் கண்டறிவதற்கான சனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் திருகோணமலையின் குச்சவெளிப் மற்றும் பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலகங்களில் நடைபெற்றிருந்தன.

எனினும் இந்த ஆணைக் குழுவின் அமர்வுகளுக்கு சமூகம் அளிப்பதில்லை என பெரும்பாலான தமிழர் உறவுகள் தீர்மானித்ததோடு ஆணைக்குழு வருகை தரும் இடங்களில் தமது எதிர்ப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருந்தன.


அவ்வெதிர்ப்பு 17

## பிராந்திய எரிபொருள் கேந்திர நிலையமாக திருகோணமலை - மோடி

திருகோணமலையை ஆசியப் பிராந்தியத்தின் எரிபொருள் கேந்திர நிலையமாக மாற்ற இந்தியா துணைபுரியும் என இந்தியப் பிரதமர் மோடி தனது உரையில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நாடாளு மன்றத்தில் உரையாற்றிய போதே இந்தியப் பிரதமர் இந்த விடயத்தை வெளிப்படுத்தினார்.

திருகோணமலை, சீனன்குடாவில் உள்ள நிலத்தடி குதங்கள் சிலவற்றை இயக்கி வரும் இந்திய எண்ணைக் கம்பனியுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் இணைந்து பெற்றோலிய குதப் 17




### எதிர்ப்புத் தீர்மானத்தில் பட்டணமும் சூழலும் பிரதேசசபை??

சம்பூரில் உருவாகவுள்ள அனல்மின் நிலையத்தை அமைக்க வேண்டாம் என்று தடுத்து நிறுத்தும் தீர்மானமொன்றை திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசசபையில் நிறைவேற்றும் முயற்சிகள் நடைபெறவுள்ளதாகத் 17

### பசுமை இயக்கம் திருமலையில் ஆரம்பம்

கடும் அழிவுகளை திருகோணமலை ι திற்கும் தமிழர் தாயகப் பகு; ஏற்படுத்தவல்ல அனல் மின்நிலையப் ப நிறுத்தும் முயற்சிக்காக அமைப்ட திருகோணமலையில் உதயமாகியுள்ளது. இவ்வமைப்பிற்குப் "பசுமை இயக்‹ திருகோமணமலை" எனப் பெய பட்டுள்ளதாகவும் திருகோணமை பசுமையைப் பாதுகாப்பதற்கான ‹ செயற்பாடுகளையும் முன்னெடுக்கவுள் 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# அனல் மின்நிலையமும் அமைதியும்!

2006ம் ஆண்டின் இறுதிக்காலப்பகுதியில் திருகோணமலை மாவடடத்தின் சம்பூர் பகுதியில் சுமார் 600 ஏக்கர் விளைநிலங்களை உள்ளடக்கியதாக அனல் மின்நிலையமொன்றை அமைக்கும் பணிகளுக்கான கருதுகோள் நடைமுறைக்கு வந்தது.

அதன்பின்னர் கடந்த எட்டு வருடங்களாக அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுவரும் நிலையில் அவ்வனல் மின்நிலையத்தின் சுற்றுச் சுழல் தாக்க அறிக்கை வெளியானதை அடுத்து திருகோணமலை மாவட்டத்தின் அனைத்துத் தரப்பினரும் அதிர்ச்சியடைக் கூடியதான தகவல்கள் அவ்வனல் மின்நிலையம் தொடர்பாக வெளியாகின.

நிலக்கரி எரிவதால் வெளியேறும் காபனீரொட்சைட்டு(CO2), சல்பர் ஈரொட்சைட்டு (SO2), நைதரசனீரொட்சைட்டு (NO2) மற்றும் ஐதரசன் சயனைட் (HCN) போன்ற வாயுக்கள் பெருமளவில் வெளியேறும். இவை வளிமண்டலத்தில் தாக்கமடைவதனூடாக சிறு துணிக்கைகளை உருவாக்கி நில மட்ட ஓசோன் படையொன்றை உருவாக்கும். இவ் ஓசோன் படை நீண்ட தூரத்திற்கு காற்றினால் காவப்பட்டு மழைப் பொழிவின் போது அமில மழையாக பூமியை வந்தடையும் என திருகொணமலை மாவட்ட பசுமை இயக்கத்தின் முதல் அறிக்கை தெரிவித்துள்ளது.

அத்துடன் நீர்நிலைகள் மாசடைதல், சமூகப் பொருளாதாரப் பாதிப்புகள் சுகாதாரப் பாதிப்புகள் என அந்த முதல் அறிக்கை சுட்டும் விடயங்கள் ஒட்டுமொத்தத் திருகோணமலை மாவட்டத்தை மட்டுமல்லாது பல நூறுமைல் தூரத்திற்கு கடும் விளைவுகளை சில ஆண்டுகளின் பின் ஏற்டுத்த வல்ல அழிவு அபிவிருத்தியாக இந்நிலையம் அமையப் போவது எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதனையடுத்து சில நடவடிக்கைகளைப் பசுமை இயக்கத்தினர் ஆரம்பித்துள்ள நிலையில் பெரும்பாலான திருகோணமலை மாவட்ட மக்கள் இவ்விடயம் சார்பாக மௌனம் காப்பதாகவே தெரிகின்றது.

எதிர்கால சந்ததியை இன வேறுபாடுகளின்றிப் பாதிக்கப்போகும் இந்த அபிவிருத்தியை நாம் எல்லோரும் ஒட்டுமொத்தமாக எதிர்க்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள அதேவேளை இவ்வெதிர்ப்பினை பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ள வேண்டியது எமது தலையாய கடமையாக உள்ளது.

எதிர்ப்புக்களில் ஈடுபட்டால் சம்பூர் மக்களின் மீள்குடியேற்றம் தாமதமாகக்கப்படலாம் என்று யாரும் எண்ண முயற்சிக்கலாம். ஆனால் திருகோணமலை மாவட்டத்திலேயே மக்கள் வாழ முடியாத நிலையை ஏற்படுத்தும் இம் மின்நிலையம் அண்மையில் வசிக்கப்போகும் சம்பூர் மக்களை எந்தளவிற்கு மோசமாகப் பாதிக்கப்போகின்றது என்பதை அவ்வாறு சிந்திப்பவர்கள் தமது எண்ணத்தில் கொள்ள வேண்டும்.

அத்துடன் அனல் மின்நிலையத்தை அமைக்குப் பணிகளை இடைநிறுத்தினால் சம்பூர் மக்கள் தமது அனைத்து நிலங்களையும மீளப் பெற்றுக்கொள்ள வழி பிறந்துவிடும். மீள்குடியேற்றமும் நடந்துவிடும்.

ஒன்றை எதிர்ப்பதன் ஊடாக மற்றொன்றைப் பெற்றுக்கொள்ளும் தந்திரோபாயத்தில் மக்கள் ஒன்றிணைய வேண்டும். எங்களின் மௌனம் இன்னுமொரு நிரந்தர அழிவிற்கு வழிசமைக்கக்கூடாது.

## அனல் மின் நிலையத்திற்கு மூதூர் மக்கள் எதிர்ப்பு

மூதூர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சம்பூர் பகுதியில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள அனல் மின் நிலையத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கையெழுத்திடுவதில் பொதுமக்களும் முக்கியஸ்தர்களும் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

மூதூர் மக்கள் அபிவிருத்தி ஒன்றியம் மற்றும் திட்டமிடலுக்கும் அபிவிருத்திக்குமான மூதூர் சபை ஆகியன இணைந்து தயாரித்த ஆட்சேபனை பத்திரத்திலும் மூதூர் பீஸ் ஹோம் அமைப்பு தயாரித்த மூதூர் முக்கியஸ்தர்களின் எதிர்ப்புப் பத்திரத்திலும் கையெழுத்திடுவிதிலேயே பொது மக்களும் முக்கியஸ்தர்களும் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

சம்பூர் அனல் மின்சார நிலையம் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் மக்கள் அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளும் வகையில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு மதிப்பீட்டு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே அனல் மின்சார திட்டத்திற்கு மக்கள் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

## இலங்கை வங்கி ஏற்பாட்டில் மகளிர் தினம்




இலங்கை வங்கியின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

உப்புவெளி சுகாதாரப் பணிமனையின் ஆதரவுடன் கடந்த 10ம் திகதி நடைபெற்ற இந்நிகழ்வுகளை இலங்கை வங்கியின் உப்புவெளிக் கிளையினர் ஒழுங்குபடுத்தியிருந்தனர்.

செல்வநாயகபுரம் முன்நிலை மருத்துவப் பிரிவின் மருத்துவர் திருமதி ம.வாசுகி பிரதம விருந்தினராகவும் உப்புவெளி பிரதேசசபைச் செயலாளர் அ.மாலினி விசேட விருந்தினராகவும் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் கிழக்குப் பிராந்திய இயக்கு முகாமையாளர் சிறில் பண்டார மதிப்பளி விருந்தினராகவும் கலந்திருந்தனர்.

டெங்கு மற்றும் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகளை வைத்தியர்கள் திருமதி இந்திரமதி மற்றும் செல்வரமணி ஆகியோர் நிகழ்த்தினர். இந்நிகழ்வில் மகளிர் கணக்குகளைப் புதிதாக ஆரம்பித்த பெண்களுக்கு இலங்கை வங்கியின் உப்புவெளிக் கிளை பரிசில்களை வழங்கியிருந்தது.

## கட்டிட நிர்மாணிகள் சங்கக் கூட்டம்



திருகோணமலை மாவட்ட கட்டிட நிரமாணிகள் சங்கத்தினரின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு ஜேகப் பாக் ஹோட்டலில் 10.03.2015 செவ்வாய்கிழமை இடம் பெற்றது. இந்நிகழ்கு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஏ.புஸ்பகுமார மற்றும் கட்டிடங்கள் திணைக்கள பணிப்பாளர் எந்திரி வேல்மாணிக்கம் மற்றும் கல்வித் திணைக்கள எந்திரி பேராசிரியன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டதுடன் ஏனைய திணைக்களங்களின் எந்திரிகள் தொழினுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அச்சுதன்).

## அமைச்சர் ஹசன் அலி திருமலைக்கு வருகை

அரசாங்கத்தின் 100 நாள் வேலைத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக திருகோணமலை மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளின் குறைகளைக் கண்டறியும் நோக்கத்துடன் கடந்த செவ்வாய்கிழமை முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் சுகாதார இராஜாங்க அமைச்சருமான எம்.ரி.எம். ஹஸன் அலி திருகோணமலை மாவட்டத்திற்கான வருகையொன்றை மேற்கொண்டிருந்தார்.

இவர் தோப்பூர்,கிளிவெட்டி, மூதூர், கிண்ணியா, திருகோணமலை, நிலாவெளி, குச்சவெளி, புல்மோட்டை ஆகிய வைத்தியசாலைகளுக்கு சென்று வைத்தியசாலைகளின் குறைபாடுகளைக் கேட்டறிந்ததோடு வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலை நலன் புரிச்சங்கத் தினரையும் சந்தித்தார். (அச்சுதன்)



## ஓய்வூதியர் சங்கக் கூட்டம்- இன்று

திருகோணமலை மாவட்ட ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 156A, கிறின் வீதியில் அமைந்துள்ள ஓய்வூதியம் பெறுவோர் சங்க மண்டபத்தில் இன்று காலை 10.00 மணிக்கு சங்கத்தின் தலைவர் திரு.கோ.கயிலாயநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது

கூட்டத்தில் இறையடி சேர்ந்த எமது அங்கத்தவர்களது ஆத்மசாந்தி வேண்டி மௌனப் பிரார்த்தனை, புதிய (நடப்பு வருட) செயற்குழு - தெரிவு. போன்றவை நிகழும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய முன்மொழிவுகள் / பிரேரணைகள் தெரிவிக்கப்பட இருப்பின் 07.03.2015 முன்னர் கிடைக்கக் கூடியவாறு அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் எனவும் பொதுக்கூட்டம் நடைபெறும் தினத்தன்று வருகை தரும் அங்கத்தவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது எனவும் செலுத்தப்பட வேண்டிய சந்தா / மரண நன்கொடைப்பணம் நிலுவையில் இருந்தால் பொதுக் கூட்டத்திற்கு முன்பாக செலுத்தி ... யத்தில் ... ஆதரவும் வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புச் செய்திகள்

## இடைவிலகல் இளவயது திருமணத்திற்கு வழிகோலும்

பாடசாலைகளில் மாணவர்களின் இடைவிலகல் சமூகத்தில் இளவயது திருமணத்தை ஊக்குவிப்பதாக வேள்ட்விஷன் நிறுவனத்தின் கிரான் பிரதேச முகாமையாளர் திருமதி.ஹிந்து ரொஹாஸ் தெரிவித்தார். தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் வேள்ட்விஷன் நிறுவனமும் இணைந்து நடத்திய மாற்றத்துக்கான கற்றலுடனான சமூக அபிவிருத்தி இளைஞர் கழக வலுவூட்டல் மூன்று நாள் வதிவிட செயலமர்வு, சத்துருக்கொண்டான் சர்வோதயம் மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேச செயலகப்பிரிவுகளில் ஒன்றான கிரான் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள இளைஞர், யுவதிகள் 42 பேர் கலந்துகொண்டனர். சமூகத்தில் சிறந்த தலைமைத்துவத்தையும் வழிகாட்டிகளையும் உருவாக்கும் நோக்கில் இந்த செயலமர்வு நடத்தப்படுகின்றது.

## பெண்களுக்கான சிறந்த நாடு

பெண்களுக்கான சிறந்த நாடு எனும் கருப்பொருளில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கண்டித்து விழிப்புணர்வு ஊர்வலம் மட்டக்களப்பு நகரில் நேற்று வெள்ளிக்கிழமை (13.02.2015) நடைபெற்றது. வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களமும் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் வாழ்வின் எழுச்சி சமூக அபிவிருத்தி மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்த ஊர்வலம், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.தவராஜா தலைமையில் நடைபெற்றது. பிரதேச செயலகப் பிரிவின் 48 கிராம சேவகர் பிரிவுகளிலுமுள்ள சமுர்த்தி சங்கங்களின் அங்கத்தவர்கள் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். ஊர்வலத்தின் முடிவில் செயலக வளாகத்தில் சூரியா பெண்கள் அமைப்பினால் ஒளியை நோக்கி எனும் தலைப்பில் வீதி நாடகமும் இடம்பெற்றது.



## புலம்பெயர் தமிழர்கள் திரும்ப வரவேண்டாம்



வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு திரும்பி வந்த பத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இத்தமிழர்களில் அதிகமானோர் கடந்த கால யுத்தம் காரணமாக இலங்கையை விட்டு போனவர்கள். அத்துடன் இலங்கையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கம் அவர்களை நாட்டுக்கு திரும்பி வருமாறு அழைப்பு விடுத்ததின் பேரிலேயே அவர்கள் நாட்டுக்கு திரும்பினர்.

ஆனால் இலங்கைக்கு அவர்கள் புதிய அரசாங்கத்தின் நம்பிக்கையின் பேரில் திரும்பி வந்த போதிலும், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து வரவேற்ற விதம் அவர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. ஆகவே இலங்கைக்கு திரும்ப வேண்டாமென புலம்பெயர் தமிழர்களுக்கு நான் ஆலோசனை வழங்கவிரும்புகிறேன் என தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

## பணிப் பகிஸ்கரிப்பு

மட்டக்களப்பு நகரில் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஊழியர்கள் 12.03.2015 காலை முதல் பணி பகிஸ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். மட்டக்களப்பு நகரில் உள்ள அலுவலகம் மற்றும் கடைத்தொகுதிகளை பூட்டி இந்த பணி பகிஸ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். 11.03.2015 அன்று பிற்பகல் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் கட்டிட தொகுதிக்குள் நுழைந்த அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் தலைவர் ஒருவர் அங்கு கடமையில் இருந்த முகாமையாளரை தகாத வார்த்தைகளினால் திட்டியதுடன் ஊழியர்களையும் திட்டியதாகவும் இதற்கு சரியான முறையில் விசாரணை நடாத்த வேண்டும் எனக் கோரியே ஊழியர்கள் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர்.

## கிழக்கு மாகாணக் கல்வியில் மறுமலர்ச்சி ஏற்படுமா?



பல்வேறு நெருக்கடிகளுக்கும், முறையற்ற தன்மைகளுக்கும் முகம்கொடுத்திருந்த கிழக்கு மாகாணத்தின் கல்விமுறைமை கிழக்கு மாகாணத்தின் கல்வி அமைச்சராக திரு.சி.தண்டாயுதபாணி பொறுப்பேற்ற பின்னர் புதிய மறுமலர்ச்சி பெறும் என்று கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிஷாம் தலைமையில் கடந்த 11.03.2015அன்று மாகாணக் கல்வித் திணைக்களத்தில் நடைபெற்ற ஒன்றுகூடலில் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மாகாணத்தின் அதிபர்கள், ஆசிரியர்களின் இடமாற்றங்கள், புதிய நியமனங்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இதுவரைகாலமும் ஏற்பட்டிருந்த இடர்ப்பாடுகள், மாணவர்களின் கல்வி தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. கிழக்கு மாகாணக் கல்வியில் இதுவரைகாலமும் ஏற்பட்டிருந்த அசாதாரண நிலைமைகள் குறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் தமது ஆதங்கங்களை வெளியிட்டபோது அதற்குப் பதிலளித்த மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிஷாம் கிழக்கு மாகாணக் கல்வித்துறையில் நீண்டகால அனுபவமும், திறமையும் உள்ள திரு.சி.தண்டாயுதபாணி தற்போது கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சராக பதவியேற்றுள்ளார். அவருடைய காலத்தில் கிழக்கு மாகாணத்திற்கான நிரந்தரமானதும், தரமானதுமான கல்விக் கொள்கையொன்று வகுக்கப்பட வேண்டும். அதுவே கிழக்கு மாகாணத்தின் எழுச்சிக்கான அத்திவாரமாக அமையும் என்றும் தெரிவித்தார்.

அதற்குக் கருத்துத் தெரிவித்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா.புவனேஸ்வரன் அரசியல் தலையீடுகள் கல்வியில் இருக்கவேகூடாது, ஆசிரிய தொழிற்சங்கங்கள் தனியே ஆசிரிய இடமாற்றங்களுக்கு மட்டும் உருவாக்கப்பட்டவை அல்ல மாறாக கல்விச் சமூகத்தின் திறவுகோல்களாக உள்ள ஆசிரியர்களது பல்வேறு நலன்களில் அக்கறை காட்டி தரமான கல்விப்பாரம்பரியத்தை உருவாக்க ஒத்தாசையாக இருக்கவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

## மட்டக்களப்பில் புதிய ஊடக அமைப்பு உருவாக்கம்

*- வி.பத்மசிறி -*

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மற்றும் பௌத்த சமயங்களைப் பின்பற்றும் தமிழ், சிங்கள மொழி மூல ஊடகவியலாளர்களை ஒருங்கிணைத்துச் செயற்படும் வகையில் "கிழக்கு ஊடக சங்கம்" எனும் பெயரில் புதிய ஊடக அமைப்பொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச்சங்கத்தில் அங்கத்தவராக இணைந்து செயற்பட விரும்புவோர், "பொதுச்செயலாளர், கிழக்கு ஊடக சங்கம், செல்வாநகர் கிழக்கு, ஆரையம்பதி-02" எனும் தபால் முகவரியுடனோ, அல்லது shirreibatti@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியுடனோ தொடர்பு கொண்டு அங்கத்தவர் விண்ணப்பப்படிவம் மற்றும் சங்கத்தின் உபவிதிகள் அடங்கிய யாப்புக் கோவை என்பவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

இச்சங்கத்தின் தலைவராக புவி.எம்.ஐ.றஹ்மதுல்லாஹ், உப தலைவராக ஏ.கங்காதரன் பொதுச் செயலாளராக வி.பத்மசிறி, உப செயலாளராக ஜெ.காமிலா பேகம், பொருளாளராக எஸ். சச்சிதானந்தகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, நிர்வாக சபை உறுப்பினர் களாக ஏ.ஜீ.எம். பளீல், திருமதி பஹ்மியா ஷெரீப், எம்.பி.எம். பைரூஸ், லோ.தினேஷ்ராஜ், பே.சபேஷ், த.இன்பராசா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## காணி குறித்து நடமாடும் சேவை

கிழக்கு மாகாண காணி நிர்வாகத் திணைக்களத்தினால் நடமாடும் சேவை கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு அரசாங்க அதிபர் பி.எஸ்.எம்.சார்ள்சின் வேண்டுகோளுக்கு இணங்க மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் அரச காணிகளில் தீர்க்கப்படாதுள்ள பிரச்சினைகளை ஆராய்வதற்காக இந்த சேவை நடத்தப்பட்டதாக கிழக்கு மாகாண காணி ஆணையாளர் சிறிமேவன் தர்மசேன தெரிவித்தார்.



## நாய்களுக்கு சத்திரசிகிச்சை

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுதாவளை பிரதேசத்திலுள்ள நாய்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சை, களுதாவளை பொதுக் கட்டடத்தில் கடந்த வியாழக்கிழமை மேற்கொள்ளப் பட்டது. 57 நாய்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகின்றது.

## குவைத்தில் இறந்த யுவதியின் இறுதிச்சடங்கு



குவைத் நாட்டில் உயிரிழந்த மட்டக்களப்பைச் சேர்ந்த யுவதியின் சடலத்தை நேற்று வெள்ளிக்கிழமை (13.03.2015) சத்துருக் கொண்டானில் நல்லடக்கம் செய்யப்பட்டது. மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் மூன்றாம் குறுக்குத்தெருவில் வசித்து வந்த சோமசுந்தரம் சர்நீதியா (வயது-22) எனும் யுவதியே குவைத் உயிரிழந்தவர் என தெரிவிக்கப்படுகின்றது. இவரைப் பற்றி கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக தகவல் எதுவுமில்லாததால் இந்த யுவதியின் குடும்ப உறவினர்கள் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். இதனையடுத்தே யுவதி 01.03.2015 அன்று உயிரிழந்தமை தெரிய வந்ததாக அவர்கள் குறிப்பிட்டனர்.

குறித்த யுவதிக்கு நான்கு வயதுடைய குழந்தை உண்டு எனவும் இவரது கணவர் மரணித்து விட்டதாகவும் உறவினர்கள் மேலும் தெரிவித்தனர்.

## "அரசியலில் இருந்து ஒதுங்குவேன்"

"ஊழல் மோசடிகளில் நான் ஈடுபட்டுள்ளதாக நிரூபிக்கப் பட்டால், அரசியலிலிருந்து நான் ஒதுங்கிக்கொள்வேன்" இவ்வாறு முன்னாள் பிரதியமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார். இவருக்கு எதிராக இலஞ்சம் ஊழல் மோசடிகளை விசாரிக்கும் ஆணைக்குழுவிடம் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கடந்த புதன்கிழமை முறைப்பாட்டை முன்வைத்தது. இது தொடர்பில் இவரைக் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


எனது 25 வருட அரசியல் பயணம் எப்படிப்பட்டது என்பதை நிரூபிப்பதற்கு இவர்கள் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்துள்ளார்கள் என கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு MALAIMURASU
தேசிய செய்திகள்

# "அகசுயநிர்ணய உரிமையைப் பெற்றுத்தர வேண்டும் மோடி"



சுயநிர்ணய உரிமையினை பெற்றுக் கொடுக்க இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் பயணம் வழிசமைக்கவேண்டும் என இந்திய பிரதமரின் இலங்கை வருகை தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி.வண. இராயப்பு ஜோசப் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக ஆயர் மேலும் தெரிவிக்கையில், இந்திய பிரதமரின் இலங்கைக்கான வருகையினை நாம் வரவேற்கும் அதேவேளை இலங்கையின் பூர்வீகக் குடிகளான தமிழ் மக்கள் இரண்டாந்தர பிரஜைகளாகவும், மற்றவர்களில் தங்கி வாழ்பவர்களாகவும் வாழும் நிலையிலிருந்து தமிழர்கள் விடுபடுவதற்கு தமிழர்களுக்கான அக சுயநிர்ணய உரிமையினை இந்திய பிரதமர் பெற்றுக் கொடுக்க இந்தப் பயணம் வழிசமைக்க வேண்டும்.

இலங்கையில் தமிழர்கள் விடயத்தில் இந்தியாவின் பங்கு இன்றியமையாத ஒன்றாகும். அந்தவகையில் இந்திய பிரதமரின் வருகையினை நாங்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்.

அதேசமயம் நீண்ட பூர்வீகத்தைக் கொண்ட தமிழ் மக்கள் இந்த நாட்டில் இரண்டாந்தர பிரஜைகளாக வாழ்கின்றார்கள். இந்நிலையில் இது அவலமான நிலையாகும்.

இதனை இந்திய பிரதமர் இலங்கை வருகையின் போது நேரில் பார்வையிட்டு உண்மையின் அடிப்படையிலும், நீதியின் அடிப்படையிலும் தமிழ் மக்களுக்கான தீர்வினை வழங்கவேண்டும் என்று தெரிவித.துள்ளார்.

# என்னைக் கைதுசெய்ய அரசியல்வாதிகளால் முடியாது"



கைது செய்தல் தொடர்பில் அரசியல்வாதிகள் தீர்மானிக்க முடியாது என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகள் கூடும் தேசிய நிறைவேற்று பேரவையினால் கைது செய்தல்கள் குறித்து தீர்மானிக்கக் கூடிய அதிகாரம் கிடையாது என சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த பிரத்தியேக நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

என்னைக் கைது செய்வது குறித்து நிறைவேற்றுப் பேரவையில் பேசப்பட்டமையானது சட்ட மா அதிபர் திணைக்களம் மற்றும் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது என அவர் தெரிவித்தள்ளார்.

இதேவேளை ரணில் விக்ரமசிங்க கோத்தாபாயவைக் கைதுசெய்வதை தடுப்பதாக இணையத்தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வேட்பாளருக்கு இருக்க வேண்டிய 8 வரைமுறைகள்

சில நாடாளுமன்றம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களுக்கு அரசியல் கட்சிகள் வேட்புமனுக்களை வழங்கும் போது பின்பற்ற வேண்டிய 8 வரைமுறைகளை பெப்ரல் மற்றும் பிரஜைகள் ஆகிய அமைப்புகள் இணைந்து வெளியிட்டுள்ளன.

1 – குற்றம் ஒன்றுக்காக சிறைக்கு சென்றவர் அல்லது ஒத்திவைக்கப்பட்ட சிறை தண்டனை விதிக்கப்பட்டவராக இருக்கக் கூடாது.

2 -இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான குற்றவாளியாக இருக்கக் கூடாது என்பதுடன் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நபராக இருக்க வேண்டும். அத்துடன் இலஞ்சம் மற்றும் ஊழல் சம்பந்தமாக குற்றம் சுமத்தப்பட்டவர்கள் குறித்து கவனமாக இருக்க வேண்டும்.

3 – மதுபானம், போதைப் பொருள், சூதாட்டம், கசினோ, பாலியல் தொழில் நிலையம் உட்பட நாட்டுக்கு கேடுவிளைவிக்கும் தொழிலை செய்யாதவராகவும் கடந்த காலத்தில் அந்த தொழில்களை செய்தவராராகவும் இருக்கக் கூடாது.

4- உயிர் வாழ்வதற்கான ஆதாரங்களை அழித்து, சுற்றாடலுக்கு அழிவுகளை ஏற்படுத்தும் தொழிலில் ஈடுபட்ட அல்லது ஈடுபடும் நபராக இருத்தல் கூடாது.

5- மக்கள் பிரதிநிதியாக தெரிவாகும் முன்னர், நாட்டுக்கு கேடான முறையில் தான்தோன்றித்தனமாக நிதி ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொண்ட, மக்கள் பிரதிநிதியாக இருந்து கொண்டு தனது அரசியல் பலத்தை முறைகேடாக பயன்படுத்தி அரசுடன் நிதி ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொண்ட மற்றும் ஒப்பந்தத்தின் ஒரு தரப்பாக இருந்தவராக இருக்கக் கூடாது.

6 – வேட்புமனு வழங்கப்படும் வேட்பாளர் தமது பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும், அந்த பிரதேசத்தில் வசிப்பராக இருத்தல் வேண்டும் என்பதுடன் அங்குள்ள மக்களுடன் தொடர்புகளை கொண்டவராக இருக்க வேண்டும்.

7- வேட்புமனுக்களை வழங்கும் போது பெண்கள் மற்றும் இளம் பிரதிநிதிகளுக்கு போதிய சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும்.

8- அரசியல் பலத்தை முறைகேடாகவும் மோசடியாகவும் பயன்படுத்தாத நபராக இருத்தல் வேண்டும்.

பெப்ரல் மற்றும் பிரஜைகள் ஆகிய அமைப்புகள் இன்று இந்த 8 வரைமுறைகளை கொழும்பில் வெளியிட்டுள்ளன. இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும், பொது அமைப்புகளின் பிரதிநிதிதகளும் கலந்து கொண்டனர்.

# 3 தமிழர்கள் கைது

பிரித்தானியாவுக்கு செல்ல முற்பட்ட மூன்று தமிழ் இளைஞர்கள் 12ம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மூவரும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்குகிழக்கிற்கு மேலும் அதிகாரங்கள்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் 4 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவினருக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான குழுவினருக்கும் இடையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தைகளை அடுத்தே இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

1.இராஜதந்திர மற்றும் அதிகாரிகள் பயணிக்கும் போது விசா இன்றி பயணிப்பதற்கான ஒப்பந்தம்.

2.சுங்க நடவடிக்கைகளின் போது இருநாடுகளுக்கும் இடையில் உதவி செய்துகொள்வதற்கான ஒப்பந்தம்.

3.இளைஞர் முன்னேற்றத்துக்கான ஒப்பந்தம்.

4.ரவிநாத் தாகூர் மன்றத்தை ருகுணு பல்கலைக்கழகத்தில் நிறுவுவதற்கான ஒப்பந்தம் ஆகியனவே கைச்சாத்திடப்பட்டன.

# பகீரதிக்குப் பிணை

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட ஜெயகணேஸ் பகீரதி மற்றும் அவரது மகளுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

பிரான்சில் வசித்துவரும் பகீரதி, பத்து ஆண்டுகாலம் கடற்புலிகள் பிரிவின் தலைவியாக செயலாற்றியவர் என நீதிமன்றத்தில் பயங்கரவாத தடுப்பு பிரிவின் அதிகாரிகள் கூறியிருந்தனர். அத்துடன் வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலி முன்னாள் தலைவர்கள், அங்கிருந்தபடி புலிகள் இயக்கத்தை மீண்டும் கட்டியெழுப்ப முயல்கின்றனர் எனவும் அந்த அதிகாரிகள் குற்றஞ்சாட்டினர்.

முடிவில் பகீரதியை இரண்டு லட்ச ரூபாய்க்கு சரீர பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

# த.தே.கூ. - மோடியைச் சந்தித்தது!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினரே சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

அக்குழுவில், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

அத்துடன், இதுதொடர்பான தொடர் நடவடிக்கைகள் குறித்த தகவல்களை சீனாவுடன் பரிமாறிக் கொள்வதாகவும், கலந்துரையாடுவதாகவும் வாக்குறுதி கொடுத்துள்ளது.

# பிறிகேடியருக்கு மரணதண்டனை

தனது மனைவியை கொலைச்செய்த முன்னாள் பிரிகேடியருக்கு கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி பியசீலி விக்கிரமசிங்க, இன்று வெள்ளிக்கிழமை மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

சப்புகஸ்கந்த, மாகொலையில் 2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் திகதி துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டு கொலைச்செய்ததாக அவருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மலைமுரசு
MALAIMURASU
# உலகச் செய்திகள்

## ஈழத்தமிழர் உட்பட 400 க்கும் மேற்பட்டோர் கைது

கடந்த இரு வாரங்களுக்கு மேலாக தாய்லாந்தின் பாங்காக் நகரில் இடம்பெற்று வரும் தொடர் தேடுதல் வேட்டையில் நானூறுக்கும் அதிகமான அகதி அந்தஸ்து கோரியவர்களும் அகதிகளும் கைதாகி உள்ளனர். இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, வருகின்ற ஆவணி மாதம் தாய்லாந்தில் தேர்தல் நடைபெற இருப்பதன் எதிரொலியாக கடந்த வாரம் நிகழ்ந்த குண்டு வெடிப்புக்கான இரு சந்தேக நபர்களை கைது செய்த தாய்லாந்து காவல்துறை அவர்கள் கொடுத்த தகவலின் பிரகாரம் உண்மையான குற்றவாளிகளை தேடி தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளனர்.

மிகுந்த அச்சத்தில் வீடுகளை பூட்டி உடைகளை வெளியே உலர்த்தாமல் அவதானமாக இருக்குமாறும் கூட்டமாக வெளியே செல்ல வேண்டாம் என்றும் தாய்லாந்தின் ஐ.நாவுக்கான அகதிகள் உயர் ஸ்தானிகராலயம் அகதி மக்களை எச்சரித்துள்ளது. இருநூறுக்கும் அதிகமான ஈழத்தமிழ் அகதிகள் அங்கு அகதித் தஞ்சம் அடைந்திருப்பதும் மீள்குடியேற்றத்திற்காக காத்திருப்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## இரத்த நீர் வீழ்ச்சி



பூமியின் தென் முனையைச் சூழ்ந்திருக்கும் ஒரு கண்டமாக அண்டார்ட்டிக்கா விளங்குகிறது. இங்கு எண்ணற்ற பனிப்பாறைகள் உள்ளன. இவைகளில் ஒன்றான டெயிலர் பனிப்பாறையில் ஓர் அதிசயம் நிறைந்துள்ளது. இந்த டெயிலர் பனிப்பாறையில் உள்ள ஓர் நீர் வீழ்ச்சியில் இரத்த நிறத்தில் தண்ணீர் கொட்டுகிறது.

இந்த மர்மத்தைக் கண்டறிய விஞ்ஞானிகள் சிலர் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். இதன் முடிவில் தற்போது அந்த இரத்த நீர் வீழ்ச்சியின் மர்மம் அம்பலமாயிற்று. சுமார் 2 மில்லியன் காலமாக பனிக்கட்டிக்குள் அகப்பட்டுக்கொண்டிருந்த இரும்புச்சத்து மிகுந்திருந்த கடல் நீரே இவ்வாறு சிவப்பு நிறத்தில் தண்ணீர் கொட்டுவதற்கு காரணம் என கண்டறியப்பட்டுள்ளது.

## புதிய அரசாங்கத்தை பாராட்டிய "சகி"



மனித உரிமை செயற்பாட்டாளரான பாலேந்திரன் ஜெயக்குமாரி உட்பட எட்டுப் பேரை இலங்கை அரசாங்கம் விடுதலை செய்தமையை வரவேற்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் ஜென் சகி இதனை தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கடந்த ஒரு வருட காலமாக குற்றச்சாட்டுக்கள் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருந்த பாலேந்திரன் ஜெயக்குமாரியை கடந்த 10ம் திகதி அரசாங்கம் பிணையில் விடுதலை செய்தது. தமிழ் சிறுபான்மையினரை நோக்கி புதிய அரசாங்கத்தின் நல்லலெண்ண நடவடிக் கையாக இது உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## 11 வீரர்கள் பரிதாப மரணம்

அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று பயிற்சியில் ஈடுபட்டது. அப்போது கடுமையான பனிமூட்டத்தினால் மலைப்பகுதியில் வழி தெரியாமல் தடுமாறியது. இதுகுறித்து விமான கட்டுப்பாட்டு அறைக்கும் தகவல் தெரிவித்தனர். இந்நிலையில், கடுமையான பனிமூட்டத்தினால் 12.03.2015 அதிகாலை அந்த ஹெலிகொப்டர் மலையில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் இறந்து போன 11 பேரின் உடல்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது என்று எக்லின் இராணுவ விமானதள அதிகாரி என்டி பவுர்லான்ட் கூறினார்.



## முன் ஜென்மத்தில் நடந்தவற்றை கூறிய சிறுவன்



சிரியா மற்றும் இஸ்ரேலின் எல்லையில் கோலன் ஹெட்ஸ் என்ற பகுதியில் வசித்துவரும் ஒரு குடும்பத்தை சேர்ந்த 3 வயது சிறுவன் தான் முன்ஜென்மத்தில் எவ்வாறு கொல்லப்பட்டான் என்பதை தனது பெற்றோரிடம் விவரித்துள்ளான். அவன் காட்டிய அந்த இடத்தை தோண்ட தொடங்கிய சில நிமிடங்களில் அந்த இடத்தில் ஒரு மனித உடலின் எழும்பு கூடு இருந்ததுள்ளது. அதோடு நிறுத்தாத அந்த சிறுவன் தான் கோடாரியால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டதாகவும், அந்த கோடாரி புதைத்த இடத்தையும் காட்டியுள்ளான்.

பின்னர் காவல்துறையினர் நடத்திய விசாரணையில், இந்த சிறுவன் பிறப்பதற்கு 4 வருடங்கள் முன்பு காணாமல் போன மருத்துவர் ஒருவரை பற்றி தகவல்களை தேடியுள்ளனர்.

மேலும், அந்த சிறுவன் தன்னை கொன்றவர் என்று குறிப்பிட்ட நபரிடம் காட்டிய போது, அந்த கொலை சம்பவத்தையும், அனைத்து பெயர்களையும் சரியாக கூறியதை கேட்டு முகம் மாறிய அந்த நபர் தான் மற்றும் சிலர் சேர்ந்து அந்த கொலையை செய்ததாக ஒப்பு கொண்டதாக கூறப்படுகிறது.

## சூரியஒளியில் இயங்கும் விமானம்

உலகை சுற்றிவரும் சாதனைப்பயணத்தை தொடங்கியிருக்கும் சூரிய ஒளியால் இயங்கும் விமானம் தனது பயணத்தின் இரண்டாம் கட்டமாக இந்தியாவின் அகமதாபாத் நகரில் வெற்றிகரமாக தரையிறங்கியிருக்கிறது. அரேபியக்கடலை வெற்றிகரமாக கடந்துள்ள இந்த விமானம், பாகிஸ்தான் வான்பரப்பில் பறந்து பின்னர் இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் அகமதாபாத் நகரத்தின் விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது.

அடுத்த ஐந்து மாதங்களில் அனைத்து கண்டங்களுக்கும் பயணிக்கவுள்ள இந்த விமானம், பசுபிக் மற்றும் அட்லாண்டிக் பெருங்கடல்களையும் கடக்கவுள்ளது.

## நாடாளுமன்றத்திற்கு நேராக காந்தி சிலை நிர்மானம்




பிரிட்டிஷ் சாம்பிராஜ்ஜியத்தை எதிர்த்து போராடிய காந்தியின் சிலை, காந்தியை அந்நாளில் விரும்பியிராத முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டண்ட் சர்ச்சில் போன்றவர்களுக்கு இடையில் அமைக்கப்படப்போகிறது. 15 லட்சம் டாலர்களுக்கும் அதிகமாகச் சேர்ந்த கொடைத்

இந்த சிலை நேராக நாடாளுமன்றத்தைப் பார்த்தபடி அமையவிருக்கின்றது. அத்துடன் நிஜத்தில் தன்னை விரும்பாத சர்ச்சிலுக்கு அருகில் சேர்ந்து நிற்கப்போகிறார். இந்த சிலையை உருவாக்கிய சிற்பி ஃபிலிப் ஜாக்சன், காந்தி பற்றி நிறைய அறிந்திராதவர்கள் இந்த சிலையைப் பார்த்து விட்டு அவரைப் பற்றியும், அகிம்சை வழியாக அவர் எட்டிய உயரங்கள் பற்றியும் தெரிந்துகொள்ள விரும்புவார்கள் என தான் நம்புவதாகத் தெரிவித்துள்ளார்.

## ராஜ்ய உறவில் விரிசல் இல்லை

சவுதி அரேபியாவில் நிலவும் மனித உரிமைகள் குறித்து ஸ்வீடன் செய்திருந்த விமர்சனங்களினால் கோபமடைந்தே தமது தூதரை திரும்பி வரும்படி கூறியுள்ளதாக சுவீடனின் வெளியுறவு அமைச்சகப் பேச்சாளர் கூறியுள்ளார். எனினும் ஏட்டிக்கு போட்டியாக அங்கிருந்து தமது தூதரை நாடு திரும்பும்படி கூறும் எண்ணம் ஏதும் சுவீடனுக்கு இல்லை என அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை எவ்வகையிலும் இருநாட்டுக்கும் இடையேயான ராஜீய உறவுகளில் விரிசல் இல்லை எனவும் ஸ்வீடிஷ் வெளியுறவுத்துறை பேச்சாளர் கூறியுள்ளார்.

ஜனநாயகம் மற்றும் மகளிர் உரிமைகள் குறித்து ஸ்வீடிஷ் வெளியுறவு அமைச்சர் அரபு லீக் மாநாடு ஒன்றில்பேச விழைந்ததை சவுதி தடுத்ததை அடுத்து இருநாடுகளுக்கும் இடையே உரசல்கள் ஏற்பட்டன.



## வெளிறியவர்கள் அதிஷ்டமானவர்கள்

தன்சானியாவில் வெளிறிய நிறத்தில் பிறக்கும் குழந்தைகள் கொல்லப்படுவதை தடுக்கும் நோக்கில், அங்கு 200 மாந்திரீக நாட்டு வைத்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சிலரிடம் மிருகத் தோல்களும் குடிநீரும் இருந்ததாக காவல்துறையினர் தெரிவிக்கின்றனர். கடந்த 2000ஆம் ஆண்டு தொடக்கம் வெளிறிய தோலுடைய குறைந்தது 76 பேராவது தன்சானியாவில் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் தெரிவித்துள்ளது.

அவ்வகையில் கொல்லப்பட்டவர்களின் உடல் உறுப்புகள் அதிர்ஷ்டமும் செல்வமும் தரும் எனும் நம்பிக்கையில் பாரம்பரிய நாட்டு வைத்தியர்கள் அவற்றைப் பயன்படுத்துகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

# 06 விணையடி நீ எனக்கு...

– என் அன்பு
உன் கைகளை விட்டிறங்க மனமில்லாத
ஒரு குழந்தை
அதை என்றைக்குமாக உன்னிடம் ஒப்படைக்கிறேன்–

பாப்லோ நெருடா



ரதனும் நிவேதாவும் எழுந்து கேண்டீனுக்கு வெளியே வரவும் நிவேதாவின் மாமா அவர்கள் அருகே வரவும் சரியாக இருந்தது. தூரத்தில் புகையிரதம் வருவது அதன் முகப்பு விளக்கு வெளிச்சத்தில் தெரிந்தது. சில வினாடிகளில் பலத்த சத்தத்துடன் மட்டக்களப்புக்குச் செல்லும் கொழும்புப் புகையிரதம் கல்லோயா ஸ்டேசனில் வந்து நின்றது. நேரம் அதிகாலை 5.30 மணியைக் காட்டியது. பனி மூட்டத்திலான அதிகாலை வேளை மங்கலான கருக்கிருட்டு... விடிந்தும் விடியாத கால நிலையாக இருந்தது. புகை மூட்டத்தைப் போல பனிப் போர்வை படர்ந்திருந்தது.

நிவேதாவின் மாமா முன்னே ஏற அவரைத் தொடர்ந்து ரதனும் நிவேதாவும் புகையிரதத்துக்குள் ஏறிக் கொண்டனர். அன்று வழமையை விட கொழும்பிலிருந்து வந்த பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்ததால் அவர்களுக்கு சுலபமாக ஆசனம் கிடைத்து விட்டது. ரதன் ஜன்னல் ஓரமாக ஒரு சீட்டில் அமர்ந்து கொண்டான். அவனுக்கு எதிரில் இருந்த சீட்டில் நிவேதாவுக்கு இடம் கிடைத்தது. அவளது மாமாவுக்கு அடுத்த பக்கத்தில்தான் இடம் கிடைத்தது. அவரது தூக்க கலக்கத்துடனான கண்கள் அவரை சீட்டில் அமர்ந்ததும் உறங்க வைத்தது.

அதிகாலை 5.40.... புகையிரதம் மட்டக்களப்பு நோக்கி புறப்பட்டது. மெல்ல மெல்ல தொடங்கிய அதன் ஓட்டம் வேகமாகியது. அந்த அதிகாலை வேளை கல்லோயா ஆற்றின் குளிர்மையான தென்றல் உடலை நடுங்க வைத்தது. ரதன் அந்த இயற்கை காட்சியை ரசித்தபடியே வந்தான். அந்த ஆற்றின் ஓரமாக அந்த அதிகாலை வேளையிலும் நீராடிக் கொண்டிருக்கும் சிங்களப் பெண்களைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது. அந்த அதிகாலைக் குளிரில் அவர்கள் சிரித்துக் கதைத்தபடி நீராடிக் கொண்டிருந்தனர். ரதன் நிவேதாவைப் பார்த்தான். அவள் அந்த ஜன்னல் மூலையோடு சாய்ந்தபடியே உறங்கிப் போயிருந்தாள் வெளியே அந்த ஆற்றில் குளிக்கும் பெண்களையும் நிவேதாவையும் பார்க்க அவனுக்குள் கற்பனை உருண்டோடியது. அந்த ஆற்றில் நிவேதா குளிப்பது போன்றே அவனுக்குத் தெரிந்தது. அவன் ஜன்னலுக்கு வெளியே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

நேரம் அதிகாலை 6.30ஐக் காட்டியது. புகையிரதம் விரைந்து கொண்டிருந்தது. காலைப் பனி மூட்டம் கலைந்து சூரியனின் வருகை ஆரம்பமாகிவிட்டது. புகையிரதத்தில் உறங்கிப்போய் இருந்தவர்கள் ஜன்னலின் வழியாக சூரிய ஒளிச் சூட்டில் சுரணை பெற்று மெல்ல மெல்ல விழிக்கத் தொடங்கினர்.

ரதன் நிவேதாவைப் பார்த்தான். அவள் இன்னமும் உறங்கிக்கொண்டிருந்தாள். அவள் உறங்கும் போது காற்றில் கலைந்து அவளது முகத்திற்கு முன்னே விழுந்த இரண்டு மூன்று மயிர்க் கற்றைகள் அவளுக்கு மேலும் அழகைக் கொடுத்தது.

'எந்த ஒரு பெண் உறங்கும்போதும் அழகாக இருக்கிறாளோ அவளே உண்மையான அழகி என என்றோ எங்கேயோ ஒரு கசலில் படித்த வரிகள் ஞாபகத்திற்கு வந்தது. ரதன் எழுந்து மேலே வைத்திருந்த தனது பேக்கை எடுத்து அதிலிருந்த ஒரு நோட்டுப் புத்தகத்தை வெளியில் எடுத்து எழுதத் தொடங்கினான். கல்லோயா ஸ்டேசனின் கேண்டீனுக்குள் வைத்து மனசுக்குள் தோன்றிய கவிதை வரிகளை உடன் எழுதி முடித்து அந்த கவிதை எழுதிய பக்கத்தினை கிழித்து தனது சேர்ட் பொக்கட்டுக்குள் வைத்துக்கொண்டான். அதிகாலை வேளை வெளியே பச்சைப் பசேலென்ற பசுமைச் சூழல். எதிரே ஒரு அழகிய இளம் பெண். ரதனின் சிந்தனைப் பறவை சிறகடித்துப் பறந்தது. விரிந்திருந்த நோட்டுப் புத்தகத்தில் சில வரிகளை கிறுக்கத் தொடங்கினான்.

தேடிக் கொண்டிருக்கிறேன்
இந்த அகராதி எங்கும்
புதிய வார்த்தை ஒன்றைத்
தேடிக் கொண்டிருக்கிறேன்
ஆம்-
உன் அழகை வர்ணிப்பதற்காய்
புதிதான ஒரு வார்த்தையைத்
தேடிக் கொண்டிருக்கிறேன்.... கவிதை வரிகள் வெள்ளைத்தாளை அழகு செய்து கொண்டிருந்தது. ரதன் தொடர்ந்து. 'அழைப்பு' என்ற தலைப்பில் எழுதத் தொடங்கினான்

காலம் துரத்துகிறது
கனவுகளைப் பைகளில்
நிரப்பியபடி நான்
நீயும் வருவாயா கண்ணே
வெகுதூரத்தில்
புள்ளியாய்த் தெரிகிறது
வாழ்க்கை
நிழல்களைத் துரத்தியபடி
நம்பிக்கைகள் தளர்ந்த
ஒரு வனாந்திரத்தில்
நிற்கின்றோம்.
உனக்கு நானும்
எனக்கு நீயும்
தீபங்களாவோம்
சுட்டெரிக்கும் சுடரோடு
ஊர்வலம் போவோம்.



"ஊர்வலத்தில் நாங்களும் வரலாமா கவிஞரே? நிவேதாவின் குரல் கேட்டு திகைத்துப் போனான். அவனுக்கு முன்னே உறங்கிக் கொண்டிருந்தவள் அவனுக்குப் பக்கத்தே அமர்ந்திருந்தாள். அப்போதுதான் பார்த்தான் அவனுக்கு பக்கத்தில் அமர்ந்திருந்த முதியவரை காணவில்லை. அவர் இறங்கி இருக்க வேண்டும். அவன் எழுதிக் கொண்டிருந்ததால் நிவேதா எழுந்ததையும் முதியவர் இறங்கியதையும் கவனிக்கவில்லை.

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல்**

திடீரென அவள் அப்படிக் கேட்டதும் அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அவன் எழுதியதை அவள் எட்டிப்பார்த்து வாசித்திருக்க வேண்டும்.

'என்ன கவிஞரே ஊர்வலத்திற்கு எனக்கு அழைப்பு இல்லையா? மீண்டும் அவள் கேட்டாள். "பெண்ணே இது உனக்கு மட்டுமான அழைப்பு மட்டுமேதான்..." அவனால் வெளியே சொல்ல முடியவில்லை. மனசுக்குள் சொல்லிக் கொண்ட ரதன் மென்மையாக சிரித்துக்கொண்டான்.

'சரியான களைப்பாக இருந்தது. சற்று அயர்ந்து தூங்கிட்டன்... உங்களைப் பார்த்தா தூங்கியதைப் போலவே தெரியவில்லையே? .."

"இல்ல நிவேதா நான் எழுதிக் கொண்டிருந்தன்.. அதனால் தூக்கம் வரல்ல... அதுவும் அதிகாலையில் தூங்கினா உடம்பு சோம்பலாக இருக்கும்..." இருவரும் கதைத்துக் கொண்டிருக்கும்போது புகையிரதம் பொலநறுவை ஸ்டேசனில் வந்து நின்றது.

பொலநறுவை. ஸ்டேசனிற்கு வெளிப்புறமாகவே தனியார் பேருந்து நிலையமும் அமைந்திருந்தது. எனவே அங்கு சனத்திற்கு பஞ்சமிருக்கவில்லை. விடுமுறையில் சென்று மீண்டும் மட்டக்களப்புக்கு செல்வதற்கு வந்த ராணுவ வீரர்களுமாக பலர் புகையிரதத்தில் ஏறிக் கொண்டனர்.

நிவேதாவின் மாமாவும் எழுந்து சோம்பலை முறித்தபடி எட்டிப்பார்த்து நிவேதாவிடம் 'நிவே கடையில் ஏதாவது வாங்கித் தரவா? எனக் கேட்டதற்கு நிவேதா 'வேண்டாம் மாமா' எனச்சொல்ல அவர் மீண்டும் தன் முயற்சியில் சற்றும் மனம் தளரா விக்ரமாதித்தனைப் போல கண்களை மூடி உறக்கத்தில் ஆழ்ந்தார். [illegible] நிரம்பி வழிந்தது. [illegible] பக்கத்தில் [illegible] எழுந்து சென்றிருந்த முதியவரும் வந்து நிவேதா முன்னர் அமர்ந்திருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டார். அவர் முகத்தில் ஒரு புன்சிரிப்பு தவழ்ந்தது. ஏன் அந்த ஜோடிகளை தொந்தரவு செய்ய வேண்டும் என நினைத்தாரோ என்னவோ அவர் அவர்களை கவனியாதது போல வெளியே பார்க்கத் தொடங்கினார். அவர் தங்களைப் பற்றி நினைத்தே சிரித்துக்கொண்டது அவனுக்குத் தெரிந்தது. இருந்தாலும் அவரது இங்கிதம் அவனுக்குப் பிடித்திருந்தது. தங்களை அவர் கண்டு கொள்ளாததைப் போல் வெளியே பார்வையை ஓட்டியதையும் அவன் பார்த்தான். எழுபது வயதைக் கடந்த பின்னும் எத்தனையோ முதியவர்கள் இளம் பெண்களைக் கண்டவுடன் பல்லிலிப்பதைக் கண்டிருக்கிறான். வயசு என்பது இவர்களது 'சபலப் புத்திக்கு' ஒரு பாதுகாப்பாக இருக்கின்றது. எழுபது வயது கிழவன் தானே இருபது வயது பெண்ணை என்ன செய்து விட முடியும்? என்றுதான் சமூகம் நினைக்கிறது ஆனால் அந்த எழுபது வயது கிழவனின் வக்கிர புத்தியை அது உணர்வதில்லை. ஏனென்றால் இங்கு வயது ஒரு கேடயமாகிவிடுகிறது. இப்படியான எத்தனையோ சபலப்புத்திக்காரர்களை ரதன் கண்டிருக்கிறான். அப்படியான பலர் சமுதாயத்தில் கௌரவிக்க பட்டிருப்பதைக் கண்டும் மனம் வெதும்பியிருக்கிறான். ஆனால் அதற்கெல்லாம் விதி விலக்காய் அந்தப் பெரியவர் நடந்து கொண்ட விதம் அவனுக்கு அவர் மேல் மரியாதையைத் தந்தது.

பொலநறுவை. ஸ்டேசனில் இருந்து புகையிரதம் புறப்படத் தொடங்கியது. புகையிரத இருக்கைகளுக்கிடையே பல வியாபாரிகள் நுழைந்த வண்ணம் தமது கைகளில் இருந்த பொருட்களை விற்றுக்கொண்டிருந்தனர். ஒரு சிறுவன் தனது பெட்டியில் வைத்து 'யோகட்... யோகட்' என கத்திய வண்ணம் ரதன் இருந்த இருக்கை பக்கம் வந்தான். அவனைப் பார்க்க ரதனுக்கு பாவமாக இருந்தது. பாடசாலைக்கு செல்லும் வயதில் அவன் யோகட் விற்றுத் திரிந்தது அவனது வறுமையை படம் பிடித்துக் காட்டியது.

"தம்பி யோகட் மூன்று தா' எனக் கேட்டதும் 'இந்தாங்க சேர்' என மூன்று யோகட்டை எடுத்து ரதனிடம் கொடுத்து விட்டு அவன் கொடுத்த பணத்தை எண்ணி பெட்டிக்குள் போட்டான். ரதன் நிவேதாவிடம் ஒரு யோகட்டைகொடுத்து விட்டு மற்றதை நிவேதாவின் மாமாவிடம் கொடுக்க எழுந்து பார்த்தான். ஆனால் அவர் இன்னும் உறங்கிய படியே இருந்தார்.

ரதன் மூன்றாவது யோகட்டை தனக்கு முன்னே ஆசனத்தில் வந்தமர்ந்த அந்த பெரியவரிடம் கொடுத்தான். 'இந்தாங்க சேர் யோகட்' என அவன் கொடுக்கவும் அவர் 'தேங்க்ஸ்' என சிரித்தபடியே அதனைப் பெற்றுக் கொண்டார். நிவேதா யோகட் கப்பின் மேல் மூடியை உடைத்து அதிலிருந்த சிறு பிளாஸ்டிக் கரண்டியினால் யோகட்டை ருசிக்கத் தொடங்கினாள்.

கட்டிப் பாலில் செய்யப்பட்ட அது மிகவும் சுவையாக இருந்தது. 'ரதன் உங்கட யோகட் வெகு பிரமாதம் ரொம்ப தேங்க்ஸ்...' என் அவள் கூறவும் ரதன் அந்த பெரியவரை பார்த்து சிரித்துக் கொண்டான். தான் எழுதிக் கொண்டிருந்த டயரியை மூடிவைத்துவிட்டு ரதன் கொடுத்த யோகட்டை திறந்து ருசிக்கத் தொடங்கினார். 1994 என தங்க நிறத்தில் எம்போஸ் செய்யப்பட்ட கோப்பி நிற அழகிய டயரி ரதனைக் கவர்ந்தது. 'தம்பி எங்க மட்டக்களப்புக்கா? அந்த பெரியவரே பேச்சை தொடங்கினார். "ஆமாம் சேர்" ரதன் சொல்லவும் அவரே கேட்டார் "அப்படின்னா நீங்க இரண்டு பேரும் கம்பஸ் போல இருக்கு?" "ஆமா, உங்களுக்கு எப்படி தெரியும்?" நிவேதா வியப்புடன் கேட்டாள். "இல்ல .. நீங்க கதைத்து வந்த விதத்தில் நினைச்சன்... அது சரி நீங்க எந்த பெஜ்?" "இப்பதான் பெஸ்ட் இயர்." ரதன் கூறினான். "என்ன பெக்கல்டி ?" "ஆர்ட்ஸ் பெக்கல்டி.." "ஓ அதுதான் கவிதை எல்லாம் எழுதிறீங்க போலிருக்கு..?" அவர் சிரிப்புடன் கேட்டார். ரதனும் நிவேதாவும் மெல்லச் சிரித்துக் கொண்டனர். "நீங்க எங்க சேர் போறீங்க ..?" ரதன் சம்பிரதாயமாக கேட்டான். "நானும் மட்டக்களப்புக்குத்தான் விரைவில் நாம் சந்திப்போம்..." அவர் சொன்னார். நிவேதா தான் சாப்பிட்ட யோகட் கப்பை ஜன்னலுக்கு வெளியே தூக்கி எறிந்தாள். புகையிரதம் மன்னம்பிட்டி, வெலிகந்த ஸ்டேசன்களை கடந்து ஓடிக் கொண்டிருந்தது. அந்தப் பெரியவரும் தனது பிரிப் கேசை திறந்து தனது டயரியை வைத்து விட்டு ஒரு புத்தகத்தை எடுத்து படிக்கத் தொடங்கினார்.

மேவும்... .. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீ... காற்று... நான்...

விழி நீளும் முடிவுவரைத்
தொடரும் தெரு வழியே
நடந்து போகின்றேன் - நான்

முகத்தை எதிர்கொள்ளும் காற்று
மற்றோர் திசையில்
தோள்களை வருடும்.
சுகம் பரப்பும்
தேகமெங்கும். . .

நீயும் காற்றுத்தான்

நம் காதலின் தெருவழியே
முடிவின்றித் தொடரும்
என் கால்கள் . . . . நீ
காற்றாய் தொடுகிறாய் என்னை
முகம் மோதும் காற்று
நாம் முத்தமிட்டதை
உணர்த்தும். . . இதழ்களில்
ஈரம் கசிக்கும் . .

சிலவேளை
வியர்வையூறி
உப்புக்கசிந்துவர்த்த எம் முத்தம்
காற்றும் இதழ் மோதித் தரும்

நாக்கால் நிமிண்ட
உவர்க்கும் என் இதழ். . .

காற்றாய் நீ. . .

இரு கையின் ஐவிரலும்
தோள்களை பற்றிப்
பிடித்திழுத்து
இறுக்கிப் பின்
பிடரியிற் பிரலும் உன் விரல்கள்

காற்றும் . . உன் கைவிரலும்
என் காதைத் தொட்டுச்
செய்யும் சில்மிசங்கள்.....

காற்றே நீதான்!

என் மூச்சாய் உட்சென்றுயிராய்
மாறும்
என்
காற்றே நீதான்.

கோபம் கொள்ளக்
காற்றும் குணம் மாறும் . . . .
தடாலென முகமறையும்
விழி முன்னே அங்கிங்காய்
அலையும். .

சினம் கொள்ளும்

உடல் நோகப் பலமுறை
உருட்டும்
நான் நடந்தேகும்
தெருவைத் தடுக்கும்

உன்னைப்போல்தான்
காற்றும். .

சினம் கொள்ளும்

முகமறையும் வார்த்தைகளால்
வெறிகொண்டு நீ
வலி வரக் கொல்வாய்
எனை – முகமறையும் வார்த்தைகளால்

பின் என் முன்னலைவாய்
அங்கிங்காய் . . . .

அழுவாய் . . . .
எம் காதல் வழி மறைப்பாய்
தடம் மாறும் வண்ணம்
சிணுங்கொள்வாய். . .

சமாதானம் சொல்லிப்
பின்னும்
அழுவாய்

என் பெண்ணே
காற்றைப் போல் நீயும். .

அழுது...
அலைக்கழித்து. .
அழவைத்துப்
போய்விட்டாய். .

காற்றை என்னுடன்
வாழவிட்டு . . .

- மாயன் -

## பழகினேன் !

தமிழை அள்ளப் பழகினேன்,
தாளில் வீசப் பழகினேன்!
அழுது கூட்டப் பழகினேன்,
அது சுவைக்கப்பழகினேன்!

பழசு பார்க்கப் பழகினேன்,
பாடல்பாடப் பழகினேன்!
இளசும் பொறுக்கிப் பழகினேன்,
இன்பம்துய்க்கப் பழகினேன்!

தெரிவு செய்யப் பழகினேன்,
தீதை நீக்கப் பழகினேன்!
அரிதை இருத்தப்பழகினேன்,
ஆக்கிப்படைக்கப்
பழகினேன்!

ஆழம் காணப் பழகினேன்,
ஐந்து பாவும் பழகினேன்!
நீளம் குறைக்கப் பழகினேன்,
நினைத்து
மகிழப்பழகினேன்!

தாமரைத் தீவான்
ஊர்காவற்றுறை கின்னியா.

## வாழ்தல் . . . . . .

நிலத்தில் கிடந்த
கொடியை நிறுத்தி
பந்தலிட்டு உரமும்
நீரும் தினமொன்றாய்

கொடியும் நன்றாய்
படர்ந்து பூத்தும்
காய்த்தும் சிரித்தது

ஆசையாய் பறிக்க
காய்களும் தேறின

காற்றோடு மழை
பந்தலும் நிலத்தில்
காலையில் படர்ந்திருந்தது

கொடிகளின் உறவு
பந்தலை நிமிர்த்த
முடியாது தடுத்தன

பந்தல் காய்கள்
மண்ணில் அழுகின

நீரை மட்டும்
ஊற்றி கொடி
உயிரோடு வாழ்தல்
நினைத்து ஏங்கி



திருமலை சுந்தா

# கவிமுரசு



## “விடியலை காணலாம்”

வடமலை ராஜ்குமார்,
திருகோணமலை

உலகை புதுப்பிக்க வந்த
பூங்கொடியே ....... உன்னை
தான் அழைக்கின்றது என்
கவிதை ... ஊரெல்லாம்
விழித்துக் கிடக்கிறது
உன் சிந்தனையை மட்டும்
ஏன் தாலாட்டுகிறாய்?
கண்ணீர் கோழையின்
கையில் இருக்கும் துரும்பு
உனக்கது வேண்டாமடி

உன் கண்ணீரை துடைத்தெடு
தூய சிந்தனையில்
வார்த்தை எனும் ஆயதம்
ஏந்தி வீறு கொண்டு
போராடிடலாம் ... தங்கி
வாழ்வது தன் மான கேடு
தயங்காமல் எழுந்து நில்
புதுமைகள் படைக்க வந்த
பாரதியின் புதுமை பெண்
நீயென்பதை புரிந்து கொள்
நம்பி வாழும் அவலம் வேண்டாம்
உன்னை நம்பி ஊரேனும்
வாழட்டும் வீறு நடை போட்டு
விரைந்து வந்திடு
விடியலை காணலாம் .... !



## இறுதியாய் . . .

வரைந்த என் கவிதை
உனக்குள் விட்டுச்
சென்றதை அறியேன் - நான்
என் கவிக்கும்
இருட்டில் புகும்
என் வாழ்க்கைக்கும் - இல்லை
உன்னிடமிருந்தான
அங்கீகாரம்
இனி எதை வரையும்
என் விரல்கள்?

- தன்யா -

# மரபினில் நின்று உருப்பெற்ற புதுக்கவிதைகள்

**வரலாற்றுப் பக்கம்**

கவிதையை பொதுவாக இருவாறு வகுக்கலாம். மரபுக்கவிதை காலத்தால் முந்தியது. பல்வேறு இலக்கிய நூல்களாக இருபது நூற்றாண்டுகளுக்கும் மேலாகத் தழைத்து விளங்கும் சிறப்புடையது. புதுக்கவிதை,

தொன்று தொட்டு வரும் தன்மையுடையது என்பதை மரபு என்னும் சொல் உணர்த்தி நிற்கின்றது. இனிய ஓசை நயம் அமைந்த பாடல்களைக் கேட்டுப் பழகியவர், அதே ஓசையில் பாடல் புனைய முயன்று, பிறர் படிக்கவும், இவ்வாறே புதியன படைக்கவும் 'பாடல் அமைப்பை' எழுத்து, அசை, சீர் என அமைத்து ஒழுங்குபடுத்தியிருத்தல் வேண்டும். இவ்வாறு யாப்பிலக்கணம் தோன்ற, அடுத்தடுத்து வந்தவர் அம்மரபு மாறாமல் கவி படைக்கத் தொடங்கினர்.

பாக்களையடுத்துப் பாவினங்களும், அவற்றையடுத்துக் கும்மி, சிந்து போன்றனவும் தோன்றின. இவ்வாறுதான் பாடப்படவேண்டும் என்னும் வரையறை இருப்பதால் சிதறாத வடிவமாகப் பாதுகாக்கப் பெற்றுக் காலந்தோறும் இம்முறை பின்பற்றப்பட்டு வருகின்றது.

பாடுபொருளும் உத்திகளும் புதியனவாயினும் மரபு இலக்கணத்தின்படி படைக்கப்படுதலின் இவை மரபுக்கவிதை எனப்படுகின்றன. மரபுக்கவிதை, சங்க காலத்தில் மன்னர்களோடு தொடர்புடையதாக இருந்தது. மன்னர்களின் வீரம், வெற்றி, கொடை, ஆட்சிச் சிறப்பு ஆகியவற்றைப் புகழ்வதாகவும், துணிச்சலுடன் புலவர்கள் அறிவுறுத்துவதாகவும் அமைந்தன. அரசவையிலோ, சங்கம் போன்ற தமிழ் அவைகளிலோ ஒன்று குழுமிய புலவர்கள் அகப்பொருள் பாடி இன்புறுத்துவதாகவும் அறிவுறுத்துவதாகவும் அமைந்தன.

இடைக்காலத்தில் பக்தி இலக்கிய மறுமலர்ச்சியின் காரணமாகப் பாடுபொருள் இறைவனைப் பற்றியதாகவும், திருத்தலங்களின் சிறப்பை உணர்த்துவதாகவும் அமைந்தது. கவியரங்கம், வரையறுக்கப்பட்ட தலைப்பு, இயற்கை, சமூக அவலம் என இன்றைய நிலையில் மரபுக்கவிதையின் பயன்பாடு அமைகின்றது.

எனவே, மரபுக்கவிதை தொழிலுக்கு உரியதாகவும், அறிவுறுத்துவதாகவும், இன்புறுத்துவதாகவும் அமைந்து வரும் நிலையை அறிகின்றோம்.

எனின் புதுக் கவிதை என்பதானது ஆசிரியப்பா, வெண்பா, விருத்தம், சிந்து எனக் காலந்தோறும் யாப்பு வடிவங்கள் செல்வாக்குப் பெற்றுவந்தன. மேனாட்டுத் தாக்கத்தால் உரைநடை செல்வாக்குப் பெற்ற நிலையில், யாப்பிலக்கணத்திற்குக் கட்டுப்படாமல் கவிதை உணர்வுகளுக்குச் சுதந்திரமான எழுத்துருவம் கொடுக்கும் இப்படைப்பு முயற்சி, வசன கவிதை என்றே அழைக்கப்பட்டது. பின்னர், யாப்பில்லாக் கவிதை, இலகு கவிதை, கட்டிலடங்காக் கவிதை போன்ற பெயர்களை அவ்வப்போது பெற்று வரலாயிற்று.

பழக்கத்தில் உள்ள நிலையிலிருந்து சிறிதளவோ முற்றிலுமோ மாறுபட்டுத் தோன்றுவது புதுமை எனப்படும். வழிவழியாக மரபு கெடாது யாப்பிலக்கணத்தோடு பொருந்தி வரும் கவிதைகளிலிருந்து மாறுபடும் கவிதைப் படைப்புதான் புதுக்கவிதை ஆகும். புதுக்கவிதைகள் உருவத்தால் மட்டுமன்றி, உள்ளடக்கம், உத்திமுறைகள் ஆகியவற்றாலும் புதுமையுடையனவாகும்.

பலர் சமுதாய அவலம் கண்டு அவ்வப்போது கவிதைகள் புனைபவராக உள்ளனர். தனிமனித உணர்வுகளைப் பாடுவதும், நாட்டுப்பற்று, மொழியுணர்வு, பொதுவுடைமை, அநீதியை எதிர்த்தல், பெண்ணுரிமை, தலித்தியம், பகுத்தறிவு என்பனவற்றைப் பாடுதலும் இன்றைய புதுக்கவிதைகளின் நோக்கங்களாக உள்ளன. அவர்தம் புதுக்கவிதைப் படைப்புகளும் அவர்களின் மனநிலையையும் வாழ்வியலையும் படிப்பவருக்கு நன்கு உணர்த்துவனவாகின்றன.

முற்றும்.....

தொகுப்பு : தன்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் 02

# மக்களில் இருந்து..... மக்களை நோக்கி

-மாயன்-

## இலக்கை அடைந்த மக்கள் போராட்டமொன்றின் பதிவுகள்

உள்நாட்டில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணையொன்றை மேற்கொள்ள புதிய ஆட்சியின் கீழ் முதன்முதலில் திருகோணமலையிலேயே அமர்வுகளை நடாத்த உள்ளதாக திருகோணமலை தமிழ் சிவில் சமூக அமைப்பிற்குத் (திதசிச) தெரியவந்தது.

இவ்விடயம் தொடர்பானதொரு கலந்துரையாடலைச் செய்ய திதசிசத்தினர் ஒன்று கூடினர். அந்தக் கலந்துரையாடலில் பல விடயங்கள் ஆணைக்குழு தொடர்பாக வெளிவந்தன. அதில் மிக முக்கியமான விடயமொன்று வெளிவந்தது.

ஆணைக்குழுவின் பிரதான பணி என்ன? என்பதுதான் அந்த முக்கியமான விடயம். நாம் எல்லோரும் நினைத்துக்கொண்டிரந்தோம் அந்த ஆணைக்குழுவானது காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டிறிந்து தரும் என்றுதான். ஆனால் ஆணைக்குழுவின் பிரதான பணியாக இருப்பது இனிவரும் காலத்தில் இவ்வாறான காணமற் போதல்கள் நடைபெறாமலிருப்பதற்கான ஏதுக்களைக் கண்டறிவது என்பதாக இருந்தது. அதிர்ந்து போயினர் அனைவரும்! முதலில் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வது பின்னர் மற்றொரு திகதியில் அம் முறைப்பாடுகளில் சிலவற்றை விசாரிப்பது என ஆணைக்குழுவின் செயற்பாட்டுப் பொறிமுறை திட்டமிடப்பட்டிருந்தது.

ஆணைக்குழுவானது ஒட்டுமொத்தமாக அனைவரினதும் எதிர்பார்ப்புக்களை ஏமாற்றத்தக்க விதத்திலேயே உருவாக்கப்பட்டிருப்பதை புரிந்து கொண்ட அனைவரும் ஆணைக்குழுவின் ஒன்றரை வருட நடவடிக்கைகளை ஆராயத் தொடங்கினர். அந்த ஒன்றரை வருடங்களில் ஆணைக்குழுவிடம் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுக்ள் சுமார் 18,000 ஆக இருந்தன. அவற்றுள் 6,000 முறைப்பாடுகள் அரச படைகளின் காணாமற்போதல் தொடர்பானவையாக இருந்தன.

அவற்றுள் 2,000 முறைப்பாடுகளை மட்டும் ஆணைக்குழு விசாரணை செய்திருந்தது.

அவ்வாறு செய்யப்பட்ட விசரணைகளிலும் பல குறைபாடுகளை அவ்வப்போது உரிய தரப்பினர் சுட்டிக்காட்டியிருந்ததையும் கலந்துரையாடலின் போது தி-தமிழ் சிவில் சமூகத்தினர் கவனத்திற் கொண்டனர்.

2000 முறைப்பாடுகளை விசாரிக்க ஒன்றரை வருடங்கள் எனில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட 18000 முறைப்பாடுகளையும் விசாரிக்க சாதாரணமாக மேலும் 13 வருடங்கள் தேவைப்படும் என்பது அன்று புலனாகியது.

சரி! அந்த 2000 பேரினது விசாரணையின் பின்னரான இறுதி முடிவுகள் ஏன் வெளியிடப்படவில்லை? என்ற கேள்விக்குப் பதில் எங்கும் கிடைக்கவில்லை.

தமிழர் தாயகத்தில் வெறும் 12000 பேர் மட்டுமா? காணாமலாக்கப்பட்டுள்ளனர். எஞ்சியவர்கள் ஏன் இன்னமும் ஆணைக்குழுவின் முன் தோன்றவில்லை என்ற கேள்விக்கான பதில்கள் இரண்டு கிடைத்தன .



முதலாவது ஆணைக்குழு திருகோணமலை உட்பட மேலும் ஒரு மாவட்டத்தில் முதலாவது அமர்வைக்கூட நிகழ்த்தவில்லை என்பது. இரண்டாவது கடந்த காலத்தில் ஆணைக்குழுவின் முன் சாட்சியம் அளித்த தமிழ் மக்கள் பலர் புலனாய்வாளர்களால் தொடர் தொல்லைகளுக்கு ஆளாகியிருந்ததால் எஞ்சிய மக்கள் ஆணைக்குழுவின் முன்வரத் தயங்கியமை.

இந்த முரண்பாடுகள் யாவற்றையும் ஒருங்கே கொண்டுள்ள ஆணைக்குழுவின் முன் சாட்சியம் அளிப்பதால் கிடைக்கப் பெறும் பயன் என்ன? என்ற பெருங் கேள்வி அன்றைய கலந்துரையாடலின் முடிவில் எழுந்தது. அத்துடன் சர்வதேசத்திற்குப் புதிய அரசாங்கம் எதனைச் சொல்லிக்கொண்டு இருக்கின்றது... தமிழ் மக்கள் நம்பக் கூடிய தகுந்த வகையிலான கட்டமைப்புக்களுடன் கூடிய விசாரணகைளை உள்நாட்டில் முன்னெடுப்போம் என்று அல்லவா? இந்நிலையில் மேற்கூறிய எவற்றையும் உள்ளடக்காதவொரு ஆணைக்குழுவை தமிழ் மக்களிடம் அனுப்பிவைக்கும் போது தமிழ் மக்களும் அவ்வாணைக்குழுவின் முன் தோன்றி தகவல்களை பதிய முற்பட்டால் எதனையும் உருப்படியாகச் செய்ய முடியாது அந்த ஆணைக்குழுவைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டதாகப் போய்விடும் அல்லவா? என்றதோர் கேள்வியும் எழுந்தது. இவ்வாறான கேள்விகளின் பின்னணியில் இந்த ஆணைக்குழுவின் முகத்திரையைக் கிழக்க வேண்டுமாயின் அமர்வுகளுக்குச் செல்லாமலிருப்பதே சரியானது என அக்கலந்துரையாடலின் முடிவில் தி-தமிழ் சிவில் சமூகம் முடிவை மேற்கொண்டது.

ஆனால் இம்முடிவை நாம் மட்டும் மேற்கொண்டால் சரியாகுமா? பாதிக்கப்பட்ட மக்களும் அல்லவா இவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும்!

இதனையடுத்து திருகோணமலை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட மக்கள் அனைவரையும் சந்தித்துப் பேசுவது என்று முடிவானடுன் அதற்கான நாளும் குறிக்கப்பட்டது.

அந்த நாளில் தமிழ் சிவில் சமூகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட இடமொன்றில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சுமார் நூறுபேர் ஒன்று கூடினர். என்ன ஆச்சரியம்! அவர்களிடையே சில விசித்திரமான மனிதர்களும் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

ஒன்றுகூடலினை ஆரம்பித்து வைத்து வண. யோகேஸ்வரன் அடிகளார் விளக்கங்களை முன்மொழியத் தொடங்கினார். ஆணைக்குழுவின் விடயங்கள், அவற்றின் செயற்பாடுகள் போன்றவை மக்களுக்குத் தெளிவாக்கப்பட்டன. அந்தத் தெளிவாக்கலில் மலைமுரசின் ஆசிரியர், வண. பிரபாகரன் அடிகள், வண. சுஜி அடிகள் ஆகியோர் மேலதிக விளக்கங்களை மக்களுக்கு வழங்கினர். நிறைவாக அங்கு கூடியிருந்தவர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள் இருப்பதை தமிழ் சிவல் சமூக அமைப்பனிர் தெரிவித்தனர். முதலாவது ஆணைக்குழுவின் முன் தோன்றி முறைப்பாடுகளைப் பதிவது அவ்வாறு பதிந்து விட்டு வேறொரு திகதியில் விசாரணைக்குச் செல்வது, அவ்வாறு சென்ற பின் வாழ்வாதாரதத்திற்கான சில பொருட்களை அல்லது பணத்தைப் பெற்றுக்கொண்டு வாழாவிருப்பது.

இரண்டாவது, ஆணைக்குழுவைப் பகிஷ்கரிப்பது, பதிவுகளைச் செய்யாமல் இருப்பதன் ஊடாகச் சர்வதேச சமூகத்தை திருப்புவது.. ஐநாவின் மேற்பார்வையில் விசாரணையை முன்னெடுப்பது, குற்றவாளிகளை அடையாளம் காண்பது, கடத்தப்பட்டவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை தெரிந்துகொள்வது. இந்த இரண்டு வாய்ப்புக்களையும் மக்களின் முன்வைத்தவுடன் மக்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான சுதந்திரமான களத்தை அந்த ஒன்றுகூடல் திறந்தது.

நகரும்....

# புதினப்பலகை ஆசிரியர் புகழுடல் நீத்தார்



கி.பி.அரவிந்தன்

புதினப்பலகை ஆசிரியரும், புதினப்பலகை குழுமத்தின் முதன்மைப் பங்காளரும், ஈழ விடுதலைப் போராட்ட முன்னோடிகளில் ஒருவருமான கி.பி.அரவிந்தன் (கிறிஸ்தோபர் பிரான்சிஸ்) இவ்வுலக வாழ்வை நீத்தார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக புற்றுநோயுடன் போராடி வந்த அவர், பிரான்சில் உள்ள மருத்துவமனையில் சாவடைந்தார்.

கவிஞரும், எழுத்தாளருமான கி.பி.அரவிந்தன், ஈழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர்.

அக்காலப் பகுதியில் சுந்தர் என அழைக்கப்பட்ட அவர், ஈழப்போராட்டத்தில், முதன்முதலில் சயனைட் அருத்தி உயிர்த்தியாகம் செய்த, ஈழப் போராட்ட முன்னோடியான பொன்.சிவகுமாரனுடன் இணைந்து செயற்பட்டவர்.

1990களின் முற்பகுதியில் பிரான்சில் குடியேறிய அவர், அங்கிருந்து கடைசி வரை ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக பணியாற்றி வந்தவராவார்.

1953ம் ஆண்டு கிறிஸ்தோபர் பிரான்சிஸ் என்ற இயற்பெயருடன் யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர், பாடசாலைப் படிப்பை ஆரம்ப காலத்தில் நெடுந்தீவிலும் பிறகு மட்டக்களப்பிலும் முடித்தார்.

1972 ஆம் ஆண்டின் சிறிலங்காவின் அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரான துண்டறிக்கையை விநியோகித்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு கைதான மூன்று தமிழ் இளைஞர்களில் கி.பி.அரவிந்தனும் ஒருவர்.

1976 ஆம் ஆண்டில் மீண்டும் கைதாகி டிசம்பரில் விடுதலையானார்.

அதையடுத்து, ஈரோஸ் அமைப்புடன் இணைந்து பணியாற்றிய அவர், 1990களின் ஆரம்பத்தில் பிரான்சுக்குப் புலம்பெயர்ந்தார்.

அங்கிருந்து அவர், பி.பி.சி. தமிழோசையின் பாரீஸ் நகர செய்தியாளராகப் பணியாற்றியதுடன், ஐரோப்பியத் தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்து வந்தவர்.

பல கவிதைத் தொகுதிகளையும், நூல்களையும் எழுதியுள்ள கவிஞர் கி.பி.அரவிந்தன் அவர்களின் கவிதைகளின் பிரெஞ்சு மொழித் தொகுப்பு, 'Le messager de l'hiver' 'ஓர் உறைபனிக் காலக் கட்டியக்காரன்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

அப்பால் தமிழ் என்ற இணைய சஞ்சிகையை நடத்திய அவர், 2009ம் ஆண்டு புதினம் இணையத்தளம் நிறுத்தப்பட்ட பின்னர், புதினப்பலகை இணையத்தளத்தை வெளிக் கொணர்வதில் முக்கிய பங்காறி கடைசி வரை அதற்காக உழைத்து வந்தார்.

அவருக்கு அஞ்சலி செலுத்தும் நோக்கில் திருகோணமலையில் நினைவேந்தல் நிகழ்வொன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது .

எதிர்வரும் 15ம் திகதி மாலை 4 மணிக்கு யெசுவிட் ஆங்கில கலாசாலை மண்டபம், உடதுறைமுக வீதி, திருகோணமலை (புனித சூசையப்பர் கல்லூரிக்கு பின்புறமாக)யில் இந்நினைவேந்தல் நிகழ்வு நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## ஐ.்.போனில் கலெண்டர்

கூகுள் நிறுவனம் தற்போது அப்பிள் நிறுவனத்தின் iPhone சாதனங்களுக்காக கூகுள் கலெண்டரினை அறிமுகம் செய்துள்ளது. கடந்த வருடம் அன்ரோயிட் சாதனங்களுக்காக இந்த அப்பிளிக்கேஷன் அறிமுகம் செய்யப்பட்டிருந்த நிலையிலேயே சில புதிய அம்சங்களை உள்ளடக்கியதாக iPhoneகளில் பயன்படுத்தக்கூடிய வகையில் இது வெளியிடப்பட்டுள்ளது.

Google Calendar

## புது அனுபவம் தரும் டிவி



Vuzix எனும் நிறுவனம் IWear 720 Video Headphone எனும் சாதனத்தை அறிமுகம் செய்துள்ளது. இச்சாதனமானது முப்பரிமாண மற்றும் இருபரிமாண வீடியோக்களை இயக்குவதற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் 130 அங்குல திரை உடைய தொலைக்காட்சியை 10 அடிகள் தொலைவிலிருந்து பார்க்கும் அனுபவத்தினை வழங்கக்கூடியதாகவும் காணப்படுகின்றது. Open-Source Virtual Reality (OSVR) எனும் இயங்குதளத்தில் செயற்படும் இச்சாதனத்தில் ஹோம் விளையாடக்கூடியதாகவும், மாயை நிறைந்த காட்சிகளின் அனுபவத்தினை பெறக்கூடியதாகவும் இருக்கின்றது.

## லூமியா 640




மைக்ரோசொப்ட் நிறுவனம் Lumia 640 ஸ்மார்ட் கைப்பேசியினை வடிவமைத்துள்ளது. இதனை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது.

5 அங்குல அளவுடைய HD திரையினைக் கொண்ட இக்கைப்பேசியானது 1.2GHz வேகத்தில் செயற்படவல்ல quad core Qualcomm Snapdragon 400 Processor, பிரதான நினைவகமாக 1GB RAM மற்றும் 8GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினைக் கொண்டுள்ளது.

## புது கொன்ரோலர்

ஆப்பிள் ஐபோன் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றதை தொடர்ந்து ஆப்பிள் வாட்ச் விற்பனைக்கு வரவிருக்கிறது. அதில் ஏராளமான சிறப்பம்சங்கள் அடங்கியுள்ளன.

1. உடல் நலம் குறித்து முக்கிய தகவல்களை அளிக்கும் விதமாக பல சென்சார்களும், செயலிகளும் இருக்கின்றது.
2. உங்களுக்கு தேவையானவற்றை அறிந்து கொள்ளும் Option-யை ஆப்பிள் வாட்ச் மிகவும் எளிமையாக்கியுள்ளது, Watch Screen-ல் கீழ் இருந்து மேல் புறமாக Swipe செய்தால் போதுமானது.
3. புதிய ஆப்பிள் வாட்ச் கிட்டத்தட்ட அனைத்து செயலிகளையும் சப்போர்ட் செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
4. பல கருவிகளை போன்றே ஆப்பிள் வாட்ச்களையும் நீங்கள் உங்களது குரலை கொண்டு இயக்க முடியும்.
5. ஐபோனுக்கு வரும் Notification-யை அறிந்து கொள்ள ஆப்பிள் வாட்ச் எச்சரிக்கை செய்யும்.
6. ஐபோனுக்கு வரும் குறுந்தகவல்களை ஆப்பிள் வாட்ச் மூலம் பார்த்து அதற்கு பதில் அளிக்கவும் முடியும்.
7. ஆப்பிள் வாட்ச் மூலம் நீங்கள் அழைப்புகளை ஏற்க முடியும்.
8. ஆப்பிள் வாட்ச் பேட்டரியானது, அதிகபட்சம் 18 மணி நேரம் வரை இருக்கும் என ஆப்பிள் நிறுவனத்தின் CEO தெரிவித்துள்ளார்.



## இராட்சத எலி

சுமார் 3 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் பூமியில் வாழ்ந்த இராட்சத எலியை போன்ற ஒரு மிருகத்தின் பாகத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். Josephoartigasia monesi என்னும் பெயரிடப்பட்டிருக்கும் இந்த மிருகம் யானையின் தந்தங்கள் போன்ற நீண்ட முன் பற்களை கொண்டிருந்ததாகவும், 1000கி வரையான எடையை கொண்டிருந்ததாகவும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

OTHER

## 500 வயது வரை வாழலாம்

கூகுள் நிறுவனம் தகவல் தொழில்நுட்ப துறை தவிர மற்ற பிற துறைகளிலும் பெரும் முதலீடுகளை செய்து ஆய்வுகளை நடத்தி வருகிறது.


இதுவரை மனிதர்களின் ஆயுளை 120 ஆண்டுகள் வரை நிச்சயமாக நீட்டிக்க முடியும் என்று விஞ்ஞானிகள் கூறி வந்த நிலையில், மனிதர்களின் வாழ்நாளை அதிகப்பட்சமாக 500 ஆண்டுகள் வரை நீட்டிக்க முடியும் என கூகுளின் புதிய ஆய்வுகளுக்கான தலைமை அதிகாரி பில்மார்ஸ் தெரிவித்துள்ளார்.

## புற்றுநோயைத் தீர்க்கும் வயாகரா

வயாகரா மாத்திரை புற்றுநோயை குணப்படுத்த உதவும் என்று ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. அதில், சாபரோன் புரோமன் மனித செல்கள் மற்றும் பக்டீரியாக்களின் புரோடீனை படிய செய்யும் தன்மை கொண்டது என்றும் அது வயாகராவில் உள்ளது எனவும் தெரியவந்தது. எனவே வயாகராவுடன் புற்றுநோய் எதிர்ப்பு மருந்தை கலந்து சிகிச்சை அளித்த போது புற்றுநோய் மற்றும் அல்சைமர் போன்ற நோய்கள் குணமாயின என கூறப்படுகின்றது.



## சத்தமில்லாத டிரோன்கள்



டிரோன்கள் பொதுவாக எடை குறைந்த ஒளி ஊடுரும பொருட்களால் செய்யப்படுகிறது. இவை விமானத்திற்கு எளிதாக பறக்கும் தன்மையை கொடுக்கிறது. இது எப்போதும் தன்னுடன் infra-red cameras, Global Positioning Systems (GPS), laser or GPS guided missiles ஆகியவற்றை கொண்டிருக்கும். இது தேவையற்ற சிறிய அசைவையும் பதிவு செய்யும்.

பல வகை வடிவங்களில் உருவாக்கப்படும் இவ்வகை ட்ரோன்கள் ரிமோட் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. இந்த வேலையை programmers செய்கின்றனர். பயங்கர அழிவை உண்டாக்கும் இந்த வகையான டிரோன்கள் தீவிரவாதிகளை தேடித் தேடி ஏவுகணைகளால் தாக்கும் வல்லமை கொண்டது. அமெரிக்கா தனது தாக்குதலுக்கு MQ-9 Reaper, MQ-1B Predator என்ற இரண்டு வகை டிரோன்களை பயன்படுத்துகிறது.

# குறுக்கெழுத்து புதிர் 052

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | வு | 2 | 16 | 3 வ | | ■ |
| 4 | 5 | 19 | ■ | | | | 17 | ■ |
| வு | | ப | 6 | | | | | 18 |
| 7 | 20 | | | | ■ | க | க | |
| ■ | | ■ | | 8 | 21 | | | |
| ■ | | 22 | ■ | ■ | ண் | 9 | | |
| 10 | | 11 | | | | | ■ | 23 |
| ■ | ■ | 12 | | தி | | 15 | | ண் |
| 13 | | | | 14 | | | | |

### இடமிருந்து வலம்

1. தோண்டி எடுப்பதைக் குறிக்கும் சொல்
2. இம்மாதம் வரவிருக்கும் கொண்டாட்டம்
3. தாவரத்தின் பச்சையத்திற்கு இதுவும் தேவையானது.
4. இது மிரண்டால் சுனாமி தான் - திரும்பியுள்ளது.
5. இந்தியாவில் இம்மாதத்தில் மலிவு விற்பனைக்கு குறையிருக்காது.
6. இதற்காகத் தானே இத்தனை பாடும்.
7. செய்யும் வேலையை சிறப்பாக செய்தால் இது தானே தேடி வரும்
8. தொழிற்சாலையை இவ்வாறும் அழைப்பர் - திரும்பியுள்ளது.
9. உயரமானது, பெறாமலே இதுவும் பிள்ளை தான். ஈரெழுத்து மாறியுள்ளது.
10. புலியினங்களில் ஒன்று
11. சிவாவின் பிரபலமான பாடலொன்றின் முதலெழுத்து - திரும்பியுள்ளது.
12. சூரியநாராயணரிடமிருந்து வரம்பெற்ற பெண்
13. மலைமுரசின் ஆதரவுடன் 25,000 புத்தகங்களை திரட்டும் முயற்சி எங்கு நடைபெறுகின்றது?
14. இக்கால வழக்கத்தில் ...................... சிக்கிட்டான்டா!
15. தூளை இவ்வாறும் கூறுவர்.

### மேலிருந்து கீழ்

1. சுனாமி இதனை ஏற்படுத்தக்கூடியது.
2. இது சாதாரணமாக இல்லாமல் பெரும் குழம்பானால் அழிவுதான்.
3. கண்டவுடன் கூறப்படுவது.
5. இது அடித்தே மரங்கள் வெட்டப்படும்.
6. மழை காலத்தில் முளைப்பது.
9. இந்தியாவிலிருந்து இலங்கையின் திசை
16. பாரம்பரிய ஆடை .............. , தாவணி
17. [illegible]
18. [illegible] இவ்வாறு அழைக்கலாம்.
19. விஜயை தூக்கி விட்ட த்ரிஷாவுடனான படம்.
20. சிநேகா இதற்கு அரசி
21. பச்சைக்கிளியுடன் வீற்றிருப்பவள்
22. மகாபாரத யுத்தத்தில் இதை ஊதியே யுத்தம் தொடங்குவர்
23. பூக்கொத்தை பூ.............. என்றும் கூறலாம்

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :**

முடிவுத்திகதி : 19.03.2015

மலைமுரசு. இல - 159ஏ,
கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

## புதிர் 051 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 பூ | 14 மா | லை | ■ | 2 செ | ந் | ம | 15 தா | ரை |
| 3 ம | ர் | லி | ன் | ம | ன் | 4 றோ | மி | யோ |
| ரா | ப் | ■ | 16 க | வி | தை | ■ | ர | ■ |
| ங் | க | ■ | ட | ■ | 5 க | ட | ம் | ■ |
| ■ | ம் | ■ | வு | ■ | ல | ■ | 6 நீ | று |
| 7 ம | ட | 17 ம் | ச் | ■ | வி | ■ | க் | ■ |
| த | ம் | த | 8 சீ | வ | ன் | ■ | 9 ரோ | ம் |
| யா | ■ | 10 பு | ட் | டு | பா | ■ | ■ | ■ |
| னை | ■ | றா | டு | 11 பு | 12 கை | தி | 13 யோ | கி |

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

திருமதி. கௌசல்யா
டொக்யாட்வீதி, திருகோணமலை

பாராட்டு பெறுவோர் :

திரு. சந்திரபோஸ்
செல்வன். ச. டனுசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம் "தமிழுக்கு எண் 1ஐ அழுத்தவும்"

### இயக்குனர் ராம்பிரகாஷ் ராயப்பாவின் தினேஷ், பிந்து மாதவி நடிக்கும்

படத்தில் காதல், நகைச்சுவை தாண்டி கொஞ்சம் சயின்ஸும் பேசப்பட்டுள்ளது என்பது தான் கொஞ்சம் வித்தியாசம். நகுல் கல்லூரி மாணவர்களுக்கு ப்ராஜக்ட் எழுதி தருபவராக வர, இவருக்கு ஐஸ்வர்யா தத்தாவின் அறிமுகம் கிடைக்கிறது. சில நாட்களில் இவர்கள் நட்பு வழக்கம் போல் காதலாக மாறுகிறது. அதேபோல் இன்னொரு பக்கத்தில் பில்டிங் கன்ஸ்ட்ரக்ஷனில் வேலை பார்க்கும் தினேஷிற்கு, பிந்து மாதவி மீது காதல், இதையெல்லாம் விட காமெடியன் சதீஸும் இப்படத்தில் மூன்றாவது ஹீரோவாக வந்து செல்கிறார். ஏனெனில் படத்தில் இவருக்கும் ஜோடி உண்டு, இவர்கள் எல்லோரும் எப்படி காதலில் இணைந்தார்கள், என்பதை மட்டும் இல்லாமல் பல சயின்ஸ் சுவாரசியங்களை கூறி முடிகிறது இப்படம்.

நகுல் ஒரு இளம் விஞ்ஞானி போல் யதார்த்தமாக நடித்துள்ளார். நகுலின் அம்மாவாக வரும் ஊர்வசி, வழக்கமான தன் கலகல நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். அட்டக்கத்தி தினேஷ் எப்போதும் போல் தன் அப்பாவி முகத்தில் நடிக்கிறார். சதீஸ் படம் முழுவதும் வந்து நகைச்சுவைக்கு கேரண்டி கொடுக்கிறார். பிந்து மாதவியும் தன் கதாபாத்திரம் உணர்ந்து நன்றாகவே நடித்துள்ளார். சில காட்சிகளில் சயின்ஸ் பற்றி பேசும் போது கொஞ்சம் சலிப்பு தட்டுகிறது. திரைக்கதை கொஞ்சம் தடுமாறுகிறது.

மொத்தத்தில் தமிழுக்கு எண் 1ஐ ரசிகர்கள் அழுத்தலாம்.



## தேவாவுடனா வேணாமே!

சிம்புவுடன் மீண்டும் நடிச்சது ஒரு விபத்து ஆனா இதே மாதிரி பிரபுதேவாவுடன் நடிக்க மட்டும் கூப்பிட்டுவிடாதீர்கள் என தன்னிடம் கால்ஷீட் கேட்டு வந்த தயாரிப்பாளரிடம் கேட்டுக் கொண்டாராம் நயன்தாரா. இவர் இப்போது தமிழ் தெலுங்குப் படங்களில் பிஸியாக உள்ளாராம்.





## சன்னிக்கு திரும்பும் ரஜனி ரசிகர்கள்

ரஜினி ஸ்டைலில் சன்னிலியோன் நடனமாடியுள்ளதால் இனி ரஜினி ரசிகர்களுக்கு அவரை ரொம்பப் பிடித்துப்போகும் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன. பாலிவுட் நட்சத்திரங்கள் பலரும் தங்களின் சமீபத்திய படங்களில் ரஜினியைப் பற்றி ஏதாவது ஒரு பாடலை வைத்து நடனமாடுகின்றனர் இதில் சென்னை எக்ஸ்பிரஸ் லுங்கி டான்ஸ் பாடல் செம ஹிட் ஆனது அதுமுதல் பலரும் ரஜினியை ஏதாவது ஒரு வகையில் புகுத்தி விடுகின்றனர் தங்கள் படம் வெற்றி பெறுவதற்காக.

"எட்டுதிக்கும் மதயானை" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......



## தல க்கே வெற்றி நிச்சயம்



அஜித் தற்போது சிவா இயக்கத்தில் நடிக்க தன்னை தயார் செய்து வருகிறார். இந்நிலையில் வட இந்தியா இணையத்தளம் ஒன்று சால்ட்ரூபெப்பர் லுக்கில் எந்த நடிகர் அழகாக உள்ளார் என்று ஒரு போட்டியை வைத்தது.இதில் நேற்று வரை அக்ஷய் குமார், அமீர் கான், மிலன், ஹாலிவுட் நடிகர் ஜார்ஜ் க்லோனி ஆகியோரை பின்னுக்கு தள்ளி அஜித் முன்னணியில் இருக்கின்றார்.

## குரல் மாற்றும் விஜய்

இளைய தளபதி விஜய் என்றாலே நம் நினைவிற்கு வருவது நடனம் தான், தென்னிந்தியாவில் இவரை போல் எளிதாக யாராலும் நடனமாட முடியாது. இந்நிலையில் தற்போது இவர் நடித்து வரும் புலி படத்தில் இவருக்கு இரண்டு விதமான கதாபாத்திரம். இதுவரை இரட்டை வேட படங்களில் பெரிதாக மாற்றம் செய்யாத விஜய், இந்த படத்தில் வித்தியாசம் காட்ட குரலை மாற்றி நடிக்கப்போகிறாராம்.

## 10 அவதாரங்களில் உத்தம வில்லன்

கமல் நடிப்பில் சில வருடங்களுக்கு முன் வெளிவந்த தசவதாரம் மெகா ஹிட் ஆனது. இப்படத்தில் கமல் 10 விதமான கெட்டப்புகளில் நடித்து அசத்தியிருப்பார். அதே போல் உத்தம வில்லனிலும் கமல் 10 அவதாரம் எடுத்துள்ளார். அதாவது இப்படத்தில் கமல் 2 விதமான கெட்டப்புகளில் வருவது மட்டுமில்லாமல், கதை, திரைக்கதை, வசனம், பாடலாசிரியர், தயாரிப்பாளர், பாடகர், இசை ஆலோசகர், உதவி இயக்கம் என 10 அவதாரங்கள் எடுத்துள்ளார்.

## விக்ரம், நயன் கூட்டு

சில வருடங்களுக்கு முன் சூர்யா நடிப்பில் கௌதம் மேனன் துருவ நட்சத்திரம் என்ற படத்தை இயக்குவதாக இருந்தது. ஆனால், சில நாட்களிலேயே அந்த படம் கைவிடப்பட்டது, அதை தொடர்ந்து தான் கௌதம், என்னை அறிந்தால் படத்தை இயக்கினார். தற்போது அந்த துருவ நட்சத்திரம் படத்தை மீண்டும் விக்ரமை வைத்து கௌதம் இயக்கவிருப்பதாக கூறப்படுகிறது. இதில் நயன்தாரா கதாநாயகியாக நடிக்கிறார் எனவும் கிசுகிசுக்கப்படுகிறது.



## இவ்வரிகள் எப்படத்திலுள்ள எப்பாட்டின் வரிகள்?

................

நீ மகுடத்தில் வைர கல்லு
நானோ மழ பேஞ்சா உப்பு கல்லு
ஒன்ன தொடவோ விரல் படவோ
ஒரு பொருத்தம் எனக்கேது

.....................

## இது கிசு கிசு தானே!

நயன், ஸ்டாலின் இருவரும் கூட்டாக சேர்ந்து நடித்த படம் படு வசூல் ஆகியதால் அவர்கள் இருவரும் பல பார்ட்டிகளுக்கு சென்று வருவதாகவும், அடிக்கடி தனிமையில் சந்தித்துக் கொள்வதாகவும் பரவலாக கிசுகிசுக்கப்பட்டு வருகின்றது.

எனினும் இருவரும் இது குறித்து எதுவித தகவலையும் வெளியிடாமல் அமைதி காக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல் 44

# பணக் கொடுக்கல் வாங்கல்

உலகில் யாருக்குத்தான் பணத் தட்டுப்பாடு இல்லை? மிகவும் வசதி படைத்த வர்கள் முதல் அடிப்படை வசதி களும் அற்றவர்கள் வரை பணத் தேவை இருக்கத்தான் செய்கின்றது. அந்த பிரச்சனையை தீர்ப்பதற்கு மனித குலம் கண்டுபிடித்த ஒரே தீர்வு பணக் கொடுக்கல் வாங்கல் தான். இருப்பவர்கள் இல்லாதவர் களுக்கு அவர்களது தேவையை முன்னிட்டு பணம் கொடுப்பதும் அதை ஒரு தவணையில் திரும்ப பெறுவதும் எம் கண்முன்பாக நடைமுறையில் உள்ளது.

வேலையில்லா பிரச்சனை, விலைவாசி உயர்வு, நாட்டின் பொருளாதார வீழ்ச்சி ஆகியன மக்களின் ஏழ்மை நிலைக்கு காரணமாக உள்ளன. எவராவது தமது வருவாய்க்கும், சக்திக்கும் அப்பாற்பட்ட வகையில் செலவுகளை செய்ய முற்படுவார்களா? இல்லை. சந்தர்ப்பம் சூழ்நிலைகள் தான் அவர்களை அந்த நிலைக்கு தள்ளிவிடுகின்றது.

எவரும் தாம் கஷ்டப்படுவதை மற்றவர் களுக்கு மறைத்து மானத்துடன் வாழவே விரும்புவர். சில குடும்ப தலைவிகள் வீட்டில் உப்பு இல்லாவிட்டாலும் கூட அயல் வீட்டுக்கு காட்டிக் கொள்ளாமல் தமது கஷ்டத்தை தம்முடனேயே வைத்துக் கொள்வர். தமது குடும்ப வருமானத்திற்கு ஏற்ப செலவுகளை வரையறுத்துக் கொள்வர். இன்னும் சொல்லப்போனால் தமது எதிர்காலத்துக்கென ஒரு சேமிப்பையும் ஏற்படுத்திக்கொண்டு தம் கண்முன்னே கஷ்டப்படுபவர்களுக்கு பண உதவியும் செய்வர்.

வசதியான நிலையில் உள்ள சிலர் மற்றவர்கள் தமது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய இயலாதநிலையில் பணத்திற்கு கஷ்டப்படும் போது சிறிய வட்டியை பெற்றுக்கொண்டு பண உதவி செய்வர். சமூகத்தில் வதிவிட வசதி அத்தியாவசியம் என கருதப்படுகிறது. ஒரு பெண்ணின் மண வாழ்க்கையை அமைக்க பெரும்தொகை பணம் அவசியமாகின்றது. குடும்ப வருமானத்தை அதிகரிக்க ஏதாவது தொழில்துறை என்று ஆரம்பிக்க முதலீடு அவசியமாக இருக்கின்றது.

இந் நாட்களில் வங்கிகளும் நிதி நிறுவனங்களும் மக்களுக்கு அவசியமான பணத்தை சிறு வட்டிக்கு கொடுத்து அவர்களுக்கு கை கொடுக்க ஆயத்தமாக உள்ளன.

ஒரு குடும்பத்தின் வருமானத்தைப் பொறுத்து இலட்சக்கணக்கில் கூட வீட்டுக்கடனை அவை வழங்குகின்றன.

நிறுவனங்கள் 'லீசிங்' முறையில் 'ஆட்டோ', 'வான்', 'ரிப்பர்', 'லொறி' போன்ற வருவாயை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய வாகனங்களை பெற்றுக்கொடுக்கின்றது.

**(வி.என்.சந்திரகாந்தி)**



அது பலரின் சுயதொழில் வாய்ப்புக்கு வழி வகுக்கின்றது. இளைஞர்கள் வீட்டில் முடங்கிக் கிடக்காமல் சுறு சுறுப்புடன் இயங்குவதற்கு 'லீசிங்' முறை வழிவகுக்கின்றது.

தவிர வியாபார மற்றும் தொழில் ஸ்தாபனங்களை மேம்படுத்தவும் நிறுவனங்கள் தனியாருக்கு கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றன.

இந் நாட்களில் பல வங்கிகளும் நிதி நிறுவனங்களும் மக்களை நேரில் சந்தித்து குடிசைக் கைத்தொழில், வியாபாரம், விவசாயம், கோழி வளர்த்தல், கால் நடைகளை வளர்த்தல் போன்ற முயற்சிகளில் அவர்களை ஈடுபடுத்து வதுடன் பண உதவியும் ஆலோசனையும் வழங்குகின்றன. யுத்த காலத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் இப்படியான ஒத்துழைப்புக்களை மக்களுக்கு இலவச மாக செய்திருந்தாலும் இப்போ அவை செயல் இழந்துள்ளன. அரச, தனியார்துறை, ஊழியர்களுக்கு வங்கிகளும் நிதிநிறுவன ங்களும் பணத்தை குறைந்த வட்டியில் கடனாக வழங்குகின்றன. மறுவளமாக வங்கிகளும் நிதி நிறுவனங்களும் மக்களுக்கு தமது பங்குகளை விற்பதன் மூலம் தமது வியாபாரத்துக்கான முதலீட்டை பெற்றுக்கொள்கின்றன.

இனி கொடுத்த பணத்தை எவ்வாறு வாங்குவது..... அது முடிந்த காரியமா என பார்ப்போம்.

இந் நாட்களில் நட்புக்காகவும் உறவின் அடிப்படையிலும் வாக்கு நாணயத்தில் பண உதவி செய்பவர்கள் அப் பணத்தை மீளப்பெறுவதில் சிக்கல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். உண்மையில் உதவி செய்யப்போய் உபத்திரவத்துக்கு உள்ளாக நேரிடும்! உண்மையில் உறவுகளுக்கு மத்தியிலேயே பணக்கொடுக்கல்வாங்கலில் சீரான தன்மை இல்லாது இருக்கின்றது.

பணக்கொடுக்கல் வாங்கல் என்பது நிச்சயமாக சிக்கலான ஒரு விடயமேயாகும்! அதனால் தான் பணத்தை கொடுப்பவர்கள் பொறுப்பு கேட்கின்றார்கள். நகை, காணி போன்றவற்றிற்கு மக்கள் நம்பி பணம் கொடுக்கிறார்கள். பணத்தை வசூலிப்பதில் பிரச்சனை ஏற்படும் பட்சத்தில் நகை, காணி ஆகியவற்றை சுவீகரித்து கொள்ள முடியுமல்லவா?

இந்த தந்திரத்தை வங்கிகளும் நிதி நிறுவனங்களும் கூட பின்பற்றுகின்றன.

நிறுவனங்கள் 'லீசிங்' முறையில் வாகன கொள்வனவுக்கு பணம் கொடுக்கும் போது வாகனங்களை தமது நிறுவனத்தின் பெயரிலேயே பதிவு செய்கின்றன. பணம் பெற்றவர் தவணைப் பணம் தொடர்ந்து கட்டுப்படாத சந்தர்ப்பத்தில் நிறுவனம் வாகனத்தை கைப்பற்றி ஏலத்தில் விற்று விடும்!



அரச, தனியார், வங்கி ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் கடன் அவர்களது சம்பளத்தில் அறவிடப்படும். நிறுவனங் களின் பங்குகளை வாங்குவதற்கு மக்கள் முதலீடு செய்த பணம் Central Depository System ல் பங்குகளாக பதியப்பட்டு வாடிக்கையாளரின் பெயரில் கணக்கு ஒன்று திறக்கப்படும்.

பங்கொன்றின் முகப்பு பெறுமதி ரூபா 10/= அல்லது பெறுமதி ரூபா 20/= ஆக இருக்கையில் சந்தைப்பெறுமதி நிறுவனத்தின் இலாபமீட்டலை பொறுத்து சில சமயம் உயரும் அல்லது வீழ்ச்சியடையும். பங்குதாரர் தமக்கு ஆதாயம் கிட்டும் வகையில் அவ்வப்போது முடிவுகளை எடுத்து செயற்படவேண்டும்.

இருவருக்கிடையேயான வாக்கு நாணயம் பிறழாத உண்மையானதும் நேர்மையானதுமான கொடுக்கல் வாங்கல் எப்படி பயன்தரும் என்பதை ஒரு உண்மையான அனுபவ பகிர்வு மூலம் பார்ப்போம்.....

நான் வாடகை வீட்டில் வசிக்கவேண்டிய ஒரு காலகட்டம் இருந்தது. 1999ல் நான் குடியிருந்த வாடகை வீட்டு உரிமையாளர் 'பொலிஸில்' முறைப்பாடு செய்யுமளவுக்கு போய் வீட்டை விடும்படி நிர்ப்பந்தித்தார். அப்போது நான் மாகாணதிறைசேரியில் பணிபுரிந்து கொண்டிருந்தேன். எனது கஷ்டத்தை புரிந்து கொண்ட மேலதிகாரிகள் ஐந்து வருட வீட்டுக்கடனை வழங்க முன்வந்தனர். அது சுமார் 5½ இலட்சம் ரூபாவாகும். திறைசேரி வீட்டு கடனை வழங்குவதற்கு சில சட்ட விதிகளை பின்பற்ற வேண்டியிருந்ததால் கொடுப்பனவில் காலதாமதம் இருந்தது.......

அந் நேரம் எனது நண்பரும் கணக்காளருமான திரு.இராஜகுலவீரசிங்கம் திறைசேரியில் பாதீட்டுக்கு பொறுப்பாக இருந்தார். எனது நிலையை அவதானித்த அவர் தானே முன் வந்து வங்கியில் தனக்கிருந்த நிரந்தர வைப்புக்களுக்கெதிராக முற்பணம் எடுத்து, 'காந்தி உடனே வீட்டைக்கட்டு' என்று கூறி பண உதவி செய்தார்.

வீடும் இரண்டரை மாத காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது. திறைசேரிக் கடன் கிடைக்கப்பெற்றதும் நானும் நண்பரின் கடனை அடைத்தேன்!

உண்மையில் பணக்கொடுக்கல் வாங்கல் என்பது. கடன் பெறுபவருக்கு அதன் தேவை மிகமிக அத்தியாவசியமாக இருக்க வேண்டும். அதே நேரம் கடன் வழங்குபவர் அந்த தேவையை சரியாக உணர்ந்து கொண்டும் கடன் பெறுபவரின் நாணயத்தை புரிந்துகொண்டும் கொடுக்கல்வாங்கலை மேற்கொள்ளவேண்டும்.

# தமிழன் முன்னேறியிருக்கானா???

**சஞ்சயன் செல்வமாணிக்கம்**

அண்மையில் எனது நண்பரின் குடும்பநண்பரான சிங்களவர் ஒருவரை கொழும்பில் சந்திக்க நேர்ந்தது. 90களில் மட்டக்களப்பின் பிரபல தளபதியொருவர் பலவந்தமாக இயக்கத்தில் ஆட்களை சேர்த்த காலத்தில் அவர்களிடம் இருந்து தனது மூத்த மகனைக்காப்பாற்ற, கொழும்பில் இருந்த மேற் கூறிய சிங்களவரின் வீட்டில் தங்கவைத்திருக்கிறார்கள் எனது நண்பரின் பெற்றோர். அதற்கு முன்னான காலத்திலிருந்தே அவர்கள் நண்பர்களாய் இருந்திருக்கிறார்கள்.

பலதையும் பேசிக்கொண்டிருந்தோம். அவரின் வீதியில் பல தமிழர்கள் வாழ்கிறார்கள். அனைவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். யுத்தகாலத்தில் அவர்களுக்குத் தேவையான உதவிகளை பெரும்பான்மை சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பதனால் அவரால் செய்து கொடுக்க முடிந்திருக்கிறது. பலரை போலீஸில் இருந்து வெளியே எடுத்துவிட்டிருக்கிறார். வெளிநாட்டு வீசாக்களுக்கு போலீஸ் அத்தாட்சிப்பத்திரம் பெற்றுக்கொடுத்திருக்கிறார். மிகவும் கெடுபிடியான நாட்களில் தனது வீட்டிலும் இளைஞர்களை தங்கவைத்து உதவி புரிந்திருக்கிறார்.

மனிதனுக்கு மனிதத்தன்மையே முக்கியம். இனம், மொழி, மதம் கடந்து மனிதன் மனிதத்தன்மையுடன் வாழவேண்டும் என்றார்.

நாம் பேசிக்கொண்டிருக்கும் போது என்னிடம் இப்படி ஒரு கேள்வி கேட்டார்:

தனது வீட்டிற்கு முன்னால் வயதான தமிழ்த் தம்பதியர் வாழ்ந்து வருவதாகவும், அவர்கள் தன்னிடம் பேசும் போது கூட அவர்களின் முகங்களில் ஒருவித மகிழ்ச்சியும் தெரிவதில்லை என்றும், ஏனைய தமிழர்களுடன் முகம்கொடுத்து பேசுவதில்லை என்றும், ஒரு நாள் அவர்கள் தாம் யாழ்ப்பாணத்தில் உயர்ந்த சாதி என்றும் ஏனையவர்கள் தாழ்ந்தவர்கள் என்று கூறியதாகவும் அதன் போது அவர் அவர்களுடன் காரசாரமான வாக்குவாதத்தில் ஈடுபட்டு தனக்கு அவர்கள் கருத்தில் உடன்பாடில்லை என்று கூறியதாகவும் கூறினார்.

அதன் பின் என்னிடம் நீ அவர்களின் கருத்தை ஆதரிக்கிறாயா? என்றார். நான் இல்லை என்றும், ஆனால் அவர்களை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது என்றும் கூறினேன். காரணம், அவர்களின் சிறுபிராயக் காலங்களில் (40 - 50 களில்) இது ஒரு பெரும் பிரச்சனையாக இருந்தது. அவர்களும் அதே சிந்தனையில் வளர்ந்தவர்கள் என்பதால் அவர்களும் இப்படி இருக்கிறார்கள் என்றும் அவர்களின் சிந்தனையோட்டத்தை இந்த வயதில் மாற்றிக்கொள்வது கடினம் என்றும் கூறினேன்.

அதற்கு அவர் இப்பிரச்சனை இப்போதும் வடக்கில் பெரும்பிரச்சனையாக இருக்கிறதாமே என்றார்.

நான் மௌனமாய் உட்கார்ந்திருந்தேன். பின்பு 50 - 60 களில் தீண்டாமைக்கொடுமையினால் தமிழர்கள் புத்தசமயத்தை தழுவி கல்விகற்றது, தீண்டாமைக் கொலைகள், கல்விமறுப்பு போன்றவையும் இடம்பெற்றது என்றேன். ஏஹம உனாத? (அப்படியும் நடந்ததா?) என்று ஆச்சர்யப்பட்டார். ஆம் என்பது போல் தலையாட்டினேன்.

சற்று நேரத்தின் பின் அவரே, வெளிநாடுகளில் இப் பிரச்சனை இருக்கிறதா என்றார். இல்லை என்று என்னால் கூறமுடியாது ஆனால் நாம் விரும்பத்தகாத அளவுக்கு அங்கும் இப்பிரச்சனை இருக்கிறது, ஆனால் இரண்டாம் சமுதாயத்தினர் இதை பெரிதுபடுத்துவதில்லை என்பது எனது கருத்து என்றேன்.

பொஹோம சந்தோசய், ஏகதமய் மனுஸ்யகம, (மிக்க மகிழ்ச்சி அது தான் மனிதம் என்றார்)

அவரிடம் இருந்து வெளியேறிய போது தமிழன் முன்னேறியிருக்கிறானா? என்று நான் என்னைக் கேட்டுக்கொண்டேன். மனம் ஏனோ மகிழ்ச்சியடைய மறுத்தது.



**கற்பனை கலக்காத உண்மை சம்பவங்கள்!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு நடப்பு

# தேவையா இந்த அரசியல் வாழ்க்கை

இன்று எமது நாட்டில் அரசியலில் ஈடுபடுவோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. எங்கும் எவரும் அரசியல் பற்றிப் பேசுவது மாத்திரமல்ல அதற்கு முக்கியத்துவமும் கொடுத்து வருகின்றார்கள். நாட்டின் தற்போதைய நிலமையே அதற்குக் காரணம். அரசியலை சிலர் பொழுது போக்கிற்காக பயன்படுத்துவார்கள். சிலர் அதில் இலாபம் பெறும் நோக்குடனும் சிலர் பொதுப் பயன்பாட்டின் நோக்குடனும் அரசியலில் ஈடுபடுவார்கள்.

இலாபம் எனக் கூறும் போது பணம், பொருள் பண்டம், சொத்து, கௌரவம், புகழ் என்பவற்றை அடிப்படையாகக் கொள்ளலாம். பொதுப்பயன்பாடு எனக் கூறும் போது பொது நலத்தை மையமாகக் கொண்டு தான் வாழும் பிரதேசத் திற்கும், அங்கு வாழும் மக்களுக்கும் தேவையானவற்றை பெற்றுக் கொடுப்பதையும் நோக்காகக் கொள்ளலாம்.

இன்று அரசியல்வாதிகளுக்குப் பின்னால் திரிந்தவர்கள் தம் வாழ்க்கையை இழந்து வீதியில் நிற்கின்றனர். அதுமாத்திரமல்ல தீய பழக்கங்களுக்கு அடிமையாகி சமூகத்தினால் ஓரங்கட்டப்பட்டவர்களாக கணிக்கப்பட்டுள்ளனர். அரசியலில் எதிர்நீச்சல் போடுவதற்காக சில அரசியல்வாதிகள் குண்டர்களை வைத்து ள்ளனர். குறித்த அரசியல்வாதி அரசியலில் இருந்து ஓரங்கட்டப்படும் போது அந்தக் குண்டர்களின் கதை அதோ கதியே.

கதிரேசன் க.பொ.த உயர்தர பரீட்சை எழுதினாலும் பல்கலைக்கழகத்திற்கோ, கல்வியற் கல்லூரிக்கோ செல்ல முடியவில்லை. காரணம் உரிய பரீட்சையில் அவன் பெற்ற புள்ளிகள் போதுமானதாக இருக்கவில்லை. இனிமேல் மேற்கொண்டு படிப்பில் ஆர்வம் காட்டுவதோ அல்லது தொடர்ந்து படிப்பதோ இல்லை என தனக்குள் திடசங்கற்பம் பூண்டான் கதிரேசன். எப்படியாவது ஒரு தொழிலை தேடுவதே அவனது பிரதான நோக்கமாக இருந்தது.

ஏற்கனவே எதிர்கட்சியிலிருந்து ஆளும்கட்சிக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கட்சி தாவி இருந்தார். எமது நாட்டில் கட்சி தாவுதல் என்பது பெரிய விடயமல்ல. அவ்விதம் தாவியதற்கு காரணம் மிகப்பாரதூரமான குற்றச் செயலில் சிக்கியிருந்ததே. அநேகமான கட்சித் தாவுதல்கள் இடம்பெறுவதற்குக் காரணம் தாம் முன்னர் செய்த குற்றங்களின் நிமித்தம் கிடைக்கவிருக்கும் தண்டனைகளிலிருந்து தப்பிக் கொள்ளவே.

குறித்த பாராளுமன்ற உறுப்பினர் மிகவும் செல்வாக்கு மிக்கவர் என்பதால் ஆளும் கட்சி அவரை ஏற்று பொதுத் தேர்தலில் பிறிதொரு தொகுதியில் ஆளும் கட்சி சார்பில் போட்டியிடுமாறு கேட்டிருந்தது. அந்த பாராளுமன்ற உறுப்பினரோ தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேறு வழியின்றி ஆளும் கட்சியின் பணிப்பை ஏற்று குறித்த தொகுதியில் தேர்தலுக்கான நடவடிக்கையில் ஈடுபட்டார். அவருக்கு அந்த தொகுதியும் அங்கு வாழும் மக்களும் புதியவர்களாக இருப்பினும், ஆளும் கட்சியின் சவாலை ஏற்று களத்தில் இறங்கினார். பணம் போதிய அளவு கையில் இருந்தால் எதைத்தான் செய்ய முடியாது? பணத்தை தேர்தலுக்காக மனம் போன போக்கில் செலழித்தார்.

அந்தத் தொகுதி மக்கள் அவரின் நடவடிக்கைகளைக் கண்டு வியந்தனர். மேலும் அவர் ஆளும் கட்சியினை சார்ந்தவர் என்பதனால் குறித்த தொகுதி மக்களின் அபிலாசைகள் துரிதகதியில் அங்கு நிறைவேற்றி வைக்கப்பட்டது. இது தான் தக்க சமயம் என நினைத்த கதிரேசனும் அவனது சகாக்களும் பொதுத் தேர்தலில் அவருக்கு ஆதரவு திரட்டும் பணியில் முழு மூச்சுடன் செயல் பட்டனர். குறித்த பாராளுமன்ற உறுப்பினர் குறுகிய காலத்தினுள் அம்மக்களிடையே தனக்கென இடம் பிடித்துக்கொண்டார். வழமையாக அத்தொகுதியில் போட்டியிட்டு தலைமுறை தலைமுறையாக வெற்றிவாகை சூடும் கட்சிக்காரர்களுக்கு புதியவரின் வருகை பெரும் சவாலாகவே அமைந்திருந்தது.

அந்தத் தொகுதியில் அரசியல் மிக காரசாரமாக எங்கும் வியாபித்திருந்தது. பலரின் ஆதரவு அந்த புதிய வேட்பாளரின் பக்கம் அலைவீசியது. கதிரேசனுடன் சுமார் பத்துப் பேர் சேர்ந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் அவனின் பாடசாலை நண்பர்களே. அவர்களும் கதிரேசனைப் போன்று வேலையற்றவர் கள். அங்கு வேட்பாளராக களமிறங்கியுள்ள புதியவர் கதிரேசனையும் அவரது சகாக்களையும் முழுமையாக நம்பினார். அவர்களும் புதியவருக்கு விசுவாசமாக நடந்து அன்றைய பொதுத்தேர்தலில் வெற்றி வாகை சூட வழி சமைத்தனர்.

தனக்காக இரவு பகல் பாராது கஷ்டப்பட்டு உழைத்த கதிரேசன் போன்றவர்களை நன்கு கவனித்தார். எந்த நாட்டிலும் அரசியலில் மிளிர, வெற்றி பெற பணம் இன்றியமையாத ஒன்றே. ஆளும் கட்சி அவரின் வெற்றியைக் கண்டு வியந்து விட்டது. அதனால் அவருடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கௌரவமிக்க அமைச்சுப் பதவியை அவருக்கு அக்கட்சி வழங்கியது. அந்தப் பதவி குறித்த அரசியல்வாதி மேலும் உயர உதவியாக இருந்தது.

அவர் கதிரேசனை தனது இணைப்பாளராக இணைத்துக் கொள்ள விரும்பினாலும், அவன் அப்பதவியை விரும்பவில்லை. காரணம் அவர் ஒரு காலத்தில் ஓரங்கட்டப்பட்டு வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படும் பொழுது அவனும் சேர்ந்து வீட்டிற்கு போக நேரிடும் என்பதே.

அவன் அவரின் பரிந்துரையுடன் பொதுச்சுகாதார பரிசோதகர் பதவியை பெற்றுக்கொண்டான். அப்பதவி அவனது கல்வித் தகைமைக்கு பொருத்தமானதாக இருந்தது. அவ்வாறே அவனது சகாக்களுக்கும் தத்தம் கல்வித் தகைமை தொழிற்தகைமை ஆகியவைகளுக்கு ஏற்ப அப்பாராளுமன்ற உறுப்பினரின் உதவியுடன் அரசாங்க உத்தியோகங்களை பெற்றுக்கொண்டனர்.

கதிரேசன் கல்முனை வலையத்திற்கு தெரிவு செய்யப்பட்டதால் கடமையை பொறுப்பேற்க அவன் அங்கு செல்லவேண்டியதாயிற்று. அவன் மிகவும் கடவுள் நம்பிக்கை கொண்டவனாக இருந்ததால் கல்முனை மண்ணில் காலடி எடுத்து வைத்ததும் முதன் முதலில் அவன் சென்ற இடம் அங்குள்ள பிள்ளையார் கோவில் ஒன்றுக்கே. அங்கு ஒரு பையன் கோவில் படிக்கட்டில் சுருண்டு படுத்துக் கிடந்தான். கதிரேசன் அவனைப் பார்த்ததும் கவலைப்பட்டு அவனை எழுப்பி அவனிடம் பேசி சில விபரங்களைப் பெற்றுக்கொண்டான். அந்நேரத்தில் குறித்த கோவிலின் பிரதம குருக்கள் அவ்விடத்திற்கு வந்து அவர்களுடன் உரையாடலில் கலந்து கொண்டது மட்டுமல்லாமல் அந்தப் பையனின் பூர்வீகம் பற்றியும் கூறினார்.

அதுமாத்திரமல்ல கதிரேசன் யாரென அறிந்திருந்த அக்குருக்கள் கோவில் வளவிலுள்ள அறையொன்றில் தங்க வைத்தார். கதிரேசன் குருக்களுக்கு நன்றி கூறியதோடு, அப்பையனை தன்னோடு வைத்துக் கொள்வதற்கான அனுமதியை குருக்களிடம் இருந்து பெற்றுக் கொண்டான்.

எப்படியும் அந்தப் பையனை கற்பித்து பெரியவனாக்க வேண்டுமென்பதில் கதிரேசன் வெறியாக இருந்தான். தனது உத்தியோக அரசியல் செல்வாக்கை பிரயோகித்து கல்முனை கல்லூரி ஒன்றில் அப்பையனை சேர்த்து அவனுக்கு தேவையான வசதிகளை கிரமமாக வழங்கி வந்தான். சமூகத்தில் அந்தப் பையனை நல்ல நிலைக்கு கொண்டுவர வேண்டுமென்பதே கதிரேசனின் குறிக்கோள். சிறுவயதில் தான் பட்ட கஷ்டத்தை நன்கு உணர்ந்ததினாலே கதிரேசன் அந்தப் பையனுக்கு உதவ முன்வந்தான். அந்த பாராளுமன்ற உறுப்பினர் இருக்கும் வரை அவனுக்கு ஏது குறை? எதை வேண்டுமோ அதையெல்லாம் அடைந்து விடலாம் தானே!

2004ஆம் ஆண்டு மார்கழி 26ஆம் திகதி நம் நாட்டில் ஏற்பட்ட கொடிய அனர்த்தமான சுனாமி பேரலையினால் கல்முனைப் பிரதேசம் கடும் பாதிப்புக்குள்ளாகியது. அவ்வேளையில் பல உயிர்களை அப்பேரலை காவு கொண்டது. பல குடும்பங்கள் நிர்க்கதியாகின அதில் ஒரு குடும்பத்தை சேர்ந்தவன் தான் பிள்ளையார் கோவில் படிக்கட்டில் அன்று படுத்துக் கிடந்த அந்தப் பையன்.

அன்று பெற்றோர், உற்றோர், உறவினர் அனைவரையும் இழந்த அந்தப் பையன் தனித்து விடவில்லை. இன்று அவனுக்கு எல்லாமே கதிரேசன் தான். பலரை அரசியல், படுகுழியில் தள்ளினாலும் கதிரேசன் போன்ற கருணை உள்ளம் கொண்டர்கள், நல்லதை சிந்திப்பர்கள் என்றுமே கைவிடப்படு வதில்லை.

- பாலையூற்றான் -



இப்படியும் நடக்கலாம்

## வீடு வாங்கினால் மனைவி இலவசம்



இந்தோனேஷியாவில், சாதாரண வீடு விற்பனைக்கான விளம்பரம் போல தொடங்கும் விளம்பரத்தின் இறுதியில், "ஒரு அரிய வாய்ப்பு" இந்த வீட்டை வாங்குபவர் அதன் உரிமை யாளரிடம், தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்கலாம் என்று கூறப்பட்டிருந்தது. மேலும் அந்த விளம்பரத்தில் வீட்டின் உரிமையாளரான வீனா லியா (40) என்ற பெண்ணின் புகைப் படமும் வெளியாகியுள்ளது.

## கிண்டலடித்ததால் கைதாகிய அழகி



துருக்கியில் ஊடக சுதந்திரங்கள் ஒடுக்கப்பட்டு வருவதாகவும் சமூக வலைதள பதிவுகள் ஒடுக்கபடுவதையும் எதிர்த்து துருக்கி நாட்டின் முன்னாள் அழகி மெர்வே புயுக்சரக் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஜனாதிபதிக்கு எதிராக கிண்டலான கவிதை ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்த கவிதை மூலம் துருக்கி ஜனாதிபதி எர்டோகனை, அவர் களங்கப்படுத்தி விட்டதாக எழுந்த குற்றச்சாட்டின் பேரில் இவரை கால்துறையினர் கைது செய்துள்ளனர்.

## மூதாட்டியை பலாத்காரம் செய்த சிறுவர்கள்

முதியோர் இல்லம் ஒன்றிற்குள் நுழைந்த 15, 14 வயதான இரு பள்ளி மாணவர்கள் 87 யதான மூதாட்டி ஒருவரை முரட்டுத்தனமாக கற்பழித்ததுடன், அங்கிருந்த 2 பாட்டில் பிளீச்சிங் பவுடர் கலந்த கரைசலை வாயில் ஊற்றி அவரை கொல்ல முயற்சித்து தப்பியோடிய இருவரையும் காவலாளிகள் பிடித்து காவல் துறையினரிடம் ஒப்படைத்தனர்.

இவ்வழக்கை விசாரித்த நீதிபதி, 18 ஆண்டுகள் நிறைவடையும் வரை அவர்கள் சிறுவர் சீர்திருத்த பள்ளியிலும், அதன்பின் 30 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

- அவுஸ்திரேலியாவில் கிம் டேவிசன் என்பவர் தன் 3 குழந்தைகள் மற்றும் தன் தோழியுடன் நதியில் விளையாட சென்றுள்ளார். அப்போது கிம்மின் குழந்தை ஒன்று யாரோ தன்னை தண்ணீருக்குள் மூழ்கடிக்க முயல்வதாக கூறியுள்ளார். எனினும் அதை பெரிதாக எடுத்து கொள்ளாமல் அனைவரும் விளையாடிவிட்டு வீடு திரும்பியுள்ளனர். இதன்பின் தாங்கள் எடுத்த புகைப்படங்களை பார்த்தபோது தன் குழந்தையின் பின்புறம் கருப்பு நிற கண்களுடன், முடியை விரித்தப்படி கோரமான உருவத்தில் பேய் ஒன்று இருந்தது புலப்பட்டுள்ளது. இதை பற்றி அவர் இணையத்தில் ஆராய்ந்தபோது, சுமார் 100 வருடங்களுக்கு முன்பு அந்த நதியில் 11 வயது சிறுமி இறந்ததாகவும், அதனால் அந்த இடம் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.
- பிரித்தானியாவை சேர்ந்த பெண் ஒருவர், தனது ஊனமுற்ற 3 குழந்தைகளை பராமரிக்க முடியாததால் அவர்களை கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
- அர்ஜண்டினாவில் தன் குழநதையை பராமரிப்பதற்காக 25 வயதான ஓர் பெண்ணை ஏற்பாடு செய்திருந்தார் அக்குழந்தையின் தாயார். வீட்டில் பொருத்தப்பட்டிருந்த கமெராவின் உதவியுடன் தன் குழந்தையை பார்த்த போது, அப்பெண் குழந்தையை மிகக் கொடூரமாக அடித்துவிட்டு அதனுடைய உணவை அப்பெண் சாப்பிட்டுள்ளார். இதையடுத்து அப்பெண் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அலசல்

# இந்தியாவையும் விக்னேஸ்வரனையும் ஏன் தாக்குகின்றார் ரணில்??

சிறிலங்கா கடல் எல்லைக்குள் அத்துமீறி உள்நுழைகின்ற இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படும் என ரணில் கூறியது போல, ராஜபக்சாக்கள் ஒருபோதும் இவ்வாறான ஒரு அச்சுறுத்தலை விடுக்கவில்லை.

இவ்வாறு 'சிலான் டுடே' நாளிதழில், உபுல் ஜோசப் பெர்னான்டோ எழுதியுள்ள செய்தி ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். இதனை 'புதினப்பலகை'க்காக மொழியாக்கம் செய்துள்ளவர் 'நித்தியபாரதி'.

சிறிலங்கா கடல் எல்லைக்குள் அத்துமீறி உள்நுழைகின்ற இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படும் என சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்த கருத்து, இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதா கட்சி மற்றும் காங்கிரஸ் கட்சி ஆகியவற்றுக்கு அதிர்ச்சியளித்துள்ளது.

இந்தியாவின் நெருங்கிய நண்பனாகத் தன்னைச் சித்தரிப்பவரும், சிறிலங்காவில் வாழும் தமிழ் மக்களுக்கு 13வது திருத்தச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட சாதகமான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை ஆதரித்து பிரச்சாரம் செய்பவருமான ரணில் விக்கிரமசிங்கவே இவ்வாறான அதிர்ச்சி தரும் கருத்தை வெளியிட்டுள்ளார்.

சிறிலங்காவில் மகிந்த ராஜபக்ச அரசாங்கம் ஆட்சி செய்த காலப் பகுதியில், இந்தியா வின் ஆதரவை வென்றெடுப்பதற்காக கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் போன்ற சீன நிதியில் மேற்கொள்ளப்படும் திட்டங்களை எதிர்த்துப் பரப்புரை மேற்கொள்வதற்கான தலைமைப் பொறுப்பை ரணில் ஏற்றிருந்தார்.

இந்நிலையில் தற்போது இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க திடீரென அறிவித்துள்ளமை இராஜதந்திர வட்டாரங்கள் மத்தியில் குழப்பத்தைத் தோற்றுவித்துள்ளது.

சிறிலங்காவில் சீன நலன் கருதி மேற்கொள்ளப்படும் திட்டங்களை எதிர்த்து நிற்கும் வேளையில் தான் ஒரு இந்தியாவின் கைக்கூலி என்ற கருத்தை மறுதலிப்பதற்கான ஒரு நாடகமாகவே ரணில் இவ்வாறான ஒரு கருத்தைக் கூறியிருப்பதாக சிலர் கருதுகின்றனர்.

எது எவ்வாறிருப்பினும், ரணில் தற்போது இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படும் எனக் கூறியது போல, ராஜபக்சாக்கள் ஒருபோதும் இவ்வாறான ஒரு அச்சுறுத்தலை விடுக்கவில்லை.

ரணிலின் திடீர் மாற்றத்திற்குச் சில காரணங்கள் இருக்கலாம்.

இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சி இடம்பெற்ற போது ரணிலுக்கு சரியான அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது. மகிந்தவுக்கு மாற்றான தலைவராகவே காங்கிரசால் ரணில் நோக்கப்பட்டார்.

மகிந்த மீது அழுத்தத்தைப் பிரயோகித்தோ அல்லது பலவந்தமாகவோ அவரை ஆட்சியிலிருந்து கவிழ்ப்பதற்கு காங்கிரஸ் ஒருபோதும் விரும்பவில்லை.

எனினும், ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போதும், மகிந்தவைத் தோற்கடிப்பதற்கான இயலுமையை அவர் கொண்டிருக்கவில்லை என்பதை இந்தியா அவதானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் பா.ஜ.க ஆட்சியமைத்த போது, சீனாவுடனான மகிந்தவின் தொடர்புகள் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக அமையும் எனக் கருதியது. இதன் காரணமாக சிறிலங்காவில் மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் தோற்கடிக்கப்பட வேண்டும் என இந்தியாவின் பா.ஜ.க அரசாங்கம் விரும்பியது.

ரணில் ஒரு எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கொண்டு பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கான ஆளுமையைக் கொண்டிராதமை இந்தியாவை அதிருப்திப்படுத்தியது. இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பொறுப்பேற்ற பின்னர், மோடியைச் சந்திப்பதற்காக பல தடவைகள் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குச் சென்றபோதும் இந்த முயற்சிகள் பயனளிக்கவில்லை.

பா.ஜ.க மற்றும் ஐ.தே.க போன்றன வரலாற்று ரீதியான தொடர்புகளைக் கொண்டிருந்த போதிலும், மோடி, ரணிலைச் சந்திக்கவில்லை. பா.ஜ.க வின் இத்தகைய நிலைப்பாடு ரணிலுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறுதியாக இடம்பெற்ற அதிபர் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க அதிபர் வேட்பாளராகப் போட்டியிடுவதை எதிர்த்து நின்றமை ரணிலுக்கு குழப்பத்தைத் தோற்றுவித்தது. மகிந்தவை எதிர்த்து ரணில் தேர்தலில் போட்டியிட்டால் ரணில் தோற்கடிக்கப்படுவார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்தது.

அதிபர் தேர்தலில் ரணில் போட்டியிடுவதற்கு கூட்டமைப்புத் தடையாக இருந்தது. கூட்டமைப்பின் இத்தகைய நிலைப்பாட்டிற்குப் பின்னால் இந்தியா இருப்பதாக ரணில் ஊகித்திருக்கலாம்.

வடக்கு மாகாண சபை தனது சபையில் தமிழினப் படுகொலை தொடர்பான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிய போது, முதலமைச்சர் விக்னேஸ்வரன் ரணிலையும் அவரது மருமகனுமான பாதுகாப்பு அமைச்சருமான ருவான் விஜேயவர்த்தனவை எதிர்த்துக் கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.


'தனது மாமாவின் எண்ணங்களுக்கு ஏற்ப இராணுவ முகாம்கள் அகற்றப்படமாட்டாது என யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினருடனான சந்திப்பின் போது ருவான் விஜேவர்த்தன உறுதி வழங்கியிருந்தார்.

இதுமட்டுமல்ல நான் இவரது மாமாவான ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த போது, புத்ததேரர்களிடம் வடக்கிலுள்ள எந்தவொரு இராணுவ முகாங்களையும் அகற்றமாட்டோம் என உறுதி வழங்கவுள்ளதாக என்னிடம் தெரிவித்திருந்தார்.

இதனை ரணில் என்னிடம் தெரிவித்ததன் பின்னர், அவரது மாமாவான ஜே.ஆர்.ஜெயவர்த்தன போன்று ஒருபோதும் புன்னகை செய்யாத ரணில் விக்கிரமசிங்க அன்று என்னைப் பார்த்துச் சிறிது புன்னகைத்தார்.

'வருகின்ற பொதுத் தேர்தல்களுக்காக நான் மகாநாயக்க தேரர்களின் மனங்களைக் குளிர்ச்சியடையச் செய்யப் போகிறேன்' என்ற ரணிலின் மனநிலையை நான் புரிந்துகொண்டேன்.

இதே கருத்தையே அண்மையில் யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரைச் சந்தித்த போது ருவான் விஜேவர்த்தனவும் குறிப்பிட்டிருந்தார். இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள 6500 ஏக்கர்களில் குறைந்தது 5000 ஏக்கர் நிலங்களையாவது விடுவிக்குமாறு நாங்கள் கோரியிருந்தோம்.



ஆனால் 6500 ஏக்கரில் இராணுவ முகாம்களை அமைத்து மிகவும் மகிழ்வான வாழ்வை வாழ்ந்து வரும் சிறிலங்கா இராணுவ வீரர்களில் ஒருவரைக் கூட வடக்கிலிருந்து வெளியேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதையே ருவான் விஜேவர்த்தனவின் கூற்று வெளிப்படுத்துகிறது' என வடக்கு மாகாண சபையில் ஆற்றிய உரையின் போது முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

'இராணுவத்தின் எண்ணிக்கையைக் குறைக்கப் போவதில்லை என்பதும் இராணுவ முகாம்கள் அகற்றப்படமாட்டாது என்பதும் புதிய அரசாங்கத்தால் சிங்கள மக்களுக்காக வழங்கப்பட்டுள்ள செய்தியாகும்.

வழக்கொழிந்து போன பழைய அரசியல் தந்திரோபாயத்திற்குள் ஏன மூழ்கிப்போயுள்ளீர்கள்? என ஜனநாயகவாதி எனத் தன்னைத் தானே கூறிக்கொள்ளும் பிரதமரிடம் கேட்க விரும்புகிறேன். இதன் காரணமாகவே நான் தற்போது இனப்படுகொலை தொடர்பான தீர்மானத்தை விரைந்து முன்வைத்துள்ளேன்' என முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனது உரையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கிற்கான தனது பயணத்தை ருவான் மேற்கொண்டதை அடுத்து, விக்னேஸ்வரன், மைத்திரிபாலவைச் சந்திப்பதற்காக கொழும்பு சென்றிருந்தார். இதன்பின்னர் ருவானுக்கான அமைச்சுப் பொறுப்புக்கள் சிலவற்றை மைத்திரிபால சிறிசேன மட்டுப்படுத்தியுள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு ரணில் விக்கிரமசிங்க வழங்கிய நேர்காணலில் விக்னேஸ்வரனை விமர்சித்துப் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் தமிழ் மக்களினதும் மீட்பராக ரணில் தன்னைக் காண்பித்துள்ளார்.

எனினும், வடக்கு அரசியல் காரணமாக நான்கு சந்தர்ப்பங்களில் ரணில் தனக்கான அதிபர் பதவியை இழந்திருந்தார். 1999ல், கூட்டம் ஒன்றில் பிரபாகரனால் வெடிக்க வைக்கப்பட்ட குண்டினால், சந்திரிக்கா கண்ணில் காயமுற்றார். இதனால் சந்திரிக்கா அனுதாப வாக்குகளைப் பெற்று அதிபரானார். இதில் ரணில் விக்கிரமசிங்க தோல்வி யுற்றார்.

இதேபோன்று 2005ல் இடம்பெற்ற தேர்தலின் போது வடக்கில் வாழ்ந்த தமிழ் மக்கள் தமது வாக்குகளைப் பதிவுசெய்யக் கூடாது என பிரபாகரன் தடைவிதித்தார். இதனால் ரணில் அதிபராவதற்கான வாய்ப்பை இழந்தார்.

2010ல், விடுதலைப் புலிகளினது ஆதரவாளர் என ரணில் முத்திரை குத்தப்பட்டார். அதேவேளை, பௌத்த சிங்களவர்களின் வாக்குகளை ரணிலால் பெறமுடியாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கூறப்பட்டது. இந்திய ஆதரவாளர் எனவும் மேற்குலக நாடுகளின் ஆதரவாளர் எனவும் ரணில் முத்திரை குத்தப்பட்டார்.

தேர்தலில் ஒருபோதும் வெற்றிபெற முடியாத ஒருவராகவே ரணில் விளங்குவதாக இந்தியாவும் மேற்குலகமும் நோக்கியது. பழிதீர்ப்பதற்காக இந்தியாவையும் விக்னேஸ்வரனையும் ரணில் தாக்குகிறாரா என்பது தெளிவாகவில்லை.

சிறிலங்காவில் பொதுத்தேர்தல் இடம்பெறவுள்ளது என்பதை ரணில் நன்கறிவார். இதனால் இத்தேர்தலில் வெற்றிபெறுவதற்காக சிங்களவர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கு சிங்கள மக்கள் மத்தியில் கதாநாயகனாக விளங்கவேண்டும் என்பதும் ரணிலுக்கு நன்கு தெரியும்.

தமிழ் மக்களின் வாக்குகள் கூட்டமைப்பையே சென்றடையும். இதன்காரணமாகவே தற்போதைய சிறிலங்காவின் அரசியலில் புதிய அத்தியாயம் ஒன்றைத் திறப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

– –நித்திய பாரதி – –

www.puthinappalakai.net


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. $10^x = 5, 10^y = 2$ ஆயின், $10^{(x+y)}$ இன் பெறுமானம் யாது?

02. கிழக்கு மேற்காக அமைந்துள்ள நேர்பாதை ஒன்றில் செல்லும் ஒருவனுக்கு P என்னும் புள்ளியிலிருந்து நோக்கும் போது C என்னும் நிலைக்குத்தான தென்னை மரம் ஒன்றின் திசைகோள் 108பாகை ஆகும். அவர் P யிலிருந்து 140m தூரம் கிழக்கு நோக்கிச் சென்று நோக்கும் போது தென்னை மரத்தின் திசைகோள் 132பாகை எனக் காணப்பட்டது.




1. உருவைப் பிரதி செய்து பூரணப்படுத்தி மேற்கண்ட தரவுகளை அதிற் குறிக்க.
2. பாதையிலிருந்து தென்னை மரத்திற்குள்ள மிகக் கிட்டிய தூரத்தைக் காண்க.
3. P யிலிருந்து தென்னை மரத்துக்குள்ள தூரத்தைக் காண்க.

03. பொறி ஒன்றைக் கைக்காசுக்கு விற்கும் போது விலை 120,000 ஆகும். அதனை வாடகைக் கொள்வனவு முறையில் பெறுவதாயின் முதலில் பொறியின் விலையின் அரைவாசியைச் செலுத்தியும் மீதியை 3100 வீதம் 24 மாதம் தவணைகளில் செலுத்தியும் வாங்கலாம். இதன்படி,

1. தவணைமுறையில் செலுத்துவதற்கு எஞ்சிய கடன் பணம் யாது?
2. 24 மாதத் தவணைகளிலும் செலுத்தும் மொத்தப்பணம் யாது?
3. செலுத்தப்படும் மொத்த வட்டி யாது?
4. மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
5. ஒரு மாத அலகு வட்டி எவ்வளவு?
6. வட்டியின்றி ஒரு தவணைப்பணம் எவ்வளவு?
7. செலுத்தப்படும் ஆண்டு வட்டி வீதம் யாது?

04. புகையிரதம் ஒன்று $14.4 Kmh^{-1}$ எனும் வேகத்தில் 100m நீளமான புகையிரத மேடையைக் கடக்க 40 செக்கன்கள் எடுத்துக் கொண்டது.

1. வேகத்தை $ms^{-1}$ எனும் அலகில் காட்டுக.
2. புகையிரதத்தின் நீளத்தைக் காண்க.

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

பாரதியார் சுயசரிதை (புதிய பாடத்திட்டம்)

### பிள்ளைக் காதல்

**புலங்களோடு காரணமும் ஆவியும்**
**போந்து நின்று விருப்புடன் மானிடன்**
**நலங்கள் ஏதும் விரும்புவன் அங்கவை**
**நண்ணுறப்பெறல் திண்ணமதாமென**
**இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்**
**யானும் மற்றது மெய்யெனத் தேர்ந்துளேன்**
**விலங்கியற்கை யில்லையெனில் யாமெலாம்**
**விரும்பு மட்டினில் வின்னுறலாகுமே.**

**பாட்டின் பொருள்** - ஐம்புலன்களோடு (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்) அந்தக்கரணங்கள் (புத்தி, சித்தம், அகங்காரம்) என்னும் மூன்றும் உயிருடன் சேர்ந்து நின்று விருப்பத்தோடு ஏதாவது நன்மையை விரும்பினால் அந்நிலையில் அதனை அடைதல் நிச்சயம் என நூல்களைக் கற்றுணர்ந்த ஞானியர் கூறுவர். நானும் அதனை உண்மை என ஆராய்ந்து அறிந்துள்ளேன். பலவற்றுக்கும் ஆசைப்படும் விலங்குக் குணம் இயற்கையாக எம்மிடம் இல்லையானால் நாம் அனைவரும் விரும்பிய போது விண்ணுலக வாழ்வை அடைந்திடலாம்.

**குறிப்பு** : இப்பாடலில் ஒருவர் தாம் விரும்பிய நலன்களை எவ்வாறு அடையலாம் என்பதை பாரதி எடுத்துக் கூறுகிறார்.



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## பாடம் : வரலாறு

01. இலங்கை பின்வரும் எந்த ஆணைக்குழுவின் யோசனை மீது குடியேற்ற நாடாக மாற்றப்பட்டது?
1. தமியுரன் ஆணைக்குழு 2. கோல்புரூக் ஆணைக்குழு
3. டொனமூர் ஆணைக்குழு 4. சோல்பரி ஆணைக்குழு

02. 15ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் யாழ்ப்பாணப் பிரதேசம் விஜயநகரப் பேரரசிற்குக் கீழ்ப்படிந்தமை பற்றிய தகவல்களைக் குறிப்பிடும் மூலம் பின்வருவனவற்றில் யாது?
1. பனாக்கடுவாச் செப்பு பட்டயம்
2. ஆலம்புண்டிச் செப்புப்பட்டயம்
3. வல்லிபுரம் பொற் பட்டயம்
4. செகராஜசேகர மாலை என்னும் நூல்

03. உள்நாட்டு நீர் வலயத்திலும் வானிலும் செய்த தவறுகள் தொடர்பான ழக்குகளை விசாரிக்கும் நீதிமன்ற அதிகாரம் இலங்கையில் பின்வரும் எந்நீதிமன்றத்திடம் உள்ளது?
1. மேல் நீதிமன்றம் 2. உயர் நீதிமன்றம்
3. மாவட்ட நீதிமன்றம் 4. நீதவான் மன்றம்

04. வடமேற்குத் தேசவெல்லையினூடாக இந்தியப் பிரதேசங்களில் நடைபெற்ற படையெடுப்புகளும் புலப்பெயர்ச்சிகளும் பெரும்பாலும் நடைபெற்ற கணவாய்?
1. கைபர் 2. கோமல் 3. போலான் 4. மக்ரான்

05. இத்தாலிய வெனிஸ் நாட்டு தேச சஞ்சாரியான ஒருவர்
1. மெகஸ்தனிஸ் 2. இபன்பதூதா 3. மார்க்கோபோலோ 4. கௌடில்யன்

06. ஏசவின் இறுதி இராப்போசனம், மோனாலிசா ஓவியத்தின் நிர்மாணம் யாருடையது என பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க.
1. மைக்கல் அஞ்சலோ 2. லியனாடோ டாவின்சி
3. பொக்காசியோ 4. பிக்காசோ

07. பண்டைய ஐரோப்பாவில் வர்த்தக விருத்தியால் பண்ணைமுறை வலுவற்று போனது. இதனால் ஏற்பட்ட விளைவு?
1. மானிய முறை வீழ்ச்சியும் மறுமலர்ச்சியும்
2. பிரான்சிய புரட்சியும் குடியாட்சி உருவாக்கமும்
3. கீழைத்தேயங்களுக்கு செல்லலும் ஏகாதிபத்திய கொள்கை தலையெடுத்தமையும்
4. உலக வர்த்தகம் தடைப்பட்டது. கிராமிய பொருளாதாரம் உன்னத நிலையில் இருந்து வீழ்ச்சி கண்டது.

## Grammar

Ex 01: ***Read the following passage in each line. One word is incorrect and it is underlined. Write the correct word in the space provided. The first one is done for you.***

| | |
|---|---|
| _Travel_ by train has many advantages. | Travelling |
| First of all, there are no _stress_ traffic jams. | ...................................... |
| Trains are fast and _comfort_, too. You can | ...................................... |
| use the time in _difference_ ways. However | ...................................... |
| _travel_ by train also has some disadvantages. | ...................................... |
| For one thing trains are _sometime_ dirty and delayed. | ...................................... |

Ex 02: **Write a paragraph on one of the following topics. Use about 50 words.**

1. What is your favourite sport?
Write about one indoor game and an outdoor game.
OR
2. A musical show you enjoyed. OR 3. Books are our life - long friend.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## பாடம் : விஞ்ஞானம்

01. ஒரு தாவரத்தின் பூவை அவதானித்த மாணவன் ஒருவன் அதனைப் பற்றிய பின்வரும் விபரங்களைக் குறித்துக் கொண்டான். அதன் அல்லிகள் நிறத்தை உடையன. கேசரங்கள் அடியிலிருந்து அமுதம் வெளியே வந்து கொண்டிருந்தது. மகரந்தக் கூடுகள் குறிக்குக் கீழே அமைந்திருந்தன. இப்பூ எக்காரணியின் மூலம் மகரந்தச் சேர்க்கை அடைவதற்கு வடிவமைந்திருக்கின்றது?
1. பூச்சிகளின் மூலம் 2. காற்றின் மூலம்
3. நீரின் மூலம் 4. செயற்கை முறையின் மூலம்

02. கூர்ப்பு நடைபெறும் விதத்தை விளக்குவதற்கு டாவின் எடுத்துரைத்த இயற்கைத் தேர்வுக் கொள்கையின் நான்கு படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றின் சரியான ஒழுங்கு முறையைக் காட்டும் விடை யாது?
அ. தக்கன பிழைத்தல் ஆ. மாறல் இ. மிகையுற்பத்தி ஈ. போட்டி
1. அ, ஆ, இ, ஈ 2. ஆ, இ, அ, ஈ 3. இ, ஆ, ஈ, அ
4. ஆ, ஈ, அ, இ

03. நாம் பயன்படுத்தும் பொருட்களைச் செயற்கைப் பொருட்கள், இயற்கைப் பொருட்கள் என வகைப்படுத்தலாம். பின்வருவனவற்றுள் எது இயற்கைப் பொருளாகும்?
1. நைலோன் 2. பட்டு 3. பொலித்தீன் 4. தெரிலீன்

05. இரும்பைப் பிரித்தெடுக்கும் போது ஊதுலையினுள்ளே சேர்க்கப்படும் மூலப்பொருளாக அமையாதது எது?
1. சுண்ணாம்புக்கல் 2. கற்கரி 3. ஏமற்றைற்று 4. போட்சைற்று

06. பின்வரும் சேர்வைகளுள் எது ஒரு வீழ்படிவாகும்?
1. $KmnO_4$ 2. $CuCO_3$ 3. $CaCO_3$ 4. $Na_2CO_3$


01. ஒரு இன அங்கி அடுத்த சந்ததியை உருவாக்கும் போது அவ்வங்கியின் இயல்புகள் அடுத்த சந்ததிக்குக் கடத்தப்படுவதனால் பெற்றோரின் இயல்புகளைக் கொண்ட அடுத்த சந்ததி உருவாகின்றது. இருப்பினும் உருவாகிய அடுத்த சந்ததியில் பல வேறுபாடுகள் காணப்படலாம். இவைகளுக்குப் பல்வேறு காரணங்கள் காரணமாக அமைகின்றன.

1. பாரம்பரியம் என்றால் என்ன? ..............................................
2. பரம்பரை அலகு என்றால் என்ன? ..............................................
3. பிறப்புரிமை அமைப்பு என்றால் என்ன? ..............................................
4. பரம்பரை இயல்புகள் ஊடுகடத்தப்படுவது பற்றி தெளிவான ஆய்வுகளை மேற்கொண்ட விஞ்ஞானி யார்? ..............................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 11

தரப்பட்டுள்ள பிராணிகளில் இரண்டு பிராணிகளிடையே மிக நெருங்கிய தொடர்பு உண்டு. அப்பிராணிகளைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க



A B C D E

1. நீர்வாழ் தாவர உண்ணி
   1. AD 2. BA 3. CE
2. தாவர உணவுகளை மாத்திரம் உண்ணும் பிராணி
   1. AD 2. BD 3. AD

02. உருக்கள் பற்றி மிகச் சரியாகக் குறிப்பிடும் விடைகளைத் தெரிவு செய்க



1. வெயில், மழை, பாதுகாப்பு
2. பெண்கள், மட்டும், மழை, பாதுகாப்பு
3. கம்பி, வெயில், பாதுகாப்பு



1. பூக்கள், தேன், நஞ்சு
2. பூச்சி, கூட்டுமுயற்சி, தேன
3. பூச்சி, கால்கள், ஆபத்து

03. இலங்கைக்கு முதன்முதலில் ஒலிம்பிக்பதக்கம் ஒன்றை வென்று கொடுத்தவர்
   1. டங்கன் வயிற் 2. சுசந்திகா ஜயசிங்க
   3. முத்தையா முரளிதரன் 4. அர்ஜீன் ரணதுங்க

04. அலுமினியப்பாத்திரங்களில் இடக்கூடாத ஓர் உணவுப்பொருள்
   1. பருப்பு 2. சுண்டல் வகைகள்
   3. உருளைக்கிழங்கு 4. அச்சாறு

05. தமது வீட்டை அமைத்துக்கொள்ள களிமண்ணை பயன்படுத்தாத ஒரு பிராணி
   1. மழைக்குருவி 2. மரங்கொத்தி 3. குளவி 4. கறையான்

**பகுதி 02**

01. நீலா ஒரு கொத்தில் 3 பூக்கள் வீதம் 12 கொத்துக்கள் செய்து இரண்டு பூக்கள் மீதி வைத்திருப்பாள் எனின் ஆரம்பத்தில் நீலா வைத்திருந்த பூக்களின் தொகை யாது?

..........................................................................

02. 1800 ml கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தில் 500ml நீர் இருந்தது அப்பாத்திரத்தில் மேலும் 1.5l நீரை கவனமாக ஊற்றும் போது பாத்திரத்தில் இருந்து வெளியேறும் நீரில் கனவளவு யாது?

..........................................................................

03. எனது மாமா அவரது 30வது பிறந்ததினத்தை 2008ம் ஆண்டு கொண்டாடினார் எனின் அவரது 70 வது பிறந்த தினத்தை எந்த வருடம் கொண்டாடுவார்?

..........................................................................

04. தற்போது எனது வயது 9ஆகும். எனது தம்பியின் வயது 3ஆகும். இன்னும் எத்தனை வருடங்களில் எனது வயது தம்பியின் வயதில் இரு மடங்காக இருக்கும்?

..........................................................................

05. கருத்தை தமிழில் தருக
   1. Be Careful : ..........................................
   2. Good Morning: ..........................................
   3. Best wishes : ..........................................



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு



## குட்டிக்கதை

## என்ன செய்யலாம்!!



அரசனுக்கு வயதாகிக் கொண்டிருந்தது. தலைமுடி கொட்டி வழுக்கை அதிகமாகிக் கொண்டிருந்தது. அரசனுக்கு தன் கம்பீரம் குறைந்து விடும் என்ற கவலை அதிகமாகிப் போய் ஒரு நாள் அரசவைத் தலைமை மருத்துவனிடம் நிவாரணம் கேட்டான்.

தலைமை மருத்துவன் "மன்னா! இதற்கு மருந்தே கிடையாது" என்று உண்மையைச் சொன்னான். அரசனுக்கு அந்த பதில் பிடிக்கவில்லை. ஆத்திரம் தலைக்கேறி தலைமை மருத்துவனை சிறையில் அடைக்குமாறு உத்தரவிட்டான். ஊரில் இருக்கும் அனைத்து சிறந்த மருத்துவர்களையும் வரவழைத்தான். ஒரே வாரத்தில் தன் பிரச்சனைக்குத் தீர்வு கண்டு பிடிக்குமாறு பணித்தான்.

மருத்துவர்கள் அனைவரும் கூடி விவாதித்தனர். அரசனிடமிருந்து எப்படித் தப்பிப்பது என்றுதான் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார்கள். நாள் செல்லச் செல்ல அவர்களுக்கு அரசனிடமிருந்து தப்பிக்கும் வழி தெரியவில்லை. அப்போது இளைய மருத்துவன் திரும்பவும் "என்னை நம்பினால் நம் எல்லோருக்கும் விடிவு நிச்சயம்" என்று கூறினான். வேறு வழியில்லாமல் அனைவரும் ஒத்துக் கொண்டார்கள். அவனோ, மருந்தை நேரடியாக அரசனிடம்தான் தருவேன், என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டான்.

அடுத்த நாள் சபை கூடியது. மருத்துவர்கள் இளைய மருத்துவனைக் கூட்டிக் கொண்டு அரசவைக்கு வந்தார்கள். அவன் அரசனிடம் ஒரு குடுவையைக் கொடுத்தான். "மன்னா இதில் இருக்கும் மருந்தை தினமும் சிரசில் தேய்த்துக் கொண்டு வந்தால், ஒரே மாதத்தில் முடி கொட்டுவது நின்று போகும். இரண்டே மாதத்தில் முடியில்லாத இடத்திலெல்லாம் முடி வளர ஆரம்பிக்கும், ஆறே மாதத்தில் கருகருவென தலையெங்கும் தலைமுடி அழகாக வளர்ந்திருக்கும்" என்றான். மன்னனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. "இப்போதே அந்தப்புரத்திற்குப் போய் தலையில் மருந்தைத் தடவிக் கொள்கிறேன்" என்று கிளம்பினான்.

அப்போது மருத்துவன் "மன்னா. இந்த மருந்து வேலை செய்ய வேண்டுமென்றால், அதைத் தலையில் தடவிக் கொள்ளும் போது மட்டும் நீங்கள் குரங்கை நினைக்கக் கூடாது!" என்றான்.

முட்டாள் மன்னன் சரியென்று சொன்னான். மருத்துவர்களும் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஊரை விட்டே ஓடி விட்டார்கள். அந்தப்புரத்திற்குச் சென்ற அரசன், அங்கு குடுவையைக் கையில் எடுத்து அதிலிருந்த மருந்தைத் தலையில் தேய்க்கப் போனான். அப்போது அவனுக்கு மருத்துவன் சொல்லிய பக்குவம் கவனத்திற்கு வந்தது. "குரங்கை நினைக்கக் கூடாது" என்று நினைத்தவுடன் குரங்கைப் பற்றி நினைக்க ஆரம்பித்து விட்டான். என்ன முயற்சித்தும் அவன் நினைவிலிருந்து குரங்கை அகற்ற இயலவில்லை. ஒவ்வொரு முறை அவன் மருந்தைக் கையில் எடுத்த போதும் மருத்துவனின் அறிவுரை மனதில் தோன்றி அவனுக்குக் குரங்கு பற்றிய யோசனை வந்து கொண்டே இருந்தது.

பல நாள் திரும்பத் திரும்ப முயற்சித்து விட்டு, இந்தச் சிரமத்திற்குப் பேசாமல் வழுக்கையாகவே இருந்து விடலாம் என்று தீர்மானித்து விட்டான்.

– சிந்தனை சரியாக இருந்தால் அனைத்தையும் சாதிக்கலாம்–

## சிந்தனைத் துளிகள்

1. அறிஞர் கூட்டம் ஓர் உயிருள்ள வாசிகசாலை.
2. மனம் உறுதியாக இருந்தால் சுண்டெலியால் கூட யானையைத் தூக்க முடியும்.
3. கண்களை உயர்த்திப் பார் நட்சத்திரங்களை நீ காண்பாய்.
4. ஊக்கமும், விடாமுயற்சியும் வெற்றிக்கு ஏணிப்படிகள்.
5. தெரிந்ததை எல்லாம் சொல்லாதே: கேட்டதை எல்லாம் நம்பாதே.

கு.ஜகதாத்ரி, தரம் - 05, கோபாலபுரம் த.வித்தியாலயம்



## சிந்திக்க .. ..

ஊக்குவிக்க ஆளிருந்தால்:
ஊக்கு விற்பவன் கூட
தேக்கு விற்பான்.

## வணங்குவேன்!

அக்காச்சி பார்பார் - உன்
அழகுத்தம்பி நான்!
தக்கவன்தான் நான் - ஆம்
தமிழ் படிப்பேன் நான்!

இயல் படிப்பேன் நான் - பண்
இசை அறிவேன்நான்!
நயக்கும் நாடகம் - அதை
நன்கறிவேன் நான்!

அவையில் முந்துவேன் - அதில்
அருஞ்சொல் பொழிகுவேன்!
சுவைசுவை என்பார் - நல்ல
'சொல்வல்லான்' என்பார்!

கடலெனுந் தமிழின் - மறு
கரையைக் காணுவேன்!
தடம்பதிப்பேன் நான் - தாய்த்
தமிழை வணங்குவேன்!

தாமரைத்தீவான்
ஈச்சந்தீவு- கிண்ணியா

## பொது அறிவு - 13

இப்பொது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

01. வருடத்தின் ஒரே நாளில் 24 மணிநேரத்தில் பகலும், இரவும் சரியாக 12 மணிநேரம் மட்டும் வருவது எந்த நாளில்? மார்ச்சு 21.
02. மனித தலையில் உள்ள மொத்த எலும்புகள் எத்தனை? 22
03. ஈக்களின் சுவை உணர் உறுப்பு எது? நாக்கு.
04. தமிழில் வெளிவந்த முதல் வரலாற்று நூல் எது? மோகனாங்கி.
05. பாலில் உள்ளதை விட அதிக கால்சியம் உள்ள காய்கறி எது? வெங்காயம்.
06. ஒரு ஹெக்டேர் என்பது எவ்வளவு ஏக்கர்? கிட்டத்தட்ட 2.5 ஏக்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழியா வரம் பெற்ற புனித திருப்பண்டம்



குறைகள் தீர்க்கும் கோடி அற்புதரின் அழியா வரம் பெற்ற புனித திருப்பண்டம் 10.03.2015 செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு புளியந்தீவு புனித அந்தோனியார் திருத்தலத்தில் மக்களின் வணக்கத்திற்காக திருப்பண்ட பேழையினுள் இருந்து வெளியே வைக்கப்பட்டுள்ளது .

பக்தர்கள் புடை சூழும் புதுமைமிகு புனித அந்தோனியாரினது இறந்தும் அழியா புனித திருப்பண்டமானது 2010 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 12 ஆம் திகதி இத்தாலி நாட்டின் பாதுவா நகரிலிருந்து இலங்கை மண்ணுக்கு கொண்டு வரப்பட்டதுடன், மட்டக்களப்பு புளியந்தீவு புனித அந்தோனியார் திருத்தலத்திற்கு அதில் ஒரு சிறு பகுதி திருப்பண்டம் மக்களின் வணக்கத்திற்காக வழங்கப்பட்டது.

## மகளிர் தின நிகழ்வு

சர்வதேச மகளிர் தின நிகழ்வு 08 ம் திகதி திருகோணமலை உதயபுரி உதயம் சிக்கனக்கடன் கூட்டுறவு சங்கத்தின் ஏற்பாட்டில் தலைவி எமலின் ராகல் தலைமையில் ,டம் பெற்றது. ,நிகழ்விற்கு உப்புவெளி பிரதேசசபையின் உறுப்பினர் வ.கலைச்செல்வம் மற்றும் சங்கத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருப்பதை படங்களில் காணலாம்.

- மூதூர் நிரூபர் -





## இன்னிய வாத்திய கருவி வழங்கும் நிகழ்வு

- மூதூர் நிரூபர் -

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து 386,590.00 ரூபாய் பெறுமதியான தமிழ் இன்னிய வாத்திய கருவிகளை திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கு பெற்றுக் கொடுத்துள்ளார்.

இதனை கையளிக்கும் நிகழ்வு 06.03.2015 காலை கல்லூரி கட்புல செவிப்புல கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திசங்க உறுப்பினர் ந.இரட்ணவடிவேல். பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் இ.கைலைவாசன் ஆகியோரும் பங்கு கொண்டிருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் இவ் உபகரணங்களை வாத்திய குழு தலைவரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.



பொறுப்பாசிரியர் திருமதி.சு.கோணேஸ்வரன் அதிபர் செ.பத்மசீலன் பிரதி அதிபர் இ.முருகதாஸ் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.







சர்வதேச பெண்கள் தினத்தன்று திருகோணமலை பாலையூற்று முருகன் கோவிலடி கிராம அபிவிருத்தி சங்க நிலையத்தில் நடத்தப்பட்ட பெண்கள் தினத்துக்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்ட பத்மநாபா (E.P.R.L.F) திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் சத்தியன்

## மகளிர் தின கொண்டாட்டம்

- சி.சின்னா -



கலந்து கொண்டார். இக்கிராமத்தின் பெண்கள் அமைப்பின் தலைவி வசந்தி செயலாலர் கௌரி மற்றும் உறுப்பினர்கள் தலைமையில் இறைவணக்கத்துடன் மங்கள விளக்கேற்றி ஆரம்பிக்கப்பட்டது.

அவர் உரை ஆற்றும் போது பெண்கள் சகோதரத்துவ உணர்வுடன் ஒற்றுமையாக கிராமங்களில் வாழும் போது தான் எதையும் சாதித்து காட்ட முடியும் என கூறியதுடன், சர்வதேச பெண்கள் தினம் எவ்வாறு ஆரம்பமாகியது, ஏன் கொண்டாடப்படுகிறது என்பதையும் விளக்கி கூறினார்.

### மக்கள் முரசு

# தனிநபர், சமூகம், நிறுவனங்களுக்கான சந்தைப்படுத்தல் சேவைகள்


சந்தைப்படுத்தல் சேவைகள் என்பது நாளுக்கு நாள் வளர்ச்சியடையும் ஒன்றாக காணப்படுகின்றது. மேலும் ஒவ்வெரு மனிதனின் வாழ்விலும் சந்தைப்படுத்தல் சேவைகள் என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது. ஏனெனில் தற்காலத்தில் மனிதனின் தேவை மற்றும் விருப்பங்கள் பன்மடங்காக பெருகி காணப்படுகின்றன.

ஆகவே ஒவ்வொரு மனிதனும் தேவை விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கு இச் சந்தைப்படுத்தலானது மிகவும் பயனுள்ளளதாக அமைகின்றது. மேலும் சந்தைப்படுத்தல் சேவையின் முக்கிய எண்ணக்கருவாக கருதப்படும் வாடிக்கையாளரை தொடர்ந்து பேணல் என்பது நிறுவனங்களுக்கிடையே பேணப்படும் சிறந்த தந்திரோபாய சந்தைப்படுத்தலாக (strategic marketing) கருதப்படுகின்றது. ஏனெனில் ஒவ்வொரு நிறுவனங்களும் சந்தைப்படுத்தலை மேற்கொள்கின்றன.

ஆனால் ஒவ்வொருவரும் எவ்வாறு தமது தந்திரோபாயத்தை கையாண்டு தமது சந்தைப்படுத்தலை மேற்கொள்கின்றனர் என்பதிலேயே அவர்களின் வணிகத்தில் நிலைத்திருக்கும் தன்மை அதிகரிக்கின்றன. சந்தைப்படுத்தல் கலவைகளான விலை, இடம், உற்பத்தி மேம்படுத்தல் ஆகியவற்றில் கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும் ஏனெனில் இந்நான்கு கலவைகளை சந்தைப்படுத்தலில் மிகவும் இன்றியமையாததாக காணப்படுகின்றது. உதாரணமாக விலையை எடுத்துக்கொண்டால் வாடிக்கையாளருக்கு நியாயமானதாக இருக்க வேண்டும் அதேநேரம் உற்பத்தி செலவுகளையும் கருத்தில் எடுக்க வேண்டும். இல்லையெனில் நிறுவனம் நட்டமடைய நேரிடும்.

மேலும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சமூக விழுமியங்களை கருத்திலெடுக்க வேண்டும். அதாவது சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களை மேற்கொள்ள கூடாது. மேலும் சந்தைப்படுத்தலை மேற்கொள்ளும் போது "வாடிக்கையாளர்கள் ஒரு ராஜா" (customer is a king) என்ற எண்ணக்கருவின் அடிப்படையிலேயே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வாடிக்கையாளரை திருப்திபடுத்துதல், தொடர்ந்து பேணல் என்பன சந்தைப்படுத்தலில் வளர்ந்து வரும் நவீன எண்ணக்கருவாகும்.

மேலும் உலகமயமாக்கல் காரணமாக சர்வதேச வர்த்தகம் திறந்துவிடப்படுகின்றது. ஆகவே ஒவ்வொரு தனி நபர், நிறுவனங்களும் தமது சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்ள முடியும், மேலும் இலத்திரனியல் சமூக வலைத்தளங்களான முகப்புத்தகம் (Facebook), டுவிட்டர (twitter) என்பவற்றில் ஏற்பட்ட




அபரிவிதமான வளர்ச்சி சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை பன்மடங்காக உயர்த்தியுள்ளது. அத்துடன் முகப்புத்தகம் மூலமாக நிறுவனங்கள் தமது மேம்படுத்தல் மற்றும் விளம்பர நடவடிக்கைகளை குறைந்த செலவுடன் அதிக வாடிக்கையாளரை கவரும் விதத்தில் வணிக நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன.

ஆகவே ஒவ்வொரு தனிநபர் மற்றும் நிறுவனங்களும் தமக்கு வணிகத்தில் உள்ள வாய்ப்புகளையும் அச்சுறுத்தல்களையும் இனங்கண்டு அதற்கு ஏற்றாற் போல் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். ஆகவே ஒட்டுமொத்தமாக பார்க்கின்ற போது தந்திரோபாய சந்தைப்படுத்தல் மூலமாக தனிநபர், நிறுவனங்கள் தங்களுடைய வணிகத்தின் ஸ்திரத்தன்மையை அதிகரித்துக்கொள்ள முடியும்.

ப.கிரிசாந்
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பூரில்...

அமைக்கப்படவுள்ள இக் குடியேற்றத்திற்கான உட்கட்டுமாண அபிவிருத்தித் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என சுற்றுச்சூழல் ஆய்வறிக்கையானது முன்மொழிந்துள்ளது.

திருகோணமலை நகரத்திற்கு இணையான நகரமாக சகல வசதிகளையும் கொண்ட ஒரு நகரத்தை உருவாக்கும் முன்மொழிவுகளில் வைத்தியசாலை, பாடசாலை, விளையாட்டுத் திடல்கள் மற்றும் நீச்சல் தடாகங்கள் ஆகியவை அமைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐக்கிய நாடுகள்....

நடவடிக்கைகள் உடபட பல நடவடிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு தற்போதை அரசு மட்டுமே மாற்றம் அடைந்துள்ளதாகவும் முன்னைய அரசின் நடவடிக்கைகளையே தற்போதைய அரசும் தொடர்கின்றது என்ற தொனிப்பொருளில் ஐக்கிய நாடுகள் சபையின் உபகுழுவொன்று கூடி ஆராய்ந்துள்ளது.

ஐ.நா மனித உரிமைச்சபையின் 28வது தொடரினை மையமாக கொண்டு, சிறிலங்காவில் காணாமல் போனவர்கள் விவகாரம் தொடர்பில் இடம்பெற்ற உபமாநாட்டை அம்னஸ்டி இன்ரர்நெசனல் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. ஐ.நாவின் காணாமல் போனவர்கள் மற்றும் துன்புறுத்தல் விவகாரங்களுக்கான சிறப்புப் பிரதிநிதி ஜுவான் மெம்னிஸ் பங்கெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வுபமாநாட்டில் திருகோணமலையில் மேற்கொள்ளப்பட்ட மக்கள் ஆர்ப்பாடடத்தின் போது வாைக் கறுப்புத் துணியால் மூடியபடி பிள்ளைகளையும், துணைவர்களையும் இழந்த பெண்களின் புகைப்படங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எதிர்ப்புத் தீர்......

தெரிகின்றது.

பிரதேச சபையைச் சேர்ந்தவர்களைச் சந்தித்து அனல் மின்நிலையத்திற்கு ஆட்சேபணையைத் தெரிவிக்கும் முதற்கட்ட அறிக்கையில் கையெழுத்தைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட போதே இவ்வாறானதொரு தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பாக பேசப்பட்டுள்ளது.

அனைத்து மட்டய்களிலும் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாக பிரதேசசபையினருக்கு விளக்கங்களை வழங்கியதாகத் தெரிவித்துள்ள பசுமை இயக்கத்தினர் திருகோணமலை நகரசபை உட்பட மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி அமைப்புக்களிலும் எதிாப்புத் தீர்மானத்தை நிறைவேற்றும் முயற்சிகளை முன்னெடுக்கப்போவதாகத்

## மோடி - கிழக்கிற்கும் ....

எமது மக்களை பயமுறுத்தும் செயற்பாடுகளில் இலங்கை புலனாய்வாளர்கள் இன்றும் தங்களது செயற்பாட்டினை செய்து வருகின்றார்கள்.

அண்மையில் வாகரையில் மக்கள் சந்திப்பொன்றிற்கு சென்று, மக்களை சந்தித்து விட்டு நான் வந்தபின்னர் அங்கு சென்ற புலனாய்வாளர்கள் அங்குள்ள மக்களை தனித்தனியாக சந்தித்து பாராளுமன்ற உறுப்பினர் என்ன கூறினார் என்று மக்களை துன்புறுத்தும் செயற்பாடுகளில் இறங்கியிருக்கின்றார்கள்.

நான் வாழைச்சேனை காவல்துறையில் முறைப்பாட்டை பதிவு செய்தேன். அதற்கு பின்னர் பொலிஸ் பொறுப்பதிகாரி உரிய புலனாய்வாளரை அழைத்து இவ்வாறு மக்களை அச்சுறுத்தும் வேலைகளில் ஈடுபடவேண்டாம் என பணித்திருந்தார்.

கிழக்கு மாகாணத்திற்கும் மோடி வரவேண்டும் என்பதில் த.தே.கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உறுதியாக இருக்கின்றார்.

கிழக்கிற்கு வரும் நரேந்திர மோடி திருகோணமலை, சம்பூர் ஆகிய இடங்களுக்குச்சென்று இங்குள்ள மக்களின் நிலமைகளை நேரடியாக பார்வையிட்டு அவர்களின் பிரச்சனைகளுக்கு நல்ல தீர்வை பெற்றுக்கொடுப்பார் என எதிர்பார்த்திருந்தோம். ஆனால் அவர் கிழக்கு மாகாணத்திற்கு வரமாட்டார் என்ற செய்தி அனைவரையும் [illegible]

## பிராந்திய எரிபொருள்...

பண்ணையை அபிவிருத்தி செய்யும் பணியில் இரு நாடுகளாலும் ஏற்றுக்- கொள்ளப்பட்ட நிபந்தனைகளின் கீழ் ஈடபட உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன எனத் தெரிவித்த அவர் இதற்காக இரு நாடுகளின் பங்களிப்புடன் இணைந்த நடவடிக்கைக் குழுவொன்றை அமைத்து எவ்வாறு இப்பணியை முன்னெடுக்கலாம் என்பதை ஆராயவுள்ளோம் எனவும் அதன் மூலம் இலங்கையைப் பிராந்தியத்தின் எரிபொருள் கேந்திர நிலையமாக மாற்ற இந்தியா உதவி செய்யத் தயாராகவுள்ளது என்றும் தெரிவித்தார்.

அத்துடன் மிக விரைவாகவே சம்பூர் அனல் மின்நிலையப் பணிகளை ஆரம்பிக்கவும் தயாராகவுள்ளோம் எனவும் மிக முக்கியமான திட்டமான சம்பூர் அனல்மின் திட்டம் இலங்கையின் மின் தேவையைப் பூர்த்திசெய்யக் கூடிய வல்லமை கொண்டது என்றும் மோடி அறிவித்தார்.

## தமிழர் தாயகம்....

காணாமற் போனோரைக் கண்டறியும் ஆணைக்குழுவினால் தமக்கு எவ்வித பலன்களும் கிட்டப் போவதில்லை எனத் தெளிவாகத் தெரிந்துகொண்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இவ்விகாரத்தை சர்வதேசமே கையாளவேண்டும் என்ற முடிவை எட்டியுள்ளனர்.

தமிழ் அரசியல் தலைமைகள் காணாமல் ஆக்கப்பட்ட பலர் முகாம்களில் உயிருடன் இருப்பதாகத் தெரிவித்தள்ள போதும் அவர்களை உடனடியாக விடுவிப்பதற்கு எவ்வித ஆக்க பூாவ முயற்சிகளையும் முன்னெடுக்காமல் இருப்பதாகவும் காணாமலாக்கப்பட்டவாகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இவற்றைக் கருத்திற்கொண்டு இனி வடக்குகிழக்கில் காணாமற்போனோர் தொடர்பான சனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் அனைத்தையும் பகிரங்கமாகப் பகிஷ்கரிக்கும் முடிவை வெளிப்படுத்தவும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்தவும் இக்கவனயீர்ப்புப் பேரணி நடைபெறவிருப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## முதலமைச்சர்....

கூட்டமைப்பின் 14 உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியிருந்தனர்.

இதற்கு மாகாண முதலமைச்சர் பதவி மாத்திரமே மாற்றம் செய்யப்படும் எனவும், ஐ.ம.சு.கூவிலுள்ள அமைச்சு பதவிகளில் மாற்றம் ஏற்படாது என முஸ்லிம் காங்கிரஸ் வாக்குறுதி- யளித்திருந்தது.

எனினும் ஆட்சியமைத்த பின்னர் இவ் இணக்கப்பாட்டை உடைத்து குறித்த ஐ.ம,சு.கூ. உறுப்பினர்கள் வசமிருந்த 3 அமைச்சசர்களையும் பதவி நீக்கி விட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## திருமலைக்கு...

தர்கா நகரில் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தபட்ட தாக்குதலில் கடும் நடவடிக்கைகள் சிலவற்றை எடுத்திருந்ததை அடுத்து வி. இந்திரன் காவல்துறை நலன்புரி நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அலுவலராகக் கடந்த ஆட்சியில் மாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

இடமாற்றங்களில் இருபத்திமூன்று சிரேட்ட காவல் அத்தியட்சகர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாயினும் [illegible] எவ்வித இடமாற்றங்களும் வழங்கப்படவில்லை.

## பசுமை இயக்...

இவ்வியக்கத்தின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

நிர்வாக சேவை அதிகாரிகள், பொறியியலாளர்கள், வைத்திய கலாநிதிகள், சுகாதாரத்துறை அலுவலர்கள் கல்விமான்கள் மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோரைக் கொண்டுள்ள பசுமை இயக்கம் ஆரம்பத்தில் சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பான விடயத்தை முன்னெடுத்துள்ளது.

இவ்வியக்கத்தை ஆரம்பிப்பதற்கான முதற்கட்டப் பணிகளை மலைமுரசு மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 07ம் திகதி ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்ட கலந்துரையாடலில் அனல் மின்நிலையப் பாதிப்புக்கள் தொடர்பான சுருக்க அறிக்கையை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கோபகன் வெளிப்படுத்தியதை அடுத்து கூடியிருந்த அனைவராலும் இம் மின்நிலையப் பணிகள் தடுக்கப்பட வேண்டும் என்பது ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதனையடுத்து 1200 பக்கங்களுக்கு மேற்பட்ட அனல் மின் நிலையச் சூழல் தாக்க அறிக்கையினை வாசித்து விளங்கி மக்கள் மறுப்பறிக்கைகளை வெளியிடுவதற்கு வழங்கப்பட்ட காலமான 30 நாட்கள் போதாது என அமைப்பு தீர்மானித்ததற்கு இணங்க மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆட்சேபணையைத் தெரிவிக்கும் காலக்கெடுவை நீடிக்குமாறு கோரப்பட்டுள்ள இக்கடிதத்தினை திருகோணமலை மாவட்ட ஆயர் வண.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மற்றும் மமுரசின் ஆசிரியர் உட்பட 15ற்கும் மேற்பட்ட தமிழ் முஸ்லிம் சமூக அமைப்புக்கள் கையெழுத்திட்டுள்ளன.

அதேவேளை முதல் அறிக்கையொன்றைத் தயாரித்துள்ள பசுமை இயக்கம் அதனைத் தனது முகப் புத்தகப் பக்கமான "Green Trincomalee" என்ற பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

அடுத்த கட்டமாக மக்களுக்கு விளிப்புணர்வைக் கொடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

## சர்வதேச நிறுவன....

விசேடமாக இந்த யுத்த நிலமைகளினால் கணவரை இழந்த பெண்கள், அங்கவீனமுற்ற சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளமையுடன் இவர்களே அதிகம் கவனிக்கப்பட வேண்டியவர்கள் எனவும் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தின் கீழ் மேற்படி பாதிக்கப்பட்டோர் தொடர்பாக பணிபுரிவோர் கூட்டாக சேவை புரியவேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியதுடன், உரிய வெளிநாட்டு நிதி நிறுவனங்களையும் இதற்காக பணிபுரிய நீங்கள் மாகாணத்திற்குள் கொண்டு வர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

திட்ட நடைமுறைப்படுத்தலுக்காக முன்னாள் அரச அதிபரிடமிருந்து அனுமதி பெறுவதிலுள்ள தடைகள், உள்ளூர் உளவுப்படை அதிகாரிகளால் இற்றைவரை ஏற்படுத்தப்படும் அசௌகரியங்களால் சர்வதேச நிதி நிறுவனங்கள் உள்வருவதில் ஏற்பட்ட தாக்கங்கள் என்பன ஆளுநரிடம் எடுத்துரைக்கப்பட்டன.

மேற்படி விடயங்களை கேட்டறிந்த ஆளுநர் அவர்கள் தாம் நிச்சயமாக தற்போதைய அரச அதிபரின் அனுசரனையுடன் இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெற்றுத்தருவதாக உறுதியளித்தார்.

## அத்துமீறிய....

பட்டிருந்த 43 இந்திய மீனவர்களும் திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் இன்று விசாரனைகளுக்காக கொண்டுவரப்பட்டு நீதவான் நீதிமன்ற நீதிபதி சரவனராஜா அவர்களால் விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட மீனவர்கள் அனைவரும் கடற்படையினரிடம் கையளிக்கப்பட்டு அங்கிருந்து காங்கேசந்துறைக்கு கொண்டுசெல்லப்பட்டு இலங்கைக் கடற்படையினரால் இந்திய கடட்படையினரிடம் கையளிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆன்மீக சூழல் அற்றுப் போகும் முஸ்லீம் வீடுகள்



கடந்தவாரத் தொடர்ச்சி .. ..

குர்ஆன் ஓதாது விட்டால் அந்த வீட்டாரிடத்தில் ஷைத்தானின் சூழ்ச்சிகளே அதிகம் இடம்பெறும். நன்மை செய்வதற்குப் பதிலாக தீமைகளைச் செய்வதற்கு அவன் தூண்டி விடுவான். தீமைகள் அதிகரிக்க அதிகரிக்க உள்ளங்கள் வரண்ட பூமியாக மாறிவிடும்.

"இரவில் தூங்கச் செல்லும்போது நீ ஆயதுல் குர்ஸியை ஓதிக் கொண்டால் காலை வரை அல்லாஹ்-விடத்திலிருந்து பாதுகாவலர் ஒருவர் வந்து பாதுகாத்துக் கொள்வார். ஷைத்தான் உம்மை நெருங்க மாட்டான்" என்பது நபிமொழி. (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி), நூல்: புகாரி)

அல்லாஹ்விடத்திலிருந்து வரக்கூடிய பாதுகாவலர் ஒரு மலக்கு ஆவார். ஷைத்தான் நெருங்க முடியாத அளவிற்கு பாதுகாவல் போடப்படுகிறது. துரதிஷ்ட வசமாக அல்லாஹ்விடமிருந்து வரக்கூடிய பாதுகாவலரை விரட்டி விட்டு ஷைத்தானை துணைக்கு வரவழைக்கின்ற காரியங்கள்தான் இன்று வீடுகளில் நடக்கின்றன.

ஒரு மனிதர் ஸூறதுல் கஹ்பை (இரவில்) ஓதிக் கொண்டு இருந்தார். அவரிடத்தில் ஒரு குதிரை இருந்தது. அது இரு கயிறுகளால் கட்டப்பட்டிருந்தது. அப்பொழுது ஒரு மேகம் அவரைச் சூழ்ந்து அவரிடம் நெருங்கி வர ஆரம்பித்தது. அதைக் கண்டு அவரது குதிரை விரண்டோட ஆரம்பித்தது. பின்னர் அவர் காலையில் நபி (ஸல்) அவர்களிடம் வந்து இரவு நடந்த விபரத்தைக் கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், அது குர்ஆனுக்காக (குர்ஆன் ஓதியதற்காக) இறங்கிய ஸகீனத் (நிம்மதியும் சாந்தியும்) ஆகும் எனக் கூறினார்கள். (அறிவிப்பவர்: பராஉ இப்ன ஹாஸிப் (ரழி), நூல்: புகாரி, முஸ்லிம்)

குர்ஆன் ஓதும் வீட்டுக்கு அல்லாஹ்-விடமிருந்து அமைதி (ஸகீனத்) இறங்குகின்றபோது அந்த வீடு பாக்கியம் பொருந்திய வீடாக மாறிவிடுகிறது.


தொடரும் .. .. – இம்தியாஸ் ஸலபி –




# சுறா மீன் புட்டு

**தேவையான பொருட்கள்**

சுறா மீன் துண்டு - 300 கிராம், வெங்காயம் (பொடியாக நறுக்கியது) - 3 அல்லது 4, பூண்டு (பொடியாக நறுக்கியது) - 6 பல், பச்சை மிளகாய் - 3, கறிவேப்பிலை – சிறிது, மல்லித் தழை – சிறிது, முழு உளுந்து – 1 தே.கரண்டி, கடுகு - ½ தே.கரண்டி, மஞ்சள் தூள் - சிறிது, சீரகம் - ½ தே.கரண்டி, உப்பு - தேவைக்கு, எண்ணெய் - 2 மே.கரண்டி



**செய்முறை**

சுறா மீன் துண்டுகளை சூடான நீரில் போட்டு 10-15 நிமிடங்கள் வேக வைக்கவும். பின் அதனுடன் மஞ்சள் சேர்க்கவும். மீன் துண்டுகள் வெள்ளை நிறத்தில் மாறிவிட்டால் அது வெந்து விட்டது என்று அர்த்தம். மீன் துண்டுகளை தனியாக எடுத்து பரலாக(அதாவது) உதிரியாக உதிர்த்து வைக்கவும். தாச்சியை சூடாக்கவும். பின்னர் அதில் எண்ணெய் விட்டு கடுகு தாளித்து பின்பு முழு உளுந்து மற்றும் சீரகம் சேர்த்து வறுக்கவும்.

அதனுடன் பூண்டு, பச்சை மிளகாய், கறிவேப்பிலை சேர்த்து வதக்கவும். பின் நறுக்கி வைத்துள்ள வெங்காயத்தை அதனுடன் சேர்த்து பொன்னிறமாகும் வரை வதக்கவும். உதிர்த்து வைத்துள்ள சுறா மீனை அத்துடன் சேர்த்து ஐந்து நிமிடங்கள் கிளறவும். பின்னர் உப்பு சேர்த்து ஐந்து முதல் பத்து நிமிடங்கள் அடுப்பில் வைத்திருக்கவும். இறுதியாக நறுக்கி வைத்துள்ள மல்லித் தழை சேர்த்து பரிமாறவும்.

# அழகைக் கெடுக்கும் பருக்கள்



என்னதான் அழகாக மேக்கப் போட்டாலும், முகப்பருக்கள் அசிங்கப்படுத்துகின்றது என்ற கவலையில் இருக்கும் நீங்கள் செயற்கை மருந்துகளை தவிர்த்து, என்னென்ன உணவுகளை சாப்பிடுவதால் பருக்கள் வருகின்றது என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

அழகுக் குறிப்பு

**பால் பொருட்கள்**

பால் சம்பந்தப்பட்ட பொருட்களை அதிகமாக உட்கொண்டால், பருக்கள் அதிகமாக வரும். பருக்கள் உருவாக ஹார்மோன்கள் முக்கிய பங்கு வகிக்கிறது. செனை பசுக்களில் இருந்து எடுக்கப்படும் பாலில் தயாரிக்கப்படும் பொருட்களில் ஹார்மோன்கள் அதிகளவில் இருப்பதால் பருக்கள் அதிகம் வருகிறது.

**காபி**

சிறுநீரகச் சுரப்பியிலிருந்து மன அழுத்த ஹார்மோன்களை விடுவிக்கச் செய்வது தான் காப்பைன். இது சருமத்திற்கு தீங்கை விளைவிக்கும். மேலும் நிம்மதியான தூக்கத்தையும் இது கெடுத்து விடுவதால் பாதிப்படைந்த திசுக்களை சரிசெய்ய உடலுக்கு நேரம் கிடைப்பதில்லை. ஆகவே தூக்கமின்மையும் பரு உருவாக காரணமாகும்.

**சொக்லேட்**

பருக்கள் வருவதற்கு சொக்லெட்டும் முக்கிய பங்கு வகிக்கிறது சொக்லெட்டில் பால் பொருட்கள், சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரை மற்றும் காப்ஃபைன் உள்ளது. இவை மூன்றுமே பருக்கள் உருவாக காரணமாக இருக்கும் பொருட்கள், அதனால் இதனை அளவாக சாப்பிடுங்கள்.

# மருத்துவம்



## புற்றுநோயை கண்டு பிடிக்க புதிய வழி

மனிதனின் சிறந்த நண்பனாக விளங்கும் நாய்களுக்கு தைராய்டு புற்றுநோய்களை கண்டுபிடிக்கும் ஆற்றல் காணப்படுவதாக ஆராய்ச்சி ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனிதனின் சிறுநீரை முகர்ந்து பார்ப்பதன் மூலம் நாய்களால் 90 சதவீதம் சரியாக இந்நோயினை கண்டுபிடிக்க முடியும் என குறிப்பிட்டுள்ளனர்.

# ஆரோக்கியமான உணவு

- உணவு, அதிலும் இறைச்சிகள், கோழி வகைகள், முட்டை ,மீன் போன்றவைகளை முழுமையாக சமைக்க வேண்டும்.
- அசைவ சூப்பு வகைகள் 70c வெப்பம் வரையிலாவது நன்கு கொதிக்கும் வகை சூடாக்கப்பட வேண்டும். ஆடு கோழி போன்ற இறைச்சி சாறுகள் ரோஸ் நிறமில்லாமல் நீரைப் போல் நிறமற்றவையாக இருத்தல் அவசியம். உஷ்ணமானியை உபயோகித்தல் நல்லது.
- சமைத்த உணவைப் பறிமாறுமுன் சூடாக்குங்கள்.
- சமைத்த உணவை 2 மணி நேரத்துக்கு மேல் அறையின் சூட்டில்வைக்காதீர்.
- சமைத்த, எளிதில் கெட்டுப்டுப்போகக்கூடிய உணவை குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும்.

வைத்தியர்.கே.எல்.எம்.நக்ஃபர்
ஆயுர்வேத வைத்தியசாலை

# நீங்கள் எப்படி தூங்குவீர்கள்



மனிதனின் பழக்கவழங்கங்களை வைத்து குணத்தை நிர்ணயித்து வந்த காலம் போய் தற்போது தூங்கும் அமைப்பு வைத்து அவர்கள் எந்த குணம் என்று கண்டுபிடித்துவிடலாம்.

லண்டனில் உள்ள தூக்க மதிப்பீடு மற்றும் ஆலோசனை சேவை அமைப்பின் உறுப்பினர் மேற்கொண்ட ஆய்வில் தூங்கும் தன்மையின் அடிப்படையில் குணாதிசயங்களை கணித்துள்ளார்.

- தாயின் கருப்பையில் குழந்தை இருப்பது போன்று கை, கால்களை சுருக்கியபடி தூங்கும் பழக்கம் கொண்டவர்கள் மிகவும் சாந்தமாகவும், எளிதில் உணர்ச்சிவசப்படக் கூடியவர்களாக இருப்பர்.
- இடதுபுறமோ, வலதுபுறமோ கையை கீழே இறக்கி ஒருபக்கமாக தூங்கும் பழக்கம் கொண்டவர்கள், பிறரிடம் எளிதில் நட்பாய் பழகும் தன்மை கொண்டவர்கள். ஆனால் இப்படி தூங்கும் பழக்கம் கொண்டவர்கள் அதிகம் ஏமாறுபவர்களாக இருப்பார்கள்.
- இடதுபுறம் அல்லது வலதுபுறம் திரும்பி, கையை முகத்தின் அருகே வைத்துக் கொண்டு தூங்கும் பழக்கம் உடையவர்கள், பிறரை எதற்கெடுத்தாலும் குறை கூறுபவர்களாக இருப்பார்கள், மேலும் இவர்களுக்கு தொழில் சிந்தனை அதிகம் இருக்கும்.
- சிலர் கை, கால்களை நீட்டி நேராக நிமிர்ந்து தூங்குவார்கள், இதுபோன்று தூங்குபவர்கள் நாவடக்கம் தன்மை கொண்டவர்களாக இருப்பார்கள்.
- கை, கால்களை தாறுமாறாக நீட்டித் தூங்கும் பழக்கம் கொண்டவர்கள் பெருந்தன்மை கொண்டவர்களாகவும், பணிவான தன்மை பெற்றவர்களாவும் இருப்பர்.

# இவ்வார ராசிபலன்கள்



**மேஷம்** : பணிகளில் உற்சாகம் கொள்வீர்கள். புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும்.



**ரிஷபம்** : உறவினர் புதிய சொந்தங்களை அறிமுகம் செய்வர். வீடு, வாகனம் வாங்குகிற முயற்சி முழு வடிவம் பெறும்.



**மிதுனம்** : உடன்பிறந்தவர்களின் தேவைக்கு உதவுவீர்கள். வாகனத்தில் மித வேகம் பயணத்தை எளிதாக்கும். புத்திரர் ஆடம்பரபொருள் வாங்குவர்.



**கடகம்** : கடந்த கால நற்செயலுக்கான புகழ் தேடி வரும். உடன்பிறந்தவர் நல்அன்பு பாராட்டுவர். வாகன பயன்பாடு சராசரியாக இருக்கும்.



**சிம்மம்** : நிதானமற்ற பேச்சு வாழ்வின் பாதையை திசை மாற்றலாம். அறிமுகம் இல்லாதவருக்கு இடம்தர வேண்டாம்.



**கன்னி** :சமூகத்தில் புகழ் பெறும் எண்ணத்துடன் செயல்படுவீர்கள். புதிய வாகனம் வாங்குவீர்கள்.



**துலாம்** : செயல்களில் அதிக நேர்மை பின்பற்ற வேண்டும். ஆர்வம் நிறைந்த பேச்சு சிலரிடம் பகைமையை உருவாக்கலாம்.



**விருச்சிகம்** : மனம் புதிய பாதையில் நடைபோடும். நல்லவர்களின் ஆலோசனை கிடைக்கும். தாயின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.



**தனுசு** : அரசு சார்ந்த உதவி கிடைக்க அனுகூலம் உண்டு. தேவையின்றி உங்களை புகழ்ந்து பேசுபவரிடம் விலகுவது நல்லது. குடும்பத்தினரின் எண்ணங்களுக்கு மதிப்பு தருவீர்கள்.



**மகரம்** : பொறாமை குணம் உள்ளவர்களிடம் விலகுவது நல்லது. கண்களின் பாதுகாப்பில் உரிய கவனம் வேண்டும். தம்பி, தங்கை கூடுதல் பாசம் கொள்வர்.



**கும்பம்** : வெகுநாள் எதிர்பார்த்த விஷயங்களுக்கு தீர்வு பெற முயற்சி செய்வீர்கள். பார்வையிலும், கருத்திலும் புதிய ஒளி பிறக்கும்.



**மீனம்** : மனதில் புதிய சிந்தனை, செயல்களில் வசீகரம் ஏற்படும். நன்மைகளைப் பெற முயற்சி செய்வீர்கள். மங்களநிகழ்ச்சிக்கு அனுகூலம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## உள்ளூர் விளையாட்டு செய்திகள்

### பாடசாலையின் முதலாவது இல்ல விளையாட்டுப் போட்டி

சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஷ்ரப் வித்தியாலயத்தின் முதலாவது இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதிப் போட்டி வித்தியாலய மைதானத்தில் வெள்ளிக்கிழமை (06.02.2015) இடம்பெற்றது. சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஷ்ரப் வித்தியாலயத்தின் அதிபர் எம்.ஐ.எம்.இல்லியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதிகள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள், பொற்றோர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். இப்போட்டி, ஹிக்மா இல்லம் (நீலம்), ஸஹ்றா இல்லம் (மஞ்சள்), இல்மா இல்லம் (பச்சை) ஆகிய மூன்று இல்லங்களுக்கிடையில் நடைபெற்றது. இதில் ஹிக்மா இல்லம் 130 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் இல்மா இல்லம் 127 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் ஸஹ்றா இல்லம் 100 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.





### வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி 21.02.2015

புனித சூசையப்பர் கல்லூரியின் வருடாந்த இல்ல போட்டி கடந்த 21.02.2015 அன்று பாடசாலை மைதானத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. லோயலா, சேவியர், பேர்க்மன்ட், டீபிறிட்டோ எனும் நான்கு இல்லங்களுக்கிடையில் சூசையப்பர் கல்லூரியின் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான போட்டிகள் பாடசாலை அதிபர் மதிப்பிற்குரிய அருட்தந்தை அந்தோனி பொன்சியன் அவர்களின் தலைமையில் திரு.எஸ்.சுபைர்தீன் ஆசிரியர் அவர்களின் மேற்பார்வையுடன் இடம்பெற்றது.


இப்போட்டியில் 308 புள்ளிகளைப் பெற்று டீபிறிட்டோ அணியினர் சம்பியன் ஆகினர். மேலும் இரண்டாம் இடத்தை 299 புள்ளிகளுடன் பேர்க்மன்ட் அணியினர் பெற்றுக் கொண்டனர். மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களை முறையே சேவியர் இல்லமும் லோயலா இல்லமும் பெற்றுக் கொண்டன. பிரதம அதிதியாக திரு.பி.உதயகுமார், உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆரம்பப்பிரிவு அவர்களும் கௌரவ அதிதியாக அருட்தந்தை நித்திதாசன், பணிப்பாளர் கரிட்டாஸ் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.









### கிரிக்கட் பார்ப்பது அனைவரினதும் உரிமை

கிரிக்கெட் பார்ப்பது தமது அடிப்படை உரிமையென அசாம் மாநிலம் கௌகாத்தியில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள் அம்மாநில மேல்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். அதில் உலகக் கிண்ணத் தொடரைப் பார்ப்பது எங்களது அடிப்படை உரிமை எனக் கூறியுள்ளனர். இந்த மனுவை விசாரித்த மேல்நீதிமன்றம் சிறைக் கைதிகளுக்கு 5 நாட்களுக்குள் கேபிள் டி.வி. வசதி செய்துகொடுக்க வேண்டும் என சிறை நிர்வாகத்திற்கு உத்தரவிட்டுள்ளது. கைதிகளின் மனநிலை ஆரோக்கியமாக இருக்கவேண்டும் எனவும் கூறியுள்ளது.

### வரலாற்றுச் சாதனை

உலகக் கோப்பை போட்டியில் இலங்கை வீரர் சங்கக்காரா தொடர்ந்து 4வது சதமடித்து வரலாற்று சாதனை படைத்துள்ளார். உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் நடந்த பி பிரிவு ஆட்டத்தில் இலங்கை அணி ஸ்காட்லாந்து அணியை எதிர்கொண்டபோது. டாஸ் வென்ற இலங்கை அணி பேட்டிங்கை தேர்வு செய்தது. சங்கக்காரா தில்சன் ஜோடி ஸ்காட்லாந்து பந்துவீச்சை துவம்சம் செய்து ரன்களை குவித்தது. தில்சன் 97 பந்துகளில் 9 பவுண்டரி ஒரு சிக்சருடன் சதமடித்தார். அவரை தொடர்ந்து சங்கக்காரா 86 பந்துகளில் 9 பவுண்டரி 3 சிக்சர்களுடன் சதத்தை கடந்தார்.




### பொறுப்பு நானில்லை

இங்கிலாந்து கிரிக்கெட் அணியானது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இருந்து முதற் சுற்றோடு வெளியேற, வீரர்களே காரணம் என இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் முகாமைத் துவப் பணிப்பாளர் போல் டோவ்ன்டன் தெரிவித்துள்ளார். மேலும் தோல்விக்கு முழுமையாக அவர்களே பொறுப்பு ஏற்கவேண்டும் என கூறி, இங்கிலாந்து அணியின் தோல்விக்கான பொறுப்புக் கூறலில் இருந்து தப்பித்துள்ளார்.

### ஹிந்தியில் அசத்தும் தலைவர்



தென் ஆப்பிரிக்க அணித்தலைவர் டிவில்லியர்ஸ் "ஏ தோஸத்தி ஹம் நகின் சோடுங்கே" என்ற ஹிந்திப் பாடலை சூப்பராக பாடிக் காட்டி அசத்தினார்.

இவர் கிரிக்கெட் மட்டும் இன்றி கால்பந்து, ரக்பி, டென்னிஸ், பேட்மிண்டன் என பல விளையாட்டுகளிலும் திறமைசாலியாக விளங்குகிறார். படிப்பிலும் இவர் கெட்டிக்காரர். மைதானத்தில் இவர் பந்தை அனைத்து திசைகளிலும் அசால்டாக அடிக்கும் திறமையை பார்த்து ரசிகர்கள் இவரை ஹமிஸ்டர் 360' என்பர்.

இவர் ஒரு பேட்டியின் போது, தனக்கு மிகவும் பிடித்த நடிகர்களில் ஹிந்தி சூப்பர் ஸ்டார் ஷாருக்கானும் ஒருவர் என்று தெரிவித்துள்ளார்.

### என் ஹீரோ டோனி தான்

பாகிஸ்தானைச் சேர்ந்த முகமது பஷீர், அமரிக்காவில் உள்ள சிகாகோ நகரில் உணவகம் வைத்து நடத்தி வருகிறார். அவர் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி விளையாடும் இடங்களுக்கு சென்று வீரர்களை ஊக்குவிப்பார். பாகிஸ்தானியராக இருந்தாலும் அவருக்கு இந்திய அணியும், அணித்தலைவர் டோனியும் பிடிக்கும். இந்திய அணியை ஊக்குவிப்பதாலும், டோனி என் ஹீரோ' என்று அவர் கூறி வருவதாலும் அவர் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட் நகரில் இந்தியா, பாகிஸ்தான் இடையே நடந்த போட்டியின் போது பாகிஸ்தானிய ரசிகர்கள் என்னை திட்டினர். டோனி மீது நான் அன்பு வைத்துள்ளதால் என்னை துரோகி என்றும் அழைத்தனர் எனவும் கூறினார்.

### இறுதிப் போட்டிக்கு 4 அணிகள் தெரிவு

ஏறத்தாழ அனைத்து அணிகளும் 5 போட்டிகளில் விளையாடி உள்ளன. இதன் அடிப்படையில் ஆசியாவைச் சேர்ந்த இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய அணிகள் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன. இந்த நிகழ்வு அனைவரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது.

ஏனெனில் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து மண்ணில் ஆசிய அணிகள் சிறப்பாக விளையாடியது கிடையாது. இதனால் ஆசிய அணிகள் இறுதிப் போட்டி வரை முன்னேறும் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

### உலக கிண்ண புள்ளி விபரம்

| | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
|---|---|---|---|
| ஏ பிரிவு | நியூசிலாந்து | இலங்கை | அவுஸ்திரேலியா |
| பீ பிரிவு | இந்தியா | தென்னாபிரிக்கா | பாக்கிஸ்தான் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடி - கிழக்கிற்கும் வாருங்கள்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வருகை தமிழ் மக்களுக்கு இனிப்பாக இருந்தாலும், கிழக்கு மாகாணத்திற்கு வருகைதர செய்யமாட்டார் என்ற செய்தி கசப்பானதாகவே இருக்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு எருவில் கண்ணகி மகா வித்தியாலய வருடாந்த மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் பேசிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் உரையாற்றிய போது பயங்கரவாதச்சட்டமானது இந்த நாட்டிலே இருக்கும் வரைக்கும் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழமுடியாது.

இந்தச்சட்டத்தினை வைத்துக் கொண்டு 17

# ஈரோஸ் அரசியல் கட்சியை மீளக் கட்டியெழுப்ப முயற்சி!

திருகோணமலை மாவட்டத்தில் ஈரோஸ் அரசியல் கட்சியை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை அதன் அங்கத்தவர்கள் முன்னெடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

அரசியல் கட்சியாக இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஈரோஸ் அமைப்பின் முன்னாள் பிரதானிகள் சிலரே இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இவ்வமைப்பில் ஏற்கனவே இணைந்திருந்து தற்போது செயற்பாடற்றிருப்பவர்களை அமைப்பாளர்கள் தொடர்பு கொண்டு வருவதாகவும் மிகவிரைவில் இக்கட்சி தனக்கான வேலைத்திட்டத்தை மக்களுக்குத் தெரியப்படுத்தும் எனவும் தெரியவருகின்றது.

## திருமலைக்கு மீண்டும் இந்திரன்

திருகோணமலை மாவட்டத்திற்கான பிரதிக் காவல்மா அதிபராக திரு. வி.இந்திரன் மீண்டும் நியமிக்கப் பட்டுள்ளார்.

இப்பதவியை வகித்து வந்த கபில ஜெயசேகர மேல் மாகாணத்தின் தென்பகுதிக்குப் பொறுப்பான காவல்துறை மா அதிபராகப் பணியேற்றுள்ளார். 17

# வெளிமாவட்ட மீனவர்கள் இவ்வருடம் மட்டுமே மீன்பிடிக்க அனுமதி

(அச்சுதன்)

வெளிமாவட்ட மீனவர்களின் நாற்பத்தியெட்டுப் படகுகளை இவ்வருடம் மட்டும் மீன்பிடிக்க அனுமதிப்பது என்ற நிபந்தனையுடன் மீனவர் பிரச்சனைக்கு சுமகமான தீர்வொன்று எட்டப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை (11) குச்சவெளி பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற பேச்சுவார்த்தையில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட் மற்றும் பிரதி போக்குவரத்து அமைச்சர் எம்.எஸ் தௌபிக், மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஏ.புஸ்பகுமார குச்சவெளி பிரதேசச் செயலாளர் தயாபரன் ஆகியோருடன் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெ.ஜெனார்தனன் மற்றும் அன்வர் ஆகியோருடன் மீனவர் சங்க தலைவர்கள், மீன்பிடி முதலாளிமார்கள் ஆகியோா ஈடுபட்டு இம்முடிவு எடடப்பட்டுள்ளது.

# அத்துமீறிய இந்திய மீனவர்கள் விடுதலை

(நிக்கி தொம்சன் - மங்கள)

கடந்த மாதம் 26ம் திகதி திருகோணமலை கடட்பரப்பில் சட்டவிரோதமான முறையில் இந்திய இழுவை படகுகள் மூலம் மீன்பிடியில் ஈடுபட்டதன் காரணமாக கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 43 இந்திய மீனவர்கள் இன்று காலை 10.45 மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் 28ம் திகதியிலிருந்து விளக்க மறியலில் வைக்கப் 17





# என்னை ஏமாற்றினார் முதல்வர்



கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் உள்ளிட்ட முஸ்லிம் காங்கிரஸ் மாகாண அமைச்சர்களை ஏமாற்றியுள்ளது என கிழக்கு மாகாணத்ததின் முன்னாள் கல்வி அமைச்சர் விமல வீர திசாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

கிழக்கில் ஆட்சி அமைப்பதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர 17

# சர்வதேச நிறுவனங்களை மாகாணத்துக்கு அழைத்துவாருங்கள் - கிழக்கின் ஆளுனர்



கணவனை இழந்த பெண்கள் மற்றும் அங்கவீனமுற்றோருக்கான வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க சர்வதேச நிறுவனங்களை எமது மாகாணத்துக்குள் அழைத்து வாருங்கள் என கிழக்கின் ஆளுனர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த 11ம் திகதி காலை கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னான்டோ அவர்கள் திருக்கோணமலை மாவட்டத்தின் உள்ளூர் அரச சாரா நிறுவனங்கள், தொழிற்சங்க அமைப்புக்கள், தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்துரையாடலொற்னை நடாத்தியுள்ளார்.

ஆளுநர் தமது உரையில் நாட்டில் நிலவிய யுத்த சூழலானது இன, மத பேதமின்றி எல்லோரையும் பாதிப்படைய செய்துள்ளதாக கூறினார்.




கிழக்கின் முதலமைச்சரைத் தொண்டர் ஆசிரியர்கள் சந்தித்து தமது குறைகளை வெளிப்படுத்தியுள்ளனர். 15 வருடங்களாக வேலை செய்த 300 ஆசிரியர்களுக்கு நியமனம் கிடைக்காததை அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(நிக்கி)

# காணாமல் ஆக்கப்பட்டோரைப் பதியும் மனித உரிமை அமைப்பு

திருகோணமலை மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பதிவுகளை மனித உரிமை அமைப்பொன்று ஆரம்பித்துள்ளது.

வணக்கத்திற்குரிய வீ.யோகேஸ்வரன் அடிகளாரின் தலைமையில் இயங்கும் மனித உரிமையைப் பாதுகாப்பதற்கும் விருத்திசெய்வதற்குமான அமைப்பலேயே இப்பதிவுகள் நடைபெறுகின்றன.

நாளாந்தம் பல மக்கள் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் தகவல்களைப் பதிந்த வண்ணம் உள்ளனர்.

இத்தகவல்கள் யாவும் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் உரிய முறையில்செவ்வை பார்க்கப்பட்டுப் பொதுத்தளம் ஒன்றில் சேமிக்கப்படும் என வண. யோகேஸ்வரன் அடிகளார் தெரிவித்தார்.

இப்பொதுத்தளத்தகவல்களை அரசு உட்பட உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களும் ஐக்கிய நாடுகள் சபையும் தேவைக்கேற்பப் பயன்படுத்த முடியும் எனத் தெரிவித்த அவர் உண்மையான தகவல்களை இரட்டடிப்பின்றி இத் தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார்.

முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஓவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஓவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி,
திருகோணமலை.
0777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனி) நிறுவனத்தால் 159 A, கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து 14.03.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது